# கோகுலம்


GOKULAM

டிசம்பர் 2000 ரூ. 6/-





# சாக்லேட் பல்லுக்குக் கெடுதலா?

## ஐந்து வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்!



விடை: 1. பனியனின் கழுத்து, 2.நாயின் கண், 3. கால் கண்டு விரல், 4. கயிறு, 5. குடைக்கம்பி

## வண்ணம் தீட்டுங்கள்!







''நாயின் வாலை இழுக்காதேடா, அது கடிக்கும்.''
''போங்கப்பா... நாய் வால் எங்காவது கடிக்குமா?''

— ஆர்.ஆர். பூபதி,
கன்னிவாடி.

## பிருந்தாவனம்

## நாய் வீட்டை அடைய வழி காட்டுங்கள்!





# கோகுலம்

2000

டிசம்பர்

மலர் : 18

இதழ் : 11

## அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

**ப**ல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்பதற்கு ஏற்ப 'மாட்ச் ஃபிக்ஸிங்' விஷயத்தில் பலர் சிக்கிக் கொண்டார்கள். கிரிக்கெட் நட்சத்திரங்கள் ஒளியிழந்து உதிர்ந்தார்கள். இவர்களில் ஒரிருவர் ''ஒன்றுமே தெரியாது; அநியாயத்துக்குப் பழி சுமத்திட்டாங்க'' என்று ஒப்பாரியும் வைக்கிறார்கள். இவர்கள் போடும் அப்பாவி வேஷத்தை யாருமே நம்ப மாட்டார்கள். தங்களுக்கு மட்டுமன்றி கிரிக்கெட் ஆட்டத்துக்கும் இவர்கள் ஏற்படுத்தியுள்ள அவமானத்தை நீக்கவே முடியாது.

போதாக்குறைக்கு ஷார்ஜா இறுதி ஆட்டத்தில் 54 ஆல் அவுட் அவமானம் வேறு! வெற்றி - தோல்வி மாறி மாறி வருவது இயல்புதான். ஆனால் வெற்றிக்கான முயற்சியில் குறை வைக்கக் கூடாது. பாடுபட்டு உழைத்த பிறகு ஏற்படக்கூடிய தோல்வி பெருமிதத்துக்குரியது. வெற்றிக்கான வாய்ப்புக்களை நழுவ விடுவதும் தூக்கி எறிவதும் அவமானம். கண்டிக்கத்தக்கது.

**ப**ரீட்சைக்கு நன்றாக முயற்சி எடுத்து படித்தும்கூட சுமாரான மதிப்பெண்கள்தான் கிடைத்தது என்றால் நம்மை நாமே தேற்றிக் கொள்ளலாம், அடுத்த டெஸ்டில் இன்னும் நன்றாகச் செய்ய உறுதி பூணலாம். ஆனால் படிக்காமலேயே ஊர் சுற்றிக் கொண்டிருந்து விட்டு ஃபெயில் ஆனால் அது மன்னிக்க முடியுமா?



ஸ்ரீலங்காவின் ஆட்டத்தை ரசிக்கலாம்; ஜெயசூர்யாவின் விளாசலைப் பாராட்டலாம். ஆனால் நமது அணியினர் ஷார்ஜா இறுதிப் போட்டியில் நடந்து கொண்டவிதத்தை மன்னிக்கவே முடியாது. அந்தப் படுதோல்வியை ஜீரணிப்பது ரொம்பக் கஷ்டம்.

இருபத்தோராம் நூற்றாண்டிலாவது நமது கிரிக்கெட் புதுப்பொலிவு பெறட்டும். நேர்மையும் நன்முயற்சியும் ஆட்டத்தில் பிரகாசித்து கிரிக்கெட் ரசிகர்களின் உள்ளங்களில் சூழ்ந்துள்ள இருள் நீங்கட்டும்.

**இ**ருபதாம் நூற்றாண்டுக்கு இந்த டிசம்பர் இதழுடன் குட்பை சொல்கிறோம். அடுத்த இதழ் இருபத்தோராம் நூற்றாண்டை வரவேற்கும். அப்படி வரவேற்கும்போது, உங்கள் கோகுலம் முன்னெப்போதையும்விட அழகாகவும் சுவாரஸ்யமாகவும் விளங்கும். உங்களை ஆச்சர்யத்தில் ஆழ்த்தும்விதமாக புதிய புதிய அம்சங்கள்; வழக்கத்தைவிட அதிகமான அளவில் வண்ணங்கள்!


ஆர்வமுடன் வாங்கிப் படித்து மகிழத் தயாராகுங்கள்; உங்கள் நண்பர்களிடமும் சொல்லி வையுங்கள்!

"எல்லாம் சரிதான், இருபதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டில் கோகுலம் சுழல் கோப்பை யாருக்கு?" என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது! அடுத்த இதழில் அந்த ரகசியம் அம்பலமாகாமலா போகும்? காத்திருங்கள்!

அன்புடன்,

கி. ராஜேந்திரன்,
ஆசிரியர்.

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்.
- பாரதியார்.



நமக்கு ஏ.பி., ஏபி, ஓ என ரத்த குரூப்கள் உள்ளன. ஒரு குரூப்பை இன்னொரு குரூப்பாக மாற்ற முடியாது. ஆனால் பி குரூப் ரத்தத்தை ஓ குரூப் ரத்தமாக மாற்றக்கூடிய முறையை சீன ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

# கோகுலம் நியூஸ்!

சீனாவின் ராணுவ மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த நிபுணர்கள் இதைக் கண்டு பிடித்துள்ளனர். காபிக் கொட்டையிலிருந்து கிடைக்கும் பொருளில் இருந்து ஆல்ஃபா - காலக்ட்டோசிடேஸ் சி.டி.என்.ஏ. என்ற பொருளைச் சோதனைச் சாலையில் உருவாக்கி, அதைப் பயன்படுத்தி இச் சாதனையைப் புரிந்துள்ளனர்.

விரைவில் விலங்குகளில் ரத்த குரூப் மாற்றுச் சோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. அடிக்கடி ரத்த மாற்றுச் சிகிச்சை தேவைப்படும் அரிதான இரத்த குரூப் உடைய நோயாளிகளுக்கு இக் கண்டுபிடிப்பு வரப்பிரசாதமாக அமையும் என்று கூறப்படுகிறது.

**வண்ணப்படம்**

அமெரிக்கா 21 ஆண்டுகளுக்கு முன்பு அனுப்பிய வாயேஜர்-1, வாயேஜர் - 2 என்ற ஆய்வுக் கலங்கள் வியாழன் கோளைக் கறுப்பு - வெள்ளைப் புகைப்படங்களாக எடுத்து அனுப்பின. நீண்ட இடைவெளிக்குப் பின் காசினி என்ற விண்வெளி ஆய்வுக்கலத்தை அமெரிக்கா அனுப்பியுள்ளது. இந்த ஆய்வுக் கலம் வியாழன் கிரகத்தை வண்ணத்தில் புகைப்படம் எடுத்து அனுப்பியிருக்கிறது.

வாயுக்கள் நிரம்பிய வியாழனின் மேற்புறத் தோற்றம் 20 ஆண்டுகளாக மாறாமல் அப்படியே இருப்பதை இவ்விரு புகைப் படங்களும் காட்டுகின்றன. பூமியிலிருந்து டெலஸ்கோப் வழியாகப் பார்க்கும் போது வியாழன் எப்படி தெரிகிறதோ அப்படித் தான் இப் புகைப்படத்திலும் தெரிகிறது.

காசினி ஆய்வுக்கலம் 813 லட்சம் கிலோ மீட்டர் தொலைவிலிருந்து வியாழனைப் புகைப்படம் எடுத்துள்ளது.

**மிக மெதுவாகப் படித்தவர்!**

ஸ்டூவர்ட் பல்ட்வின் என்ற முதியவர் 28 ஆண்டுகள் படித்து அறிவியல் பட்டத்தைப் பெற்றுள்ளார். இவர் தான் உலகிலேயே மிக மெதுவாகப் படித்துப் பட்டம் பெற்றவர். இச் சாதனையைப் புரிந்த ஸ்டூவர்ட் கின்னஸ் புத்தகத்திலும் இடம்பெற்று விட்டார்.

சிங்கப்பூரில் உள்ள திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் அறிவியல் பட்டப் படிப்பு பிரிவில் 28 ஆண்டுகளுக்கு முன் சேர்ந்தார். 70 வயது முதியவரான ஸ்டூவர்ட் "படிப்பு மகிழ்ச்சி அளிக்கிறது. கற்பதை நிறுத்திக் கொள்ள விரும்பவில்லை. தொடர்ந்து எவ்வளவு காலம் ஆனாலும் சரி ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெறத் திட்டமிட்டுள்ளேன்" என்று கூறுகிறார்.

**தன்னிச்சையாகச் சுற்றும் கிரகங்கள்!**

சூரியனை (நட்சத்திரத்தை) மையமாகக் கொண்டுதான் அண்டவெளியில் கிரகங்கள் சுற்றி வரும். ஆனால் எவ்வித மையச் சூரியனும் இன்றி தன்னிச்சையாக அண்டவெளியில் 18 கிரகங்கள் சுற்றிக் கொண்டிருப்பதை ஸ்பெயின் நாட்டு வானியலாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

ஓரியான் நட்சத்திரக் கூட்டத்துக்கு

அருகே இவை காணப்படுகின்றன. கட்டுப் படுத்தும் நட்சத்திரம் (சூரியன்) எதுவுமின்றி தன்னிச்சையாகச் சுற்றிக் கொண்டிருப்பவை பாதை மாறிய கிரகங்களாகவோ, ஒளிமங்கிய சிறிய நட்சத்திரங்களாகவோ இருக்கக்கூடும் என விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். இந்த 18 கிரகங்கள் எவ்வாறு உருவாயின என்ற கேள்வி வானியல் ஆராய்ச்சியாளர்களின் மூளையைக் குடைந்து கொண்டிருக்கிறது.

### பழமையான கல்லறை


5,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த கல்லறையை இஸ்ரேல் தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். பாக்தாத் நகருக்கு தெற்கே 400 கி.மீ. தொலைவில் இந்தக் கல்லறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### பனியில் சறுக்கி சாதனை!

ஸ்லோவேனியாவைச் சேர்ந்த தாவோ கார்னிகர் என்ற மலையேற்ற வீரர், மூவருடன் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்தார். பின்பு 8,850 மீட்டர் சிகர உச்சியிலிருந்து 5,300 மீட்டர் உயரத்திலிருக்கும் கீழ்த் தள முகாமிற்கு 5 மணி நேரத்தில் பனியில் சறுக்கியபடி வந்து சேர்ந்தார். பனிச் சறுக்கு முறையில் எவரெஸ்டில் இருந்து இறங்கிய முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார் 38 வயதான தாவோ கார்னிகர்.

### டிஸ்கவரியின் நூறாவது பயணம்!

அமெரிக்காவின் டிஸ்கவரி விண்வெளி ஓடம் நூறாவது முறையாக விண்ணில் செலுத்தப்பட்டது. இதில் 7 விண்வெளி வீரர்கள் பயணம் செய்தனர். 11 நாட்கள் பயணமாகச் சென்ற விண்வெளி வீரர்கள் விண்வெளியில் நடந்தனர். விண்வெளி ஆய்வு நிலையத்தில் தங்கி ஆராய்ச்சி செய்ய நவம்பர் மாதம் விண்வெளி வீரர்கள் செல்ல இருக்கின்றனர். அவர்களுக்கான முன்னேற்பாடு பணிகளை டிஸ்கவரியில் சென்ற வீரர்கள் செய்து திரும்பியுள்ளனர்.



# கோகுலம்

## டிசம்பர் 2000

## இந்த இதழில் ...



- அன்புள்ள சிறுவர், சிறுமியரே - 1
- கோகுலம் நியூஸ் - 2
- இந்த இதழில்... - 3
- என் குழந்தைப் பருவம் - 4
- பூதங்கள் கொடுத்த பரிசு! - 9
- குறுக்கெழுத்துப் புதிர் - 13
- இராமாயணத்தில் வில்லன் யார்? (எங்கள் பள்ளியில் நடந்தது) - 14
- பிறந்த நாள் பரிசு! (படக்கதை) - 16
- நதிக்கு மரண தண்டனை! (பிருந்தாவனம்) - 18
- ஆழ்கடலில் அதிசயங்கள்! (உங்கள் நூலகம்) - 21
- தவம் செய்யப் போறேன்! - 22
- ஒற்றைக்கால் குள்ளனுக்கு எட்டுக்கை - அது என்ன? (விடுகதைப் பக்கம்) - 24
- அன்பு நெஞ்சில் பொங்கிடும்! (பாடல்) - 25
- உன் வாயிலும் மண், என் வாயிலும் மண்! - 26
- ஜோதிடனின் பேராசை! (படக்கதை) - 28
- மான் கொம்பிற்கு மருத்துவக் குணம் உண்டா? - 32
- ஓவியப் போட்டி முடிவுகள்! - 36
- சைலன்சர் முறுக்கு! (எங்கள் ஊரில் நடந்தது) - 38
- கண்டுபிடியுங்கள்! - 40
- டாக்டருக்கு நன்றி! (சார் தபால்) - 42
- கோகுலம் க்விஸ் - 43
- அழகன், செந்தில், குமரன்! (தொடர்கதை) - 44
- 'கடி'ச் சிரிப்பு - 49
- நிலாவில் காற்று இருந்ததா? - 50
- ஆளப்பிறந்தவன்! (படக்கதை) - 52
- ஆடு யாருக்குச் சொந்தம்? - 57
- கோகுலம் க்விஸ் முடிவு - 61
- மூக்கில் ரத்தம் வருவது ஏன்? (கேட்கட்டுமா டாக்டர்?) - 62
- புதிர் உலகம் - 64
- சத்தியம் தந்த பரிசு! (புராணக் கதை) - 66
- குறுக்கெழுத்துப் புதிர் விடை - 69
- சீதையைச் சிறை வைத்த இடம்! (எங்கள் ஊருக்கு வாருங்கள்) - 70
- யார் பலசாலி? - 74
- சாக்லேட் பல்லுக்குக் கெடுதலா? - 77
- பெருமை சேர்த்த ஜோடி! (விளையாட்டரங்கம்) - 79

# ஆசிரியர் கையில் என்

அந்த நாள் இன்னும் என் மனத்தில் பசுமையாக இருக்கிறது. அப்போது எனக்குப் பத்து வயது இருக்கும். எங்கள் ஊரான தென்கச்சி பெருமாள் நத்தத்தில் மின்வசதி அப்போது கிடையாது. அதனால் ரேடியோ என்ற சாதனத்தைப் பற்றி நாங்கள் கேள்விப்பட்டிருந்தோமே தவிர அது எந்த வடிவத்தில் இருக்கும்; எப்படி ஒலி எழுப்பும் என்றெல்லாம் எனக்குத் தெரியாது. கொள்ளிடக் கரையிலிருந்த எங்கள் ஊருக்குச் சாலை வழியாக வருவதானால் 15 கி.மீ. சுற்றிக் கொண்டு வர வேண்டும். சற்று விரைவாக வர வேண்டுமென்றால் கும்பகோணத்திலிருந்து 10 கி.மீ. தூரத்திலுள்ள சோழபுரம் என்ற ஊருக்கு பஸ்ஸில் வந்து பின்னர், கொள்ளிடத்தில் இறங்கி வர வேண்டும். ஆற்றில் தண்ணீர் இருந்தால் பரிசல் சர்வீஸ் இருக்கும். முழங்காலளவு தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தால் நடந்தே வந்து விடுவார்கள். இதில் விசேஷம் என்னவென்றால் காவிரியில் தண்ணீர் இருக்கிறதோ இல்லையோ, கொள்ளிடத்தில் எப்போதும் தண்ணீர் இருக்கும். இதற்குக் காரணம் ஆற்றுப்படுகையில் உள்ள ஊற்றுக்கள்தான்.

வெளியுலகச் செய்திகள் எங்களுக்குத் தெரிய இரண்டு மூன்று நாட்கள் ஆகும். அந்த நிலையில் பஞ்சாயத்து போர்டு தலைவராக இருந்த அப்பா பாட்டரியால் இயங்கும் ரேடியோ ஒன்றை வாங்கி வர இருப்பதாக எங்களிடம் சொன்னபோது காவிரி வெள்ளம் போல மகிழ்ச்சி கரை புரண்டு ஓடியது. அப்பா காலையிலேயே ரேடியோ வாங்கி வர கும்பகோணம் போய்விட்டார். மாலை நெருங்க... நெருங்க ஊரே ஆற்றங்கரையில் திரண்டது. எல்லோர் கண்களும் எதிர் கரையில். தூரத்தில் அப்பா பரிசலில் ஏறுவது தெரிந்தது. கூடவே ரேடியோவையும் பெரிய பாட்டரியையும் சுமந்து கொண்டு ஆட்கள். எங்கள் ஊர் கரையில் பரிசல் வந்தவுடன், ரேடியோ பெட்டிக்குப் பொன்னாடை போட்டு வரவேற்காத குறைதான். ரேடியோவுக்கு என்று எங்கள் வீட்டில் தனி அறை ஒதுக்கி விட்டோம். நல்ல வெல்வெட் துணி விரித்து அதன் மேல் வைத்தோம். அறை பூட்டப்பட்டது.

மாலையானால் அறையைத் திறந்து அப்பா ரேடியோவைப் போடுவார். அப்போது வீடு முழுக்க வாண்டுகள் மட்டுமல்லாமல் பெரியவர்களும் நிறைந்திருப்பார்கள். பெரும்பாலும் சிலோன்





# காதுகள்!

ரேடியோதான் வைப்பார் அப்பா. மயில் வாகனன் என்பவர் சிலோன் ரேடியோவில் அறிவிப்பாளராக இருந்தார். அவர் குரல் கணீரென்று இருக்கும். சில மாதங்களில் நேயர் விருப்பம் பகுதிக்குக் கடிதங்கள் எழுதுமளவுக்கு எனக்கு ரேடியோவுடன் நெருக்கம் உண்டாயிற்று. இன்று என் குரலை ஆயிரக்கணக்கானவர்கள் ரேடியோவில் கேட்டுப் பாராட்டும் போது, அப்பா ரேடியோ வாங்கி வந்ததும், சிலோன் ரேடியோ முதன் முதலாகக் கேட்டதும் ஞாபகத்தில் மின்னலடித்துப் போகும்.

உள்ளூர் பஞ்சாயத்துப் பள்ளியில் நான் ஐந்தாம் வகுப்பு வரைதான் படித்தேன். அங்கிருந்த மூன்று வாத்தியார்களும் என் உறவினர்கள்தான்.

ஒருமுறை ஆண்டு விழாவின் போது அரிச்சந்திரன் மகன் லோகிதாசனாக நடிக்க வைத்தார்கள். பாம்பு கடித்து இறந்த காட்சியில் நான் மேடையில் சலனமில்லாமல் படுத்திருக்க வேண்டும். ஆனால் கொசு கடித்ததால், பல்லைக் கடித்துக் கொண்டு, கொஞ்சம் கூட ஆடாமல் நவரசங்களை முகத்தில் காட்டிக் கொண்டிருந்தேன். அப்படியும் தாங்க முடியாததால் காலை கொஞ்சம் இழுத்து கொசுவிடமிருந்து தப்பித்தேன். இறந்து கிடந்தாற் போல நடிக்க வேண்டிய நான் காலை இழுத்தவுடன் பார்வையாளர் மத்தியில் ஒரே கசமுசா. என் அவஸ்தை யாருக்குத் தெரியும்? நாடகம் முடிந்தது. திரை போடப்பட்டதுதான் தாமதம், என்னை மாத்து, மாத்து என்று மாத்தி விட்டார் வாத்தியார். அன்று வாங்கிய அடியில் இன்று வரை 'மேடை' என்றால் ஒரு நடுக்கம்தான். அதே போல் ஊசி போட்டுக் கொள்வது என்றால் அழுது ஆர்ப்பாட்டம் செய்து விடுவேன். ஊரில் நோய்த் தடுப்பு ஊசி போடும் போது நான் மட்டும் தலைமறைவாகி விடுவேன்.


ரொம்ப பயந்த சுபாவம் எனக்கு. ஊரிலுள்ள பையன்களிடம் அடி வாங்கி வருவேன். ஏன் என் தம்பியே என்னை அடித்தாலும் திருப்பி அடிக்க மாட்டேன். "பாவம் வாயில்லா பிள்ளை..." என்று பெரியவர்கள் என் மேல் பரிதாபப்படுவார்கள். திரைப்பட பாடலாசிரியர் மருதகாசி எனக்கு மாமா. என்னைத் தோளில் அவர் தூக்கி வைத்துக் கொண்டு ஆற்று நீரைக் கடந்து எதிர்கரையில் உள்ள நீலத்தநல்லூரில் நடைபெறும் மாட்டுச் சந்தைக்கு அழைத்துச் செல்வார்.

இந்தியா விடுதலை பெற்ற நாள்தான் என்னைச் சிறையில் போட்டார்கள். ஆமாம்! அன்றுதான் என்னைப் பள்ளிச்

**என் குழந்தைப் பருவம்**

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

சிறையில் ஒன்றாம் வகுப்பில் சேர்த்தார்கள். இல்லை அடைத்தார்கள். சட்டையில் கொடியை மாட்டி, மிட்டாய் கொடுத்ததால் அமைதியாக வகுப்பறையில் உட்கார்ந்து விட்டேன்.



எனக்கு நினைவு தெரிந்து நான் பார்த்த முதல் படம் வன மோகினி. சோழபுரத்தில் உள்ள டூரிங் கொட்டகையில்தான் பார்த்தேன். கீழே மணல் பரப்பி வைத்திருப்பார்கள். அந்தப் படத்தில், டக், டக் கென்று மணலை கிளப்பிக் கொண்டு குதிரைகள் வரும் வேகத்தைப் பார்த்து, எங்கே நம்மீது மோதிவிடப் போகிறதோ என்று பயந்து என் மாமாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டது நினைவில் வருகிறது.

ஆறு, ஏழு, எட்டாம் வகுப்புகளை

தவறு செய்தால், காதைப் பிடித்துத் திருகி விடுவார். அவர் திருகியது போக மிச்சம் இருப்பதுதான் தற்போதைய காதுகள்.

ஆடுதுறை குமரகுருபரர் சுவாமிகள் உயர்நிலைப் பள்ளியில் படித்தேன். கஞ்சனூரில் என் மாமா இருந்தார். அவர் வீட்டில் தங்கி, பள்ளிக்குச் சென்று வந்தேன். கும்பகோணம் அருகில் சுவாமி மலை இருப்பதால், அந்தப் பகுதியில் பையன்களுக்கு சுவாமிநாதன் என்று பெயர் வைப்பது சகஜம். ஆடுதுறையில் என் வகுப்பில் நிறைய சுவாமிநாதன்கள். அதனால் குழப்பத்தைத் தவிர்க்க என் பெயருக்கு முன்னால் ஊர் பெயரான தென்கச்சியையும் போட்டு வருகை பதிவில் தென்கச்சி சுவாமிநாதன் என்று எழுதி விட்டார்கள். அந்தப் பெயர் இன்று நிலைபெற்றிருப்பதைப் பார்க்கும் போது ஆடுதுறைப் பள்ளி ஆசிரியர்களை நன்றியுடன் நினைக்கிறேன்.


ஒன்பதாம் வகுப்பிலிருந்து பள்ளியிறுதி வகுப்பு வரை கும்பகோணம் பாணாதுரை உயர்நிலைப் பள்ளியில்தான் படித்தேன். அங்கு ஆங்கிலம் போதித்தவர் கே.ஜி.கே. என்றழைக்கப்படும் கே.ஜி. கிருஷ்ணமூர்த்தி. தவறு செய்தால், காதைப் பிடித்துத் திருகி விடுவார். அவர் திருகியது போக மிச்சம் இருப்பதுதான் தற்போதைய காதுகள்.

நான் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் போதே கண்ணன், குயில் போன்ற பத்திரி

கைகளுக்குக் கதை, கவிதை எழுதி அனுப்புவேன். பள்ளி முகவரி போட்டுத் தான் அனுப்புவேன். பிரசுரத்துக்கு ஏற்காதவைகளைத் திருப்பி அனுப்பி விடுவார்கள் அல்லவா! கே.ஜி.கே. பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது அதை எடுத்துக் கொண்டு வருவார் தபால்காரர். அதை வாங்கிப் பார்க்கும் ஆசிரியர், ''படிக்கிற வயசில கதை எழுதறான்... அப்புறம் படிப்பு எப்படி வரும்?'' என்பார். காது முறுக்கல் தொடரும்.

அப்புறம் கல்லூரியில் படித்து, ரேடியோவில் வேலைக்கு வந்து, 'இன்று ஒரு தகவல்' சொல்லத் துவங்கிய சில மாதங்களில் ரேடியோ ஸ்டேஷனுக்கு ஒரு கடிதம் வந்தது. 'யாரோ ஒரு மகான் சொல்கிறாரே 'இன்று ஒரு தகவல்', அது மிகவும் சுவையாக இருக்கிறது. அவரைச் சந்திக்க விருப்பம்' என்று கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. எழுதியிருந்தவர் எனது ஆசிரியர் கேஜி.கேதான். அதைப் படித்த போது என் கால்கள் பூமியிலேயே இல்லை. அப்புறம் கும்பகோணத்தில் அவரைச் சந்தித்தபோது, ''படிக்கும் போது என் காது உங்கள் கையில், இப்போது பார்த்தீர்களா உங்கள் காதுகளுக்கு என் குரல் நெருக்கமாகி விட்டது'' என்றேன் நகைச்சுவையாக. என் வாழ்க்கையில் ஏதாவது நான் உயர்ந்திருக்கிறேன் என்றால் அது கே.ஜி.கே போன்ற ஆசிரியர்கள் போட்ட அடித்தளம் காரணமாகத்தான் என்று நிச்சயம் சொல்லலாம்.

**எ**ன் தந்தைக்கு என்னைக் கல்லூரிப் படிப்பு படிக்க வைக்க விருப்பம் இல்லை. காரணம், படித்து விட்டு வெளியூரில் வேலை கிடைத்தால் ஊரில் விவசாயத்தைக் கவனிக்க ஆள் இல்லாமல் போய் விடுமே என்ற கவலைதான். டாக்டராக வேண்டும் என்பது என் விருப்பம். தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தும் அங்கு என்னைச் சேர்க்கவில்லை. விவசாயத்துக்கு உதவியாக இருக்கும் என்று என்னைக் கோவை விவசாயக் கல்லூரியில் சேர்த்தார் தந்தை. பள்ளியில் படிக்கும் போது என் தந்தை, ''டேய்... எப்போதும்



உன்னை விட புத்திசாலிப் பையன்களோடு பழகணும்... தெரியுதா?'' என்று சொல்வார். உடனே நான், ''அது சரி... நான் என்னை விட புத்திசாலிப் பையனோடு பழகினால் என்னை விட முட்டாள் யாரோடு பழகுவான்? அவனுக்கு என் போன்ற ஒரு புத்திசாலி தேவைப்படாதா?'' என்பேன். நான் வேலைக்குப் போகத் துவங்கிய நாட்களில் கூட, சிறு வயதில் இவ்வாறு நான் கேட்டதை மற்றவர்களிடம் வியப்போடு சொல்லிக் காண்பித்துக் கொண்டிருந்தார் அப்பா.

சந்திப்பு : **ப்ரியன்**

# உள்ளங்கையில் ஓட்டை!

**உ**ங்கள் உள்ளங்கையில் ஓட்டை போட்டு, அதன் வழியே நீங்கள் காட்சிகளைப் பார்த்தால் எப்படி இருக்கும்? உள்ளங்கையில் ஓட்டை என்றதும் பயந்து விடாதீர்கள். இதோ நீங்களே சுலபமாகச் செய்து பார்த்து விடாலம்.


1. ஒரு பேப்பரை எடுத்துச் சுருட்டிக் கொள்ளுங்கள். (30 செ.மீ. நீளம் இருக்க வேண்டும்).

2. தலையை நேராக வைத்து ஏதாவது பொருள் அல்லது மனிதரைப் பாருங்கள்.

3. பேப்பர் உருளையை எடுத்து ஒரு கண்ணில் வைத்துப் பார்வையைச் செலுத்துங்கள்.

4. இன்னொரு கையை எடுத்து உருளையில் பாதி தூரத்திற்கு வைத்து (பக்கவாட்டில்) உள்ளங்கையை விரித்து விடுங்கள்.

5. இனி இரு கண்களாலும் பாருங்கள்.



உள்ளங்கைக்குள் உருவம் தெரிகிறதா? இது எப்படி? பொதுவாக இரண்டு கண்களாலும் ஒரு காட்சியைப் பார்ப்போம். நமது மூளை ஒவ்வொரு கண்ணிலிருந்தும் காட்சியை எடுத்து ஒன்றாக்கி ஒரே காட்சியாகக் காட்டுகிறது. ஆனால் இந்த ட்ரிக்கில் ஒரு கண் உருளையின் வழியாகவும் இன்னொரு கண் உள்ளங்கையையும் பார்க்கிறது. இந்த இரண்டு காட்சியையும் மூளை ஒன்றாக்க, உள்ளங்கையில் ஓட்டை தெரிகிறது!

கோவிந்தன், கோபாலன் இருவரும் உயிர் நண்பர்கள். கோவிந்தன் எப்போதும் எல்லோருக்கும் நன்மையே செய்பவன். ஆனால் ஏழை. கோபாலன் பெரிய வியாபாரி, பணக்காரன். ஆனால் ஏகப்பட்ட தகிடுதத்தங்கள் செய்பவன். எச்சிற் கையால் ஈயையும் விரட்ட மாட்டான். எதைச் செய்வதானாலும் இதில் எனக்கென்ன லாபம் என்று யோசிப்பவன்.

அப்படியானால் இருவரும் எப்படி நண்பர்களானார்கள் என்று யோசிக்கிறீர்களல்லவா? வெளியூர் சென்று திரும்பிய கோபாலன் வண்டி குடை சாய்ந்து விழுந்து கிடக்க, உரிய நேரத்தில் அவனைக் காப்பாற்றினான் கோவிந்தன். அது முதல் இருவரும் நண்பர்களானார்கள்.

"கோவிந்தா! இப்படி இருந்தால் நீ முன்னேற முடியாது! என் கணக்குகளை நீ பார்த்துக் கொள். நல்ல சம்பளம் தருகிறேன்" என்றான் ஒருநாள் கோபாலன்.

"பொய் புரட்டுகளில் ஈடுபட என் மனம் ஒப்பவில்லை. நான் மனசாட்சிக்கு மிகவும் பயந்தவன். என்னால்



# பூதங்கள் கொடுத்த பரிசு!

முடிந்த உதவிகளைப் பிறருக்குச் செய்து நல்லவனாக வாழத்தான் ஆசைப்படுகிறேன்" என்று கோபாலனிடம் தீர்மானமாகச் சொன்னான் கோவிந்தன்.

"சரி! நாமிருவரும் முன்பின் தெரியாத மூவரிடம் அபிப்ராயம் கேட்போம். மூவரில் ஒருவர் உன் கொள்கையை ஆதரித்தாலும் நான் தோற்று விட்டதாக ஒப்புக் கொள்கிறேன்" என்றான் கோபாலன்.

"எதற்காக இப்படியொரு போட்டி?" என்று கேட்டான் கோவிந்தன்.

"என்னுடைய நாற்பது ஏக்கரா நிலத்துக்கு நடுவே உன்னுடைய ஒரு ஏக்கரா நிலம் இருக்கிறது. அதை விலைக்குக் கேட்டாலும் பூர்வீகச் சொத்து என்று தர மறுக்கிறாய்! அது கிடைத்தால் மொத்தமாக ஒரு ஜமீன்தாருக்குக் கணிசமான தொகைக்கு விற்று விடுவேன். நான் வென்றால் எனக்கு அந்த நிலத்தைப் பரிசாகத் தந்து விட வேண்டும். நீ ஜெயித்தால் நாற்பது ஏக்கராவையும் உனக்குத் தந்து விடுகிறேன்" என்றான் கோபாலன். இனிமேல் பின்வாங்கினால் கோழை என்ற பட்டம் கிடைக்கும் என்று எண்ணி சம்மதித்தான் கோவிந்தன்.

இருவரும் ஊர் எல்லை தாண்டி நடந்தனர். எதிரே ஒரு பார வண்டி வந்தது. அவரிடம் கேட்கலாம் என்று இருவரும் முடிவெடுத்தனர்.

"ஐயா! எங்களுக்குள் ஒரு குழப்பம்! நன்மை செய்தால் முன்னேற்றமடையலாம் என்கிறான் இவன். பொய், புரட்டு இல்லாமல் வாழ்க்கையில் ஜெயிக்க முடியாது என்பது என் கொள்கை! உங்கள் அபிப்ராயம் என்ன?" என்று கேட்டான் கோபால்.

"உங்க சினேகிதருக்கு அனுபவம்

**ஆர். மாலதி**



இல்லே. தகிடித்தனம் போடாம ஒரு தொழிலிலேயும் லாபம் பார்க்க முடியாது. பொருளாதாரத்துல எதிர் நீச்சல் போடறது வியாபார தந்திரம். வெள்ளம் போகிற போக்கிலே போனா மூழ்கிடுவோம். நல்லது செய்கிறவனுக்கு அசட்டுப் பட்டம்தான் கிடைக்கும்'' என்று கூறிவிட்டுப் போனார் அவர்.

"பார்த்தாயா! என் லட்சியமே சிறந்தது" என்று மீசையை முறுக்கி விட்டுக் கொண்டான் கோபாலன்.

கோவிந்தன் எதுவுமே பேசவில்லை!

கதர்ப் பையோடு எதிர்ப்பட்ட விவசாயியிடம் தங்கள் வினாவை வைத்தனர் நண்பர்கள்.

"எங்கேங்க நியாயமா, உண்மையா நடந்தா காலம் தள்ள முடியுது? காலத்துக்கேத்த மாதிரி நாமளும் மாறிக் கொள்ள வேண்டியதுதான்! புதையலைக் கொண்டு போய் ராஜாகிட்டே கொடுத்தா ஒரு பானைதானா கிடைச்சதுன்னு நம்மளையே சந்தேகப்படுவான்'' என்றார் அவர்.

"அப்பாடி! நிலம் எனக்குக் கிடைச்ச மாதிரிதான்" என்று பூரித்தான் கோபாலன்.

'இன்னும் ஒருவர் பாக்கி' என்றபடி நடந்தான் கோவிந்தன்.

ஆசிரியர் ஒருவரிடம் கேள்வியைக் கேட்டனர். "இது கலியுகம். கொஞ்சம் அசந்தா மாணவன் எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துடுவான். அதனாலே நாலு காசு வர்ற வழியைத்தான் நானும் கடைபிடிக்கிறேன். தொண்டு, சேவை என்கிறதெல்லாம் வெறும் வேஷம்" என்று சொல்லி விட்டுப் போனார் அவர்.

நிலம் கோபாலின் கைக்கு மாறியது. "இப்போதும் உன் மனம் மாறவில்லையா?" என்று கேட்டான் கோபால்.

"அது எப்போதும் மாறாது. சிமெண்ட், செங்கல், மணல், மரம், இரும்பு, கூரை இப்படி கட்டும் பொருட்கள் மாறுபடலாம். ஆனால் மொத்தமாக அதற்குப் பெயர் கட்டடம். என்னு



டையது இரும்புக் கட்டடம்'' என்று சொல்லி விட்டு சம்பாதித்து வருவதாகச் சொல்லி வெளியூர்



புறப்பட்டான்.

அவன் நிலை கண்டு நல்லவர்கள் வருந்தினர். தொலை தூரம் போக விரும்பி நடந்தான். ஒருநாள் இரவு ஒரு அடர்ந்த காட்டில் தங்கினான். சாய்வாக இருந்த மரக்கிளையில் படுத்து உறங்கினான்.

நள்ளிரவில் நான்கு பூதங்கள் அந்த மரத்தடியில் கூடின. பயத்தால் கோவிந்தனுக்கு உறக்கம் வரவில்லை. ஒரு பூதம், "நீ என்ன செய்தாய்?'' என்று கேட்டது.

''குதிரையிலிருந்து ஒருவனைத் தள்ளி காலை முடமாக்கினேன்'' என்றது இன்னொன்று.

"பூ, இவ்வளவுதானா? இந்த மரத்து இலையைக் கசக்கி ஒரு வாரம் கட்டினால் முடம் நீங்கி விடும்.''

மற்றொரு பூதம் "நீ செய்ததைச் சொல்'' என்றது.

"நான் ராஜா மகளைக் குருடாகப் பிறக்கச் செய்தேன்'' என்று பீற்றிக் கொண்டது அந்தப் பூதம்.

"இதற்கா இத்தனை அலட்டிக் கொள்கிறாய்! இந்த இலைச் சாற்றை கண்களில் ஒரு வாரம் விட்டால் கண் பார்வை கிடைத்து விடுமே!''

இதைக் கேட்ட மூன்றாவது பூதம், ''நான் செய்தது பிரமாதமான வேலையாக்கும்! ஒருவன் காதை டமாரச் செவிடாக்கி விட்டேன். மற்றவர் பேசுவது புரியாமல் முழிப்பது மகா அவமானமாக்கும்'' என்றது.

''சும்மா அலட்டாதே! இந்த மரத்து இலையின் சாற்றை மூன்று சொட்டு விட்டால் காது மகா கூர்மையாகி விடும்'' என்றது வேறொரு பூதம்.

"அப்போ நீ செய்ததைச் சொல்! அசாத்தியமானதா என்று நாங்கள் தீர்மானிக்கிறோம்'' என்றது ஒரு பூதம்.

"ஒருவனால் நடக்க முடியாமல் போகலாம். பார்க்க, கேட்க முடியாதபடி ஆகலாம். ஆனால் தன் எண்ணங்களை, ஆசைகளைச் சொல்ல முடியாதபடி போவதுதான் மகா கொடுமை. நான் சிலரை ஊமையாக்கி இருக்கிறேனாக்கும்!'' என்றது நாலாவது

பூதம்.

"இந்த மரத்தின் பட்டைகளைப் பொடி செய்து பத்து நாட்கள் கொடுத்தால் பேச்சு வந்து விடுமே" என்று மற்ற மூன்றும் கோரஸ் பாடின.

நான்கும் 'தான் செய்ததே பெரிய துன்பம்' என்று சண்டையிட்டுக் கொண்டன.

அப்போது ஒரு பூதம் மரத்தின் மேல் ஒடுங்கிக் கிடந்த கோவிந்தனைப் பார்த்தது.

"ஏ! மனிதா! எங்கள் வழக்குக்குச் சரியான தீர்ப்புச் சொல்" என்று கூச்சலிட்டது.

கோவிந்தன் மரத்திலிருந்து கீழே இறங்கினான். வழக்கை நன்றாக விசாரித்தான்.

"நான் எது சொன்னாலும் ஏற்றுக் கொள்வீர்களா? என்னை எதுவும் செய்ய மாட்டீர்களே!" என்று பலமுறை கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டான்.

பின்னர் ஒரு பூதத்திடம், "உன் திறமையை மற்ற மூவரிடமும் காட்டு" என்றான். அது போல நான்கு பூதங்களிடமும் சொல்ல, ஒவ்வொரு பூதமும் மூன்று குறைகளுடன் தடுமாறின. கண் மட்டும் தெரிந்த பூதம் இலையைக் கசக்கலாம் என்று போயிற்று. ஆனால் கைகள் இயங்கவில்லை! தன்னுடைய குறையை மற்றவர்களுக்குச் சொல்லவும் முடியாமல், பிறர் பேசுவதைக் கேட்கவும் முடியாமல் கஷ்டப்பட்டது.

வாய் மட்டுமே பேச முடிந்த பூதம், "யாராவது என் கைகளை, காதுகளை, கண்களை உயிர்பெறச் செய்யுங்களேன்!" என்று ஓலமிட்டுக் கொண்டிருந்தது.

காது மட்டுமே கேட்ட பூதமும் கைகள் மட்டுமே உணர்வு பெற்ற பூதமும் வேறு விதமாகப் புலம்பிக் கொண்டிருந்தன.


"சரி! உங்கள் அனைவரையும் குணமாக்குகிறேன். இனிமேல் எவருக்கும் கெடுதல் செய்ய மாட்டீர்களே! இந்த இடத்தை விட்டும் போய் விட வேண்டும்" என்று நிபந்தனை விதித்தான் கோவிந்தன்.

காது மட்டும் கேட்ட பூதம் தலையசைத்தலின் மூலம் தன் ஒப்புதலைத் தெரிவித்தது. வாயுள்ள பூதம் "எல்லோர் சார்பிலும் நான் சம்மதம் சொல்கிறேன். இனிமேல் எங்களால் யாருக்கும் தீங்கு நேரிடாது" என்றது.

மடமடவென்று பச்சிலையைப் பறித்தான் கோவிந்தன். ஒவ்வொரு இலையின் நடுவிலும் முட்கள் இருந்தன. ஆனாலும் கசக்கிச் சாறெடுத்து மருத்துவம் பார்த்ததில் பூதங்கள் குணமடைந்தன.

"மனிதா! சிறிது நேரத்தில் நாங்கள் செய்தது எத்தனை பெரிய கொடுமை என்று புரிந்து கொண்டோம். இனிமேல் எங்களால் யாருக்கும் துன்பம் வராது. நாங்கள் இந்தப் பக்கமே வர மாட்டோம். எங்களின் பரிசாக இதை வைத்துக் கொள்" என்று ஒரு பொன் முடிப்பைக் கொடுத்துச் சென்றன.

கோவிந்தன் அந்தப் பொருளைக் கொண்டு ஒரு மருத்துவமனை கட்டினான். அந்த மரத்தின் இலைகளைக் கொண்டு அங்கஹீனர்களைக் குணப்படுத்தி பணமும் புகழும் சம்பாதித்தான்.



100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு!

கோவை, நீலகிரி, ஈரோடு, சேலம் மாவட்ட வாசகர்களுக்கான போட்டி. இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் வழங்க இருக்கிறோம். போட்டியில் கலந்து கொள்வதுடன் விரைவில் அனுப்பி வைப்பதிலும் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த மாதப் போட்டி :

**கல்வி சம்பந்தப்பட்ட பொன் மொழிகள்**

இந்த மாதத்துடன் மேற்கண்ட மாவட்டங்களுக்கான போட்டி நிறைவு பெறுகிறது. அடுத்த மாதம் எந்தெந்த மாவட்டங்களுக்கு? காத்திருங்கள். பரிசை வெல்லுங்கள்!



### இடமிருந்து வலம்

1. இந்த ஒலிம்பிக்ஸில் பதக்கப் பட்டியலில் நான்காவது இடத்தைப் பிடித்துள்ள நாடு (6)

5. காயின் அடுத்த பருவம்(2)

8. காடு (3)

9. எல்லா உயிர்களிடத்திலும் இது காட்ட வேண்டும் (3)

10. இது இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்பது பொன்மொழி (3)

11. ரத்தம் என்பதை இப்படியும் அழைக்கலாம் (3)

14. புலி, சிங்கம் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவை. இது வீட்டுப் பிராணி (2)

### வலமிருந்து இடம்

4. வலி, துன்பத்தை முதலில் வெளிக்காட்டும் உறுப்பு (2)

6. பழைய ரொட்டியில் இது வளரும் (3)

13. எரித்த விறகிலிருந்து இது கிடைக்கும் (2)

16. பாவேந்தர் என அழைக்கப்பட்டவர் (6)

### மேலிருந்து கீழ்

1. மாதங்களில் ஒன்று. நமக்குச் சுதந்தரம் கிடைத்த மாதம் (4)


2. நட்சத்திரங்களில் ஒன்று (3)

3. முனிவர்கள் மழை வேண்டி ______ நடத்தினார்கள் (3)

4. கர்ணன் பிறக்கும்போதே குண்டலம், ______ இருந்தன (4)

7. எது மறந்தாலும் இது மறக்கக்கூடாது. (3)

12. யானையைப் பராமரிப்பவர் (3)



### கீழிருந்து மேல்

14. மரங்களில் ஒன்று. முதல் எழுத்து மலரையும் அடுத்த மூன்று எழுத்துகள் அரசு என்பதைக் குறிக்கும்படி ஒலிக்கும். (4)

15. ஹரி இவருக்குப் பேரன். அப்படியென்றால் இவரை ஹரி எப்படி அழைப்பான்? (3)

16. சிவனின் மனைவி (4)

— அ. ஹாஜா நூருல்லா,
பதினோராம் வகுப்பு,
ஹமீதியா மேல்நிலைப்பள்ளி, திருக்களாச்சேரி.

# குறுக்கெழுத்துப் புதிர்

விடை: 69ம் பக்கம்







# இராமாயணத்தில் வில்லன் யார்?

## எடுக்கலாமா?

எங்கள் தமிழாசிரியர் மிகவும் அன்பாக நடந்து கொள்வார். தவறு செய்பவர்களைக் கூட அடிக்காமல், திட்டாமல் திருத்துபவர். அன்று முதல் பாட வேளை தமிழ். வகுப்பிற்குள் நுழைந்த ஆசிரியர், "என்னப்பா, எல்லோரும் வந்துட்டீங்களா? வருகை பதிவேட்டை எடுக்கலாமா?" என்றார். குறும்புக்கார மாணவன் ஒருவன், "ஏன் சார், எல்லோரும் சேர்ந்து எடுக்கும் அளவிற்கு அது என்ன அவ்வளவு பெரிசாகவா இருக்குது?" என்றான். எங்களால் சிரிப்பை அடக்க முடியவில்லை. ஆசிரியர் இதற்காவது கோபிப்பார் என்று எதிர்பார்த்த எங்களுக்கு ஏமாற்றமே! ஆசிரியரும் சேர்ந்து கொண்டார் சிரிப்பில்.

– மு. கந்தவேல், தாரமங்கலம்.


## ஏன்?


உடற்கல்வி பாட வேளை. உடற்கல்வி ஆசிரியர் ஒரு கோடு போட்டு, "ஓட்டப் பந்தயத்தில் சேருகிறவர்கள் இந்தப் பக்கமும், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதலில் சேருகிறவர்கள் அந்தப் பக்கமும் நில்லுங்கள்" என்றார். இரண்டு பக்கமும் மாணவர்கள் நின்றார்கள். ஒரே ஒரு மாணவன், மட்டும் கோட்டிற்கு இந்தப் பக்கம் ஒரு காலும் அந்தப் பக்கம் ஒரு காலும் வைத்துக் கொண்டு நின்றான். ஆசிரியர் அவனைக் கூப்பிட்டு, "ஏன் இப்படி நிற்கிறே?" என்றார். அவனோ, "சார்! நான் ரெண்டு விளையாட்டிலும் இருக்கேன்" என்றான். ஆசிரியர் யோசித்து விட்டு, "ஏதாவது ஒன்றில் நில். போட்டியின் போது ரெண்டிலேயும் கலந்துக்கலாம்" என்றார்.

– ஆர். பாலகுமார், எட்டாம் வகுப்பு, மாடர்ன் மெட்ரிக் பள்ளி, செம்பனார் கோவில்.

## கம்பர் எங்கே?

தமிழாசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது, "இராமாயணத்தில் வில்லன் யார்?" என்று கேட்டார். குறும்புக்கார மாணவன் ஒருவன், "இராமர்






தான் சார்'' என்றான். ஆசிரியர் திடுக்கிட்டுப் பார்த்தார். "ராமர் கையில்தானே வில் இருக்கு. அப்ப அவர்தானே வில்லன்" என்றான். உடனே ஆசிரியர், "கம்பர் உன்னை உதைக்கப் போகிறார்" என்றார். "கம்பர் எங்கே சார் இருக்கிறார்?" என்றான் அவன். "நான்தான் கம்பர். வில் வைத்திருப்பவன் வில்லன் என்றால் கம்பு வைத்திருப்பவன் கம்பன்தானே'' என்று கூறியபடி பிரம்பைத் தூக்கினார். உடனே அவன் மன்னிப்புக் கேட்க ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்து விட்டோம்.

**– அ. பேச்சியப்பன், ராஜபாளையம்.**

## திரும்பச் சொல்!

இயற்பியல் பாடத்தை நடத்திக் கொண்டிருந்தார் ஆசிரியர். வெளியில் மழை பெய்து கொண்டிருந்தது. எனக்குப் பின்னால் அண்ணாமலை, ராமு, விவேக் அமர்ந்திருந்தனர். அண்ணாமலை மட்டும் பாடத்தைக் கவனிக்காமல் மழையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். இதைக் கவனித்த ஆசிரியர், "ராமு, அண்ணாமலையைத் திரும்பச் சொல்" என்றார். உடனே அவன் எழுந்து, "அண்ணாமலை" என்று திருப்பிச் சொன்னான். எங்களுக்குச் சிரிப்பு வந்து விட்டது. ஆசிரியருக்கோ பயங்கர கோபம் வந்தது. "அண்ணாமலை வேடிக்கை பார்க்கிறான்னு திரும்பச் சொன்னால், நீ இப்படி பண்ணறே. அப்ப நீயும் கவனித்த மாதிரி நடிச்சிட்டிட்டுருந்திருக்கே?" என்றார். இருவரும் மன்னிப்புக் கேட்டனர்.

**– மா. மணி, பன்னிரண்டாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, செந்துறை.**




## புது மாணவன்

அன்று முதல் பாட வேளையே அறிவியல். ஆசிரியர் மனிதனின் உடலமைப்பைப் பற்றி விளக்குவதற்காக எலும்புக் கூடு கொண்டு வந்திருந்தார். வருகை பதிவேட்டை எடுத்து முடித்தார். ஒரு குறும்புக்கார மாணவன் எழுந்து, "சார்! புதுசா வந்திருக்கிற மாணவனின் பெயர் விடுபட்டு விட்டது" என்றான். "புதுசாவா? ம்... யார்? எல்லாம் பழைய முகங்களா தெரியுதே" என்றார் ஆசிரியர். "புது மாணவனுக்கு முகம் தெரியாது; எலும்புதான் தெரியும்" என்று எலும்புக்கூட்டைக் காட்டினான் அவன். "காலையில் சுறுசுறுப்பா பாடம் நடத்தலாம்னு நினைச்சேன். இப்படி பிளேடு போட்டால் என்ன செய்வது?" என்றார் ஆசிரியர்.

**– ந. துரை, வெள்ளையாம்பட்டு, விழுப்புரம்.**

# பிறந்த நாள் பரிசு!



கதை : எம். ஹரிணி, திருச்சி.

படம் : மகேஸ்








மீனா, கீதா, ராணி எல்லாம் ஆளுக்கொரு பரிசு கொடுக்கப் போறாங்க. நான் என்ன கொடுப்பது?
பரிசா? ம்... சரி ஏற்பாடு பண்ணறேன்.
மறு நாள் மாலை -
மஞ்சு ரெடியா? இந்தா நீ கொடுக்க வேண்டிய பரிசு.
என்னம்மா மாங்கன்று தர்றீங்க?
வேற வாங்க முடியலைம்மா. ஆனால் இந்தப் பரிசைத்தான் எல்லோரும் பாராட்டுவாங்க.
சரிம்மா வரேன்.
ப்ரியா, பிறந்த நாள் வாழ்த்துகள். என் பரிசு.
தோட்டக்காரர் மகள்னு காட்டிட்டா.
பிறந்த நாளுக்குக் கொடுக்கிற பரிசைப் பார்.
ஏன் மஞ்சு இப்படி பண்றே?
எதுக்கும்மா, இப்படி பேசறீங்க? மற்ற பரிசுகள் சிறிது காலத்திற்குத் தான் நிலைக்கும். ஆனால் இந்த மாங்கன்று பல வருஷங்களுக்குப் பயன் தரும்! அன்பு தான் முக்கியம்.
மன்னிச்சிடு மஞ்சு.
பரவாயில்லை.
வாங்க சாப்பிடலாம்.

# பிருந்தாவனம்

# நதிக்கு


**வ**ளையத்தில் சாவியை மாட்டும் வழக்கத்தை முதன் முதலில் ஏற்படுத்தியவர் கள் ரோம் நாட்டினர். திருமணத்தின் போது தன் தகுதிக்கு ஏற்ப உலோகத்தில் வளையம் செய்து, அதில் சாவியை மாட்டி, மணமகன்



மணமகளிடம் கொடுப்பான். அந்த வளை யத்தில் 'என் வீடு, கௌரவம் இவற்றின் சாவியை உன்னிடம் அளிக்கிறேன்' என்று எழுதப்பட்டிருக்கும்.


– உலகநாடுகளின் சுவையான செய்திகள் நூலிலிருந்து
– டி. எஸ். பாலு, சென்னை.

**எ**லும்பு இல்லாத உயிரினங்களில் எறும்புகளே பலமும் சக்தியும் வாய்ந்தவை! சோதனைக்காக பல உயிரினங்கள் மீது அணுசக்தியைப் பாய்ச்சிப் பார்த்தனர். அப் போது எறும்புகள் தவிர மற்ற உயிரினங்கள் யாவும் இறந்து போக, எறும்புகள் மட்டும்



சாகவில்லை! எறும்புகள் தன் உடல் எடை யைப் போல் ஐம்பது மடங்கு எடை உள்ள பொருளை இழுத்துச் செல்லும் ஆற்றல் பெற் றவை!


– பி. சுசீலா,
உடுமலை.



**எ**ந்த உலோ கத்தையும் உருக்கி அத் திரவத்தில் அதன் திட வடிவி லான உலோகத் துண்டினைப் போட் டால் அது உடனே மூழ்கி விடும். எப் பொருளுக்கும் திட நிலை ஒப்படர்த்தி அதன் திரவ நிலை ஒப் படர்த்தியைக் காட்டிலும் அதிகம். ஆனால் பனிக்கட்டியும் தண்ணீரும் இதற்கு விதி விலக்கு. பனிப் பிரதேசங்களில் ஆறு, கடல் போன்றவற்றில் உறைதல் அடித்தளம் வரை நடைபெறுவ தில்லை. உயிரினங்கள் வாழ்வதற்கு இவ் விதி விலக்கே துணைபுரிகிறது.

– எஸ். சபிதா, ஐந்தாம் வகுப்பு,
ஆர்.சி. நடுநிலைப்பள்ளி, தூத்துக்குடி.

**நா**சித் துவாரங்கள் இரண்டிலும் ஏக காலத்தில் எப்போதும் மூச்சோட்டம் நடை பெறுவதில்லை. சிறிது நேரம் வலது துவா ரத்திலும், சிறிது நேரம் இடது துவாரத்திலும்



சிற்சில சமயங்களில் இரண்டு துவாரங் களிலும் நடக்கும். வலது துவாரத்தில் ஓடும் மூச்சை சூரிய கலை என்றும் இடது துவார மூச்சை சந்திர கலை என்றும் கூறுவர். சூரியகலை உடலுக்கு வெப்பமும் சந்திர

# மரண தண்டனை!

கலை குளிர்ச்சியும் அளிப்பது.

– எஸ். மோகன்ராஜ், சீர்காழி.

ராஜஸ்தானில் உள்ள பிகானிரில் கராய் மா கோயில் என்று ஒன்றுள்ளது. பாடிப் பிழைக்கும் சரண் வகுப்பினருடைய குலதெய்வம் இது. அதன் பளிங்கு முற்றத்தில் ஆயிரக்கணக்கான எலிகள் ஓடி விளையாடிக் கொண்டிருக்கும். சரண் ஒருவர் இறந்து விட்டால் அவர் எலியாக மறு பிறவி யெடுத்து இக் கோயிலுக்கு வருவதாகவும், ஒரு எலி இறந்து விட்டால் சரண் ஆகப் பிறவி எடுப்பதாகவும் இவர்களால் நம்பப் படுகிறது.




கோயிலில் மண்டியிட்டு வணங்கும் ஒருவர் மீது எலி ஏறினால் எதிர்காலத்தில் அவர் பெரிய கவிஞராக வருவாராம்! யாருடைய காலிலாவது மிதிபட்டு ஒரு எலி செத்து விட்டால் அப் பாவத்தைப் போக்க அந்த எலியின் எடைக்குச் சமமான வெள்ளியைக் கோயிலுக்குக் காணிக்கை யாகச் செலுத்த வேண்டுமாம்.

– அதிசய உண்மைகள் நூலிலிருந்து


– ஜி.கே.எஸ். மூர்த்தி,
கோபிசெட்டிபாளையம்.


ஆப்பிரிக்கக் காடுகளில் யானையைக் கொன்று தின்னும் எறும்புகள் உண்டு. இந்த எறும்புக் கூட்டம் யானையின் தந்தத்திலிருந்து தன் படையெடுப்பை ஆரம்பிக்கும். தந்தத்தில் உணர்ச்சி மிகுந்த பாகத்தில் கடிக்கும் போது வலி தாங்காமல் மதம் பிடித்து ஓடி தப்ப முயற்சிக்கும் யானை. ஓடும் நீரிலோ – சதுப்பு குழிகளிலோ இறங்கினால்தான் பிழைக்க முடியும். இந்த எறும்புகளின் பெயர் டிரைவர்ஸ் எனப்படும்.



– சிவபெருமான், குமரி மாவட்டம்.

பாரசீக மன்னன் சைரஸ், ஜின்டெஸ் ஆற்றைக் குதிரை மீது கடந்து செல்லும் போது குதிரை ஆற்றில் மூழ்கி இறந்து விட்டது. தன் அருமைக் குதிரையைச் சாகடித்த நதிக்கு மரண தண்டனை விதித்தான் மன்னன். அதை எப்படி நிறைவேற்றினான் தெரியுமா? 360 கால்வாய்களை வெட்டி ஆற்று நீரை வடியச் செய்தான். ஆறு வறண்டு விட்டது. காலப்போக்கில் கால் வாய்கள் தூர்ந்து போக, மீண்டும் ஆற்றில் நீர் ஓட ஆரம்பித்தது. இப்போது ஈராக்கில் உள்ள டயாலா நதிதான் அது.





– அதிசய உண்மைகள் ஐநூறு நூலிலிருந்து


– ஜி.கே.எஸ். மூர்த்தி,
கோபிசெட்டிபாளையம்.

● ஒட்டகம் 15 மணி நேரம் தொடர்ந்து நடக்கும்.

● காஸ்பியன் கடல் இரு நாடுகளில் உள்ளது.
● ஈ ஒரு தடவைக்கு 120 முட்டையிடும்.
● மானின் கொம்புகள் ஆண்டுக்கொரு முறை விழுந்து மீண்டும் முளைக்கும்.

**– ஆ. சக்திவேலன், காசிபாளையம்.**

எல்லா மீன்களும் முட்டையிடுவதில்லை. கப்பீஸ், பிளாட்டீஸ், ஸ்வார்ட் டெய்ல்ஸ், மோலீஸ் ஆகியவற்றின் முட்டைகள் பெண் மீனின் வயிற்றுக்குள்ளேயே பொரிந்து குட்டிகளாக வெளியேறுகின்றன.



நீலத் திமிங்கலம் 30 மீட்டர் நீளம் இருக்கும்; 110 டன் எடை. யானையின் எடை அதிகபட்சமாக 10 டன்தான். பத்து யானைகளின் எடை இருக்கும் நீலத் திமிங்கலம்.

**– ஆர். ஏ. ஜெயந்த் பாலாஜி, ஸ்ரீ சக்தி மெட்ரிக் பள்ளி, செட்டிபாளையம்.**



ஆஸ்திரேலியாவில் உள்ள ஒரு வகை சிலந்திகள் மீன் பிடித்து உண்ணுகின்றன. நீர் நிலைகளின் அருகே இரண்டு கால்களால் நின்றபடி மற்ற ஆறு கால்களையும் மீனைப் பிடிக்கத் தயாராக வைத்திருக்கும். சிறிய மீன்கள் கரையோரமாக வரும் போது பாய்ந்து பிடித்து உண்ணும்.

**– ஔவை ஏ.எஸ். யோகானந்தம், ஔவையார்பாளையம்.**

சீனாவில் விருந்தினர்களுக்குக் காய்கறிகளுடன் அரிசிச் சாதம் பரிமாறினால் அது அவர்களுக்குச் செய்யும் அவமரியாதை என நினைக்கின்றனர். விருந்து முடிந்து விட்டது என்பதற்கு அடையாளமாக கடைசியில் அரிசிச் சாதத்தைப் பரிமாறுகின்றனர் சீனர்கள்.

**– எஸ். மெகந்திபாரதி, நல்லகவுண்டன்பாளையம்.**

காபி பருகும் பழக்கத்தை முதன் முதலில் ஆரம்பித்து வைத்தவர்கள் அரேபியர்கள்தான். எத்தியோப்பியர்களை அவர்கள் சிறைபிடித்த போது அவர்கள் எண்ணெய் கலந்த காபி பருகுவதைப் பார்த்தனர்.



உடனே எண்ணெயைத் தவிர்த்து காபி தயாரிக்க அரேபியர் பழகிக் கொண்டனர். 9-ம் நூற்றாண்டில் தொடங்கிய காபி பழக்கம் 14-ம் நூற்றாண்டில்தான் உலக நாடுகளில் பரவ ஆரம்பித்தது.

**– க. பூங்கொடி, சித்தோடு.**


அமெரிக்கக் காடுகளில் ஒரு விநோதமான செடி இருக்கிறது அதற்கு நாகப் பாம்புச் செடி (cobra plant) என்று பெயர். பெயருக்கு ஏற்றாற்போல் அச் செடி பாம்பின் அமைப்பைக் கொண்டிருக்கும். இதுவும் புழு, பூச்சி முதலிய உயிரினங்களைத் தின்று வாழும் தாவரம்தான். இதனுடைய வாயின் அமைப்பு தண்ணீர் கூஜாவின் அமைப்பைப் போன்றது.

– தாவரங்களைப் பற்றிய அறிவியல் உண்மைகள்

**– ஜாஸ்மீன் கஃபார், என்னேரி.**

மனித உடலின் மிகக் கடினமான தோல் பகுதி, கால்களில் உள்ள பின் பாதங்களாகும். அங்கு தோல் 3 மில்லி மீட்டர் அளவில் தடிமனாக இருக்கும். மாறாக, மிக மெல்லிய தோல் பகுதி கண் இமைகளின் பகுதியாகும். அது 1 மில்லி மீட்டர் அளவில் இருக்கும்.

**– கே. சங்கரகிருஷ்ணன், கோவை – 46.**




சிறுவர் சங்கத்தில் உறுப்பினர்கள் கூடியிருந்தனர். அன்றைய கூட்டத்தில் புத்தகங்கள் அறிமுகம் செய்து வைத்தல் என்ற நிகழ்ச்சி பிரதானமாக இருந்தது.

முதலில் ஸ்ரீராம் 'சிறுவர்களுக்கான ராஜா ராணிக் கதைகள்' என்ற புத்தகத்தை அறிமுகப்படுத்த ஆரம்பித்தான். "வீரசாகசம், மதி நுட்பம், நகைச்சுவை என ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு சுவையாக இருக்கிறது. மொத்தம் 32 கதைகள். சங்கத்திற்கே இந்தப் புத்தகத்தைக் கொடுத்துடறேன். எல்லோரும் நேரம் கிடைக்கும்போது படிக்க உதவியாக இருக்கும்" என்று கூறி அமர்ந்தான்.

அடுத்து புவனா எழுந்தாள். "நான் சொல்லப் போற புத்தகத்தை எழுதியவர் நமக்கெல்லாம் நன்கு அறிமுகமானவர்" என்று நிறுத்தினாள்.

"நம்ம ஊரா புவனா?" என்றான் விவேக்.

"நான் சொல்லி முடிப்பதற்குள் என்ன அவசரம்?" என்று கேட்டவள் மீண்டும் தொடர்ந்தாள். "நம்ம கோகுலத்தில் ரொம்பக் காலமாக அறிவியல் சித்திர மடலை எழுதி வருபவர்" என்றவுடன் "ஆழி அவர்கள்தானே" என பல குரல்கள் ஒலித்தன.

"சரியா சொல்லிட்டீங்க. கடலில் வாழக்கூடிய உயிரினங்கள் பற்றி நமக்குக் கொஞ்சம் தெரியும். இந்தப் புத்தகம் ஆழ்கடலின் அதிசயங்களை விளக்குகிறது. வெறும் தகவல்களாக மட்டும் இல்லாமல் ஏகப்பட்ட படங்களுடன் அருமையாக இருக்கிறது இந்தப் புத்தகம். இதை ரெஃபரன்ஸ் புத்தகமாகப் பயன்படுத்தலாம்" எனக் கூறி அமர்ந்தாள் புவனா.

"அடுத்த புத்தகத்தை அறிமுகப்படுத்துவதற்குள் ஒரு பாடல் பாடலாம்" என்றான் கணேஷ்.

எல்லோரும் மகிழ்ச்சியுடன் கைதட்டி பாடி முடித்ததும் டேவிட் 'சூஃபி கதைகள்' என்ற புத்தகத்தை எடுத்துக்கொண்டு எல்லோருக்கும் முன் வந்தான்.

"இறையன்பு மிக்க இஸ்லாமிய ஆன்மீக சூஃபிகளின் வாழ்க்கையில் நடைபெற்ற உன்னதமான சம்பவங்களை விளக்கும் நூல் இது. ஒவ்வொரு கதையும் ஒரு உயர்ந்த நெறியை உணர்த்துகிறது. ஓவியர் ராமுவின் படங்கள் கதைகளுக்குப் பக்க பலம்" என்று கூறி அமர்ந்தான்.

"நம்ம சங்கத்தின் ஆண்டு விழாவில் போடுவதற்கான நல்ல நாடகங்கள் இந்தப் புத்தகத்தில் இருக்கு" என்றாள் மும்தாஜ்.

"புத்தகம் பெயரைச் சொல்" என்றாள் கவிதா.

"பெயரே 'நல்ல நாடகங்கள்'தான். இதில் பாரியின் வாழ்க்கை, கோப்பெருஞ் சோழனின் வாழ்க்கை, பீஷ்மரின் வாழ்க்கை போன்றவற்றை மையமாக வைத்து நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன. உரையாடல்கள் நயமாக உள்ளன" என்றாள் மும்தாஜ்.

"சரி. அடுத்த கூட்டத்தில் மற்ற புத்தகங்களை அறிமுகப்படுத்தலாம். இத்துடன் இன்றைய கூட்டம் முடிந்தது" என ரஞ்சனா அறிவிக்கக் கூட்டம் கலைந்தது.

— ரே

## ஆழ்கடலின் அதிசயங்கள்!

- சிறுவர்களுக்கான ராஜா ராணிக் கதைகள் முதல் தொகுதி, அப்பாஸ் மந்திரி, பக். 128, ரூ. 48/-, குட்புக்ஸ் பப்ளிகேஷன்ஸ், பிளாக் ஏஏ, 96 பிள்ளையார் கோவில் எதிரில், அண்ணாநகர், சென்னை - 40.
- ஆழ்கடலின் அதிசயங்கள், ஆழி. வே. ராமசாமி, பக். 116, ரூ. 30, குமரிப் பதிப்பகம், 8, நீலா தெற்கு வீதி, நாகை - 611 001.
- சூஃபி கதைகள், இரண்டாம் தொகுதி, பாபாஜி, பக். 72, ரூ. 27/-, இராமநாதன் பதிப்பகம், பிளாக் நம்பர் 4698, ஏஏ, 144, மெயின்ரோடு, அண்ணாநகர், சென்னை-40.
- நல்ல நாடகங்கள், டாக்டர் எஸ். யுவராஜ் செல்லையா, பக். 104, ரூ.20/- சாந்திமலர்ப்பதிப்பகம், 8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு, தி.நகர், சென்னை - 17.

# தவம் செய்யப்

பொன்பட்டி என்ற கிராமத்தில் வேலன் என்கிற விவசாயி இருந்தார். அவருக்கென்று சொந்தமாகச் சிறிய நிலம் இருந்தது. அதில் விவசாயம் செய்து மனைவியையும் ஒரே மகனான கந்தனையும் காப்பாற்றினார்.

கந்தனோ தந்தைக்கு உதவியாகவும் இல்லாமல் வேறு வேலைக்கும் போகாமல் நண்பர்களோடு அரட்டையடித்துப் பொழுதைப் போக்கினான். வேலனுக்கு வயதாகிவிட்டதால் வேலை செய்ய முடியவில்லை. உடல் நிலையும் பாதிக்கப்பட்டு படுக்கையில் இருந்தார்.

ஒரு நாள் மகனை அருகே அழைத்து "கந்தா இனிமேல் என்னால் வேலை செய்ய முடியாது. நீதான் வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும்" என்றார்.

"என்ன வேலை செய்யறது?" என்று கேட்டான் கந்தன்.

"இதென்ன கேள்வி? நம்ம நிலத்துல விவசாயம் செய்" என்றார் வேலன்.

"போங்கப்பா நீங்களும் தான் பல வருஷம் விவசாயம் செய்தீங்க. என்ன பயன்? வர்ற பணம் சாப்பாட்டுக்கே சரியாப் போச்சு. ஓலைக் குடிசையில ஏழையாகவே இருக்கோம்."

"அப்போ வேற என்ன வேலை செய்யப் போறே?"

"வேலை செய்யப் போறதில்லே. தவம் செய்யப் போறேன்" என்றான் கந்தன்.

"என்ன கந்தா சொல்றே?" என்று புரியாமல் கேட்டார் வேலன்.

"முனிவர்கள் எப்படி கடும் தவம் செய்து இறைவனிடம் வரம் வாங்கறாங்களோ அது மாதிரி நானும் காட்டுக்குப் போய் தவம் செய்து இறைவனிடம் நிறைய பொற்காசுகளைப் பெற்று வருவேன். அப்புறம் நாம வசதியா வாழலாம்" என்றான் கந்தன்.

"கந்தா இதெல்லாம் நடக்கிற காரியமா? தவம் செய்யறது சுலபமில்லே. தவிர நீ தவம் செய்யப் போய்ட்டா வயதான எங்களுக்கு யார் துணை? அதனால வேண்டாம்" என்றாள் தாய்.

"அதெல்லாம் பார்த்தா வசதியா வாழ முடியுமா? நான் காட்டுக்குப் போகத்தான் போறேன். தவம் செய்யத்தான் போறேன்" என்று உறுதியாகக் கூறினான் கந்தன்.

இருவரும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்காமல் கிளம்பி விட்டான். ஊரை விட்டு காட்டிற்குள் நுழைந்து விட்டான். சுற்றிலும் மரங்களாய் தூரத்தில் மிருகங்களின் சத்தமுமாய் இருந்த காடு கந்தனுக்குப் பயத்தை உண்டாக்கியது. எனினும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு நடந்தான்.

அப்போது எதிரே ஒரு மூதாட்டி தலைமேல் சுள்ளிக் கட்டைச் சுமந்து கொண்டு வந்து கொண்டிருந்தாள். இவனைப் பார்த்ததும் "யாரு தம்பி நீ?" என்று கேட்டாள்.

"என் பேரு கந்தன்" என்றவன் தன்னைப் பற்றியும் தனது நோக்கத்தைப் பற்றியும் கூறினான். அதைக் கேட்டு விட்டு பாட்டி கலகலவெனச் சிரித்தாள்.

"பாட்டி எதுக்கு சிரிக்கிறே?" என்று கோபமுடன் கேட்டான் கந்தன்.

"சிரிக்காம என்ன செய்யறது? சரி,

**வாண்டுதாசன்**



# போறேன்!

நான் கேட்கிறதுக்கு பதிலைச் சொல். நீ எதுக்காக தவம் செய்யப் போறே?'' என்று கேட்டாள் பாட்டி.

''வசதியான வாழ்வு வாழறதுக்கு'' என்றான் கந்தன்.

''எத்தனை வருஷம் தவம் செய்வே?''

''பத்து வருஷம் ஆனாலும் சரி கடவுள் வர்ற வரைக்கும் கடுமையா தவம் செய்வேன்.''

''சரி கடவுள் வந்து எவ்வளவு பொற்காசுகள் வேணும்ன்னா எவ்வளவு கேட்பே?''

''ஆயிரம் பொற்காசுகள் கேட்பேன்.''

''பத்து வருஷம் கடுமையா தவம் செய்து பெறக் கூடிய காசுகளை அதே பத்து வருஷத்துல கடுமையா உழைச்சும் சம்பாதிக்கலாமே. தவத்துல காட்டுற உறுதியை உழைப்பிலேயும் காட்டு. உழைச்சு வர்ற பணத்துல கொஞ்சம் கொஞ்சம் மிச்சப்படுத்தி இன்னும் அதிகமா நிலங்களை வாங்கு. வசதியா வாழலாம். உன்னோட அப்பா அம்மாவுக்கும் துணையா இருக்கலாம்'' என்றாள் பாட்டி.

கந்தன் யோசிக்கத் தொடங்கினான்.

''தம்பி உழைப்புதான் கடவுள். உழைப்பை நம்பினவங்க யாரும் கெட்டதில்லை. இதோ பார் நான் கூட இந்தக் காட்டுல சுள்ளியைப் பொறுக்கி ஊருல வித்து அதுலதான் வாழறேன். சந்தோஷமா இருக்கேன்'' என்றாள் பாட்டி.

''உண்மைதான் பாட்டி. எனக்குச் சரியான நேரத்துல பாடம் புகட்டினீங்க. நான் ஊருக்குப் போய் நிலத்துல உழைக்கிறேன்'' என்ற கந்தன் பாட்டியுடன் ஊரை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.



# ஒற்றைக்கால் குள்ளனுக்கு எட்டுக் கை - அது என்ன?

1. இருட்டில் கண் சிமிட்டும். ஆனால் நட்சத்திரம் அல்ல - அது என்ன?

2. தட்டினால் பறப்பான்; தடவினால் சாவான்; ஆனாலும் அவன் கடித்தால் பயம் - அவன் யார்?

3. கொடுக்க முடியும்; எடுக்க முடியாது - அது என்ன?

4. ஒற்றைக்கால் குள்ளனுக்கு எட்டுக்கை - அது என்ன?

5. சின்னஞ்சிறு குருவி இழுத்து இழுத்து வேலி அடைக்குது - அது என்ன?

6. அள்ளக் குறையாது; குடிக்க உதவாது - அது என்ன?

- ஜெ. சண்முகசுந்தரி,
பன்னிரண்டாம் வகுப்பு,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
விருத்தாசலம்.

> விடை: 1. மின்மினிப் பூச்சி, 2. கொசு, 3. கல்வி, 4. குடை, 5.ஊசி-நூல், 6.கடல் நீர்.

1. ஒற்றைக் கால் சுப்பனுக்குத் தலைகனம் அதிகம் - அவன் யார்?

2. வயிறு நிறையச் சாப்பிட்டால் வானத்தில் பறப்பான் - அவன் யார்?

3. புதிய சொந்தக்காரன் சமயத்தில் கடித்து வைப்பான். பழகிப் போன பின் கடிக்காமல் உடன் வருவான் - அவன் யார்?

4.என்னோடு பேச என் நண்பன் அழைக்க, தன் பாட்டுக்குச் சிரிப்பான் - அவன் யார்?

5. சிட்டுக் குருவிக்கு எட்டு முழச் சேலை - அது என்ன?

- பா. கவிதா, சென்னை - 17.

> விடை: 1. பம்பரம், 2. பலூன், 3. செருப்பு, 4. தொலைபேசி, 5.வாழைப்பழம்.

1. பூமியிலே வளராத மரம், கிளை உண்டு, இலை இல்லை - அது என்ன?

2. நூறு கிளிகளுக்கு ஒரே வாய் - அது என்ன?

3. அந்தரத்திலே தொங்குது செம்பும் தண்ணீரும் - அது என்ன?

4. வெள்ளையாய் இருக்கும். தொட்டால் சுருங்கும் பனிக்கட்டியுமல்ல. அது தொட்டாற் சிணுங்கியுமல்ல - அது என்ன?

5. பச்சைக்கிளி; பறக்க முடியாத கிளி, கொம்பிலே இருக்கும் குள்ளக்கிளி - அது என்ன?

6. கை இல்லாமல் நீந்துவான். கால் இல்லாமல் ஓடுவான் - அவன் யார்?

- இ. ரோகிணி, ஆண்டிபட்டி.

> விடை: 1. மான் கொம்பு, 2. வாழைப்பூ, 3. இளநீர், 4. பஞ்சு, 5. மாங்காய், 6. படகு.


1. இவர்கள் இருவரும் சேர்ந்தால் ஒரு தலை உருளும் - யார் இவர்கள்?

2. பச்சை பச்சையென்று இருக்கும் பாகற்காயுமல்ல; உடலெல்லாம் முள்ளிருக்கும் பலாக்காயுமல்ல; உடைத்துப் பார்த்தால் வெள்ளையாய் இருக்கும் தேங்காயும் அல்ல - அது என்ன?

3. குயவன் செய்யாத ஓடு: சலவைத் தொழிலாளி வெளுக்காத வெளுப்பு; சீனி இல்லாத இனிப்பு; மழையில்லாத நீர் - அது என்ன?

- ஜி. மனோ, வீரவநல்லூர்.

> விடை: 1. கத்தரிக்கோல், 2. ஆமணக்கு, 3. தேங்காய்.



# அழகுமிகுஞ் செடிகள்!

வீட்டின் முன்னே நறுமணம்
வீசு கின்ற பூச்செடி
நாட்ட மோடு, வைப்பதால்
நாளும் பூக்கள் பூத்திடும்!

நாளும் பூக்கள் பூப்பதால்
நல்ல நல்ல பூக்களை
நாளும் தேடித் தலையிலே
அலங்க ரித்துக் கொள்ளலாம்!

அலங்க ரித்துக் கொள்வதால
அன்பு நெஞ்சில் பொங்கிடும்
நலம்வ ளர்ந்து பூமியில்
நல்ல வண்ணம் வாழலாம்!

நல்ல வண்ணம் வாழ்ந்திட
நன்மை யாவும் வந்திடும்
அல்லல் ஒன்றும் இன்றி நாம்
அருமை யாவும் தேடலாம்!

அருமை யாவும் தேடினால்
அகிலம் நம்மைப் போற்றிடும்
பெருமை பெற்று உலகிலே
பெயற்சி றந்து வாழலாம்!

— அழகனார்




வெகுகாலத்திற்கு முன்னர் சிங்கள நாட்டை ஆண்ட ராஜாதி ராஜசிங்க மன்னனது ஆட்சியில், மக்கள் செல்வச் செழிப்புடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் 'அந்தரே' என்ற விவேகி ஒருவன் இருந்தான். அவனது விகடப் பேச்சுக்களாலும் குறும்புச் செயல்களாலும் மக்கள் வியந்து, சிரித்துச் சிரித்தே வயிறு புண்ணானார்கள்.

அந்தரேயின் திறமையை அறிந்த மன்னர், அவனைத் தமது அரசவையிலே விகடனாக அமர்த்திக் கொண்டார்.

# உன் வாயிலும் மண்! என்

ஆரம்பத்தில் அவனைத் தமக்குக் கீழ் பணி புரியும் ஊழியனாகவே கருதி வந்தார். ஆனால், அவனது விகடங்களும் குறும்புகளும் அரசரைப் பெரிதும் கவர்ந்ததினால் அவனுக்கு மற்ற எல்லாரிலும் அதிக உரிமை அளித்தார். அந்தரேயும் எந்நேரமும் மன்னரருகில் நின்று அவரை மகிழ்வித்து வந்தான்.

ஒருநாள், அரசரது அரண்மனை முற்றத்திலே பெரிய பாய் ஒன்றை விரித்து அதில் சர்க்கரை காயவிடப்பட்டிருந்தது. முதல் நாள் பெய்த மழையினால், அரண்மனைச் சமையலறையில் இருந்த சர்க்கரை மூட்டைகள் நனைந்ததினாலேயே இந்த ஏற்பாடு. அந்தரே வழக்கம்போல் அந்தப் புரத்திற்கு வந்தபொழுது சர்க்கரை காய்வதைக் கண்டான். அரசரைப் பார்த்து



## ஓவியப் போட்டி

வாத்துக் கூட்டம் செல்வதைப் பார்த்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டி வாத்துகள். வண்ணத்தில் வாத்துகளை வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல் இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. உங்கள் முழு முகவரியைத் தெளிவாக எழுதுங்கள். கடைசி தேதி 20.12.2000.

"மன்னர் பெருமானே! இங்கே பாயில் காய்வது என்ன?" என்று கேட்டான்.

அரசர் சிரித்துக் கொண்டே, "ஓ! அதுவா? அதுதான் வெள்ளை மண்" என்று கூறினார்.

அரசர் பொய் சொல்லி தன்னை ஏமாற்ற நினைக்கிறார் என்பது அந்தரேக்குப் புரிந்தது.

'சரி! எப்படியாவது இந்த மன்னரை ஏமாற்றி, சர்க்கரையைச் சாப்பிட வேண்டும்.' என யோசித்தபடி ஒன்றும் பேசாமல் சென்றுவிட்டான்.

# வாயிலும் மண்!

வீட்டிற்குச் சென்று தன் மனைவி, மகனுடன் திட்டம் தீட்டினான். அவனுக்கு நல்லதொரு யோசனை வந்தது.



மறு நாள் வழக்கம்போல் அரண்மனை வந்தான் அந்தரே. அரசருடன் சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்த வேளையில், அங்கே அந்தரேயின் மகன் ஓலமிட்டுப் புலம்பிய வண்ணம் ஓடி வந்தான்,

"என்ன நடந்தது மகனே? ஏன் இப்படி அழுகிறாய்?" என்று கலக்கமடைந்தவன் போல் பாசாங்கு செய்தான் அந்தரே.

"ஐயோ அப்பா! என் அன்பு அம்மா செத்துப் போய்விட்டார் அப்பா" என்று அழுதான் அந்தரேயின் மகன்.

"என்ன? அம்மா இறந்து போய்விட்டாளா? ஐயோ! நாம் என்ன செய்வோம்" என்று அந்தரேயும் அழுதான்.

தன் மகனைக் கட்டிப் பிடித்தபடி பாயில் புரண்டான்.

அரசர், மகாராணியார், சபையினர் அனைவரும் திகைத்து நின்றனர்.

"மகனே! அம்மா போய்விட்டாள். இனி நாம் வாழ்ந்துதான் என்ன பயன்? உன் வாயிலும் மண்! என் வாயிலும் மண்" என்று அழுது புலம்பியபடி பாயில் கிடந்த சர்க்கரையைத் தன் வாயிலும், தன் மகனின் வாயிலும் அள்ளி அள்ளிப் போட்டான்.

அப்பொழுதுதான் மன்னருக்கு அந்தரேயின் தந்திரம் புரிந்தது.


மன்னர் ஒரு சர்க்கரை மூட்டையை அந்தரேயிடம் தந்து "இந்தா அந்தரே. இதைக் கொண்டுபோய் இறந்து போன உன் மனைவியின் வாயிலும் போடு. ஒருவேளை, அவள் உயிர் பெற்று எழுந்தாலும் எழலாம்" என நகைச் சுவையாகச் சொல்ல, சபையே சிரிப்பால் அதிர்ந்தது.

அப்பொழுதும் அந்தரே தன் அழுகையை நிறுத்தவில்லை. தொடர்ந்து அழுதபடியே சர்க்கரையைப் பெற்றுக் கொண்டான்.


அந்தரேயின், இந்தக் குறும்புச் செயலால் மகிழ்ந்த மன்னர் அவனுக்குப் பெருந்தொகையான பரிசுகளையும் சன்மானங்களையும் கொடுத்து அனுப்பி வைத்தார்.


மூலம் : அபே அந்தரே
(சிங்கள நாட்டார் கதைகள்)

**தமிழில் : எம்.டீ. பாத்திமா மின்ஹா,**
**பன்னி முல்லை, பாணந்துறை, இலங்கை.**




ஜோதிடனின் பேராசை!
சிற்றரசர் சோமவர்மாவுக்கு ஜோதிடத்தில் நம்பிக்கை அதிகம். ஒவ்வொரு செயலையும் ஜோதிடன் ஜீமுத்திடம் கலந்து ஆலோசித்த பிறகே செய்வார்.
இந்த அரியணையில் ஒருநாள் நான் உட்கார்ந்தே தீருவேன்!
வேணுவாரியத்
ஒருநாள் இளவரசியைப் பார்த்தான் ஜோதிடன்.
என்ன அழகு! நான் அரியணையில் அமர்வது சுலபம். முதலில் இளவரசியை மணம் முடிக்கணும்.
நயவஞ்சக ஜோதிடன் மறுநாள் அரசரைச் சந்தித்தான்.
அரசே! நான் ஒரு முக்கியமான செய்தியை உங்களிடம் சொல்ல வேண்டும்.
தாராளமாகச் சொல்லலாம்.
இளவரசியின் ஜாதகத்தைப் பார்த்தேன். அவருக்குப் பதினெட்டு வயதாகும் போது நம் நாடு அழிவு நிலைக்குச் செல்லும் என்று உள்ளது.
நம் நாட்டில் இளவரசியை வைத்திருப்பது ஆபத்து.
என்ன சொல்கிறீர்? என் ஆட்சிக்கு ஆபத்தா?


என்னை மன்னிக்க வேண்டும்... இளவரசியின் ஜாதகம் அப்படி இருக்கிறது.
அட கடவுளே! இந்த அழிவிலிருந்து தப்பிக்க வழியே இல்லையா?
ஒரே ஒரு வழி உள்ளது. இளவரசியை யாருக்கும் தெரியாமல் எங்காவது அனுப்பி விடலாம்.
அன்று இரவு தூங்கிக் கொண்டிருந்த இளவரசியை அரசரும் ஜோதிடனும் பெரிய பெட்டியில் அடைத்தனர்.
யாருக்கும் தெரியாமல் பெட்டியை ஆற்றில் விட்டனர்.
மன்னித்து விடு என் மகளே!
எல்லாம் என் திட்டப்படியே நடந்து வருகிறது.



அரசர் அரண்மனைக்குத் திரும்பினார். அவரை அரண்மனையில் விட்டுவிட்டு ஜோதிடன் வேகமாகத் திரும்பி வந்தான்.
நான் நினைத்தபடியே இந்த இடத்திற்குப் பெட்டி வந்து விட்டது.
ஜோதிடனுக்கு ரொம்ப மகிழ்ச்சி.
அதிர்ஷ்டம்!
ஜோதிடன் பெட்டியைக் கரைக்கு எடுத்து வந்தான்.
இளவரசியைத் திருமணம் செய்து கொண்டால் நாடும் என் கைக்கு வந்துவிடும்.
ஆனால் ஜோதிடன் அரசரை அரண்மனையில் விட்டுவிட்டு திரும்பி வருமுன்னரே அவ்வழியே வந்த பக்கத்து நாட்டு இளவரசன்...
இளவரசி தன் கதையைச் சொன்னாள். இளவரசன் அவளைத் தன் நாட்டிற்கு அழைத்துச் சென்றான்.


நடந்தது அறியாத ஜோதிடன் பெட்டியைத் திறந்தான். பெட்டிக்குள் அவன் கண்ட காட்சி...
இளவரசன் கரடியைப் பிடித்து பெட்டிக்குள் அடைத்திருந்தான். கரடி ஜோதிடனைத் துரத்தியது.
ஜோதிடனுக்குப் பயத்தில் ஓட முடியவில்லை.
கரடி ஜோதிடனைப் பிடித்தது. நாட்டின் மீதும் இளவரசியின் மீதும் பேராசை கொண்டு அரசரையே ஏமாற்றிய ஜோதிடனுக்கு மோசமான முடிவு ஏற்பட்டது.
© SAI FEATURES. ALUVA - 7



• பனிமான்

பிராணிகளிலேயே மிகவும் அழகானவை; இவற்றின் கண்களை இலக்கியங்களில் உவமையாகக் கூறுவதுண்டு! பொதுவாக மென்மையான பிராணி என்று அழைக்கப்படுவது 'மான்'தான்.

உலகின் பல பகுதிகளிலும் மான்கள் வாழ்கின்றன. வட அமெரிக்காவில் வாழும் மூஸ் என்ற இனம்தான் மான்களில் மிகப் பெரியது. இது இரண்டரை மீட்டர் உயரம் வரை இருக்கும். சிலி நாட்டில்



• சாம்பர் மான்

• புள்ளிமான்கள்



வாழும் ஒருவகை மான் மிகச் சிறியது. முப்பது செ.மீ. உயரமே இருக்கும்.

காரிபோ, பனிமான், செம்மான், கடமை அல்லது சாம்பர், பாரா சிருங்கம், புள்ளிமான், கஸ்தூரி மான், கடமான் முதலியன முக்கிய இனங்கள்.

மாடு, ஆடுகளைப் போன்றே மானும் அசை போடக் கூடிய பிராணி. புல், இலை, இளந்தளிர்களே முக்கிய உணவு. நிறைய சாப்பிடக் கூடியவை. பசுமையான, நீர் நிறைந்த இடங்களில் இவை வாழும்.

கால்கள் ஒல்லியாகவும் நீளமாகவும் இருக்கும். வால்குட்டையானது. மோப்பசக்தியும் கேட்கும் சக்தியும் அதிகம். பகை



விலங்குகள் தூரத்தில் வரும்போதே உணர்ந்து துள்ளி ஓடி தப்பித்து விடும். வேகமாக ஓடுவதற்குக் கால்கள் மிகவும் உதவி புரிகின்றன.

மான்களுக்கு மற்றொரு சிறப்பு அம்சம் அதன் கொம்புகள். பொதுவாக ஆண் மான் களுக்குத்தான் கொம்புகள்

# மான் கொம்பிற்கு மருத்துவக் குணம் உண்டா?



எஸ். சுஜாதா

உண்டு. பனிமான், நீர்மான்களில் ஆண், பெண் இரண்டிற்கும் கொம்புகள் இருக்கும். புள்ளி மான்களுக்குக் கொம்புகள் கிடையாது.

ஆடு, மாடுகளின் கொம்புகள் போன்று மான்களுக்குக் கொம்புகள் நிலைத்து இருப்பதில்லை. ஒவ்வொரு வருடமும் உதிர்ந்து மீண்டும் முளைக்கும். கொம்பு சுண்ணாம்புப் பொருளால் ஆனது. மான் முதுமை அடைய, அடைய கொம்புகளின் வளர்ச்சியும் குறையும். விஷக்கடிகளுக்கு மான் கொம்புகளை அரைத்துப் போடுவார்கள். கொம்புகளுக்கு என்று தனிப்பட்ட மருத்துவக் குணம் ஏதும் கிடையாது. கொம்புடன் சேர்க்கப்படும் பிற பொருள்களிலிருந்து பலன் கிடைக்கலாம்.

மான்கள் தம்மைக் காத்துக் கொள்ளவும், எதிரியிடம் சண்டையிடவும் கொம்புகளைப் பயன்படுத்துகின்றன. பனிமான் கொம்புகளைக் கொண்டே பனியைத் தோண்டி இரையைத் தேடும்.

கொம்புகளில் ரத்த ஓட்டம் இருக்கும். ஒரு குறிப்பிட்ட பருவம் வந்ததும் இதன் அடிப்பாகத்தில் ஒரு வளையம் தோன்றி இரத்த ஓட்டத்தை நிறுத்தி வளர்ச்சியைத் தடுத்து விடும். மரங்களில் உரசி மான், தன் கொம்பை உடைத்து விடும். சில சமயங்களில் உடைத்த கொம்புகளைத் தானே தின்று விடுவதும் உண்டு. எலும்பு, கொம்புகள் வளர்ச்சிக்குச் சுண்ணாம்புச் சத்து அதிகமாகத் தேவைப்படுவதால் மான்கள் இவற்றைச் சாப்பிடுகின்றன.

மான் இந்தக் கொம்புகளைக் கொண்டு சிங்கம், புலி போன்ற விலங்குகளுடன் கூட சண்டையிடும். ஆனால் இறுதி வெற்றி மானுக்கு அல்ல. அதனால் தான் சிங்கம், புலி போன்றவை மானின் பின்புறத்திலிருந்து தாக்குகின்றன.

சில சமயங்களில் பெண் மானுக்காக இரண்டு ஆண் மான்கள் சண்டையிடுவதுண்டு. அப்போது இரண்டின் கொம்புகளும் சிக்கிக் கொள்வதுண்டு. இப்படி



சிக்கிவிட்டால் பிரிப்பது கஷ்டம். பகை விலங்குகளுக்கு இரையாகி விடும். அழகான கொம்புகளே ஆபத்தில் கொண்டு விட்டுவிடுகின்றன!

மான்கள் பொதுவாகக் கூட்டமாக வசிக்கக் கூடியவை. பெண்மான் ஒரு தடவைக்கு ஒன்று அல்லது இரண்டு குட்டிகளை ஈனும். குட்டி பிறந்த சில மணி நேரங்களில் எழுந்து நிற்க ஆரம்பித்து விடும். தாய் பகலில் மூன்று முறை சுத்தம் செய்து பாலூட்டும். குட்டி வேகமாக வளரும். ஆண்குட்டி எட்டு மாதங்களிலும் பெண் குட்டி ஒரு வருடத்திலும்

தாயைப் பிரிந்து சென்று வாழ்க்கை நடத்தும்.

சாம்பர் அல்லது கடமைமான் தான் இந்தியாவிலே மிகப் பெரியது. பழுப்பு நிறத்தில் காணப்படும். கண்களுக்குக் கீழேயும் பின்னங்கால்களுக்குக் கீழேயும் நாற்றச் சுரப்பிகள் உண்டு. சுரப்பியின் மூலம் நீரைப் பீய்ச்சி 'இது எனது எல்லை' என உணர்த்தும் சாம்பர்மான். மிக வேகமாக ஓட இயலாது.

மான்களிலேயே மிகவும் அழகானது புள்ளிமான். இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டுமே இவை வாழ்கின்றன. இதன் நிறம் செம்பழுப்பு. உடலில் வெண்மையான புள்ளிகள் வரிசையாக அமைந்திருக்கும். வேகமாக ஓடக் கூடியவை.

காஷ்மீர், சிக்கிம் மலைப் பிரதேசங்களில் கஸ்தூரிமான் அதிகம் காணப்படுகிறது. இம்மான்களின் அடிவயிற்றுக்கு அருகிலுள்ள பகுதியிலிருந்து கஸ்தூரி என்னும் வாசனைப் பொருள் சுரக்கிறது.





வடதுருவப் பகுதிகளில் பனிமான்கள் அதிகம் உள்ளன. இவற்றின் தோல் சாம்பல் நிறமாக இருக்கும். தோல் இரண்டு அடுக்குகளால் ஆனது. குளிரைத்தாங்க இது உதவுகிறது. பனிப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு இவை பெரிதும் பயன்படுகின்றன. ஸ்லெட்ஜ் என்னும் சறுக்கு வண்டிகளைப் பனிக்கட்டியின் மீது இழுத்துச் செல்லவும், பொதி சுமக்கவும் பெரிதும் உதவுகின்றன.

மான்கள் பத்து ஆண்டுகள் வரை உயிர் வாழக் கூடியவை. பெரும்பாலும் பகை விலங்குகளுக்கு இரையாகி விடுகின்றன. இதனால் முழு ஆயுளும் வாழ காடுகளில் சாத்தியமில்லை. உயிரியல் பூங்காக்களில் வளர்க்கப்படும் மான்கள் 10 ஆண்டுகள் வாழ்வதுண்டு. மான்களுக்கு மட்டும் பகை இல்லாமல் இருந்தால் பல்கிப் பெருகி காட்டின் பெரும்பகுதி இவற்றிற்கு உணவாகிவிட நேரிடும்!




முதல் பரிசு :
எல். ஷீபா,
திருவனந்தபுரம்.




மூன்றாம் பரிசு : வி.மீனாட்சி,
ஒன்பதாம் வகுப்பு, முத்தையா அழகப்பா
மெட்ரிகுலேஷன் பள்ளி, கோட்டையூர்.

# ஓவியப் போட்டி முடிவுகள்!

அக்டோபர் இதழில் 'தாஜ்மஹால்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.



இரண்டாம் பரிசு :
என்.எஸ். கோபால்,
பத்தாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, இராஜா நகரம் கிழக்கு,
திருவள்ளூர் மாவட்டம்.





ஆறுதல் பரிசு :
பி. க்ருஷ்ண பிரசாத்,
பத்தாம் வகுப்பு,
ஸ்ரீ வித்யா மந்திர், சேலம்.


ஆறுதல் பரிசு : கே. கோகுல்,
பதினோராம் வகுப்பு, விருதுநகர்
இந்து நாடார்
மேல்நிலைப்பள்ளி,
மதுரை.



## எங்கள் ஊரில் நடந்தது!







# ஸைலன்ஸர் முறுக்கு!

### முறுக்கு

**நா**ன் முறுக்கு சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது பக்கத்து வீட்டுச் சிறுவன் வந்தான். அவனுக்கும் முறுக்கு கொடுத்தேன். முறுக்குச் சற்று நமுத்துப் போயிருந்தது. அதைச் சாப்பிட்டவன் "என்ன அண்ணா, முறுக்கைச் சாப்பிட்டால் சத்தமே வர மாட்டேங்குது"- என்றான். அருகில் இருந்த என் தம்பி "இது சைலன்சர் வச்ச முறுக்கு. அதான் சத்தம் வரலை" என்றான். அவனுக்குப் புரியாவிட்டாலும் "அதான் சத்தம் வரலையா? இருந்தாலும் நல்லா இருக்கு" என்று கூறிச் சென்றான். எனக்கோ சிரிப்பை அடக்க முடியவில்லை!

– எம். மகேஷ்
தாரமங்கலம்.

### பஸ்

**எ**ங்கள் ஊருக்கு அரைமணி நேரத்திற்கு ஒரு பஸ்தான் வரும். பக்கத்து வீட்டுப் பையன் பையைத்தூக்கிக் கொண்டு பள்ளிக்குக் கிளம்பிச் சென்றான். போன சிறிது நேரத்திலேயே திரும்பி வந்து விட்டான். ''என்ன பஸ்ஸை விட்டுட்டியா?'' என்றேன் நான். ''நான் ஒண்ணும் விடலை. அதுதான் அஞ்சு நிமிஷத்துக்கு முன்னாலே வந்து என்னை விட்டுடுச்சு'' என்றான். ''சரி, அடுத்த பஸ்ஸாவது உன்னை விட்டுட்டுப் போகாமல் இருக்கணும். சீக்கிரம் கிளம்பு'' என்றேன். ''நான் லீவ் போடுவதற்காகப் பொய் சொல்லலை. இதோ கிளம்பிட்டேன்'' என்றபடி மீண்டும் கிளம்பினான்.

– ராமகிருஷ்ணன்,
காயக்காடு, அருப்புக்கோட்டை.

### தேங்காய் சாதம்...

**அ**ம்மா காலையில் தேங்காய் சாதம் செய்திருந்தார். அப்பாவும் தம்பியும் விடியற்காலமே பக்கத்து ஊருக்குச் சென்று விட்டு மாலையில் தான் திரும்பினார்கள். அம்மா இருவரையும் சாப்பிடச் சொன்

னார். தம்பி "பிறகு சாப்பிடுகிறேன்" என்றான். "இது தேங்காய் சாதம், ரொம்ப நேரம் ஆனால் ஊசிப் போயிடும். அதனால் இப்பவே சாப்பிடு" என்று சொன்னார் அம்மா. "ஊசி போன பிறகே சாப்பிடறேன். ஊசி இருக்கும் போது சாப்பிட்டால் தொண்டையில் குத்திடும்" என்றான் தம்பி. அம்மாவுக்கும் எனக்கும் ஒரே சிரிப்பு!

– அ. பேச்சியப்பன்,
ராஜபாளையம்.

## விடுதலை!


என் தோழி, நாய் வளர்க்க ஆசைப்பட்டாள். அவள் அப்பாவிடம் நச்சரித்து ஒரு குட்டி நாயையும் வாங்கிக் கொண்டாள். நாய் வந்த இரண்டு நாட்கள் சங்கிலியால் கட்டிப் போட்டு அன்புடன் கவனித்துக் கொண்டாள். மூன்றாவது நாள் வாக்கிங் போவதற்காகச் சங்கிலியை அவிழ்த்த மறு நிமிடமே நாய் ஓடி விட்டது. "எவ்வளவு நல்லா கவனிச்சேன், இப்படி ஓடி விட்டதே" என என் தோழி மிகவும் வருத்தப்பட்டாள் என்னிடம். உடனே நான் "சரி ரொம்பக் கவலைப்படாதே! கவனிக்கிறேன்னு ரொம்பவே அதிகமா கவனிச்சுட்டே. மூன்றாவது நாளிலாவது உன்னிடமிருந்து விடுதலை கிடைத்ததே அதற்கு" என்றேன். உடனே கோபத்துடன் சென்று விட்டாள்.

– வே. தீபா,
பத்தாம் வகுப்பு,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
ஆண்டிபட்டி.

## ஆ...ஆ...

என் அக்கா காலில் முள் குத்தி, நடக்க முடியாமல் இருந்தாள். இதைப் பார்த்த அம்மா அவளை உட்கார வைத்து முள் எடுக்க ஆரம்பித்தார். வலி தாங்காமல் "ஆ....ஆ..." என்று பலமுறை கத்தினாள் அக்கா. அருகில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த என் தங்கை "எத்தனை தடவைதான் 'ஆ' சொல்லுவே? அடுத்தது 'இ, ஈ'.... எல்லாம் சொல்லலாமே! எங்களுக்கும் சலிப்பேற்படாது" என்றவுடன் எல்லோரும் சிரித்தனர். அக்கா மட்டும் சத்தம் போட்டு அழ ஆரம்பித்தாள். சிறிது நேரத்தில் முள் எடுக்கப்பட்டவுடன் தங்கையைத் துரத்த ஆரம்பித்தாள்.

– மே. நீ. தமிழ்க்
கோமகன்,
பெருந்தொழுவு.







எங்கள் ஊரில் நடந்தது!



டெய்ஸி வீட்டில் கிறிஸ்துமஸுக்காக நிறைய பரிசுப் பொருட்கள் வந்திருந்தன. இதில் சாதாரண பொருட்களும் கலந்து விட்டன. அவற்றைக் கண்டுபிடியுங்கள். குறைந்தது 15 பொருட்களையாவது கண்டுபிடிக்க வேண்டும்.

விடை: 48 பக்கம்.

கருத்து, படம்: ஜெயராஜ்






## வயிறு குலுங்க...

✉ 'அடி ஓரிடம்; அதிர்ஷ்டம் ஓரிடம்!' கதையைப் படித்தேன். வயிறு குலுங்கச் சிரித்து விட்டேன். தம்பியின் பேராசைக்குத் தகுந்த தண்டனை தான்!

– இந்திராதேவி,
பாளையங்கோட்டை,
நெல்லை மாவட்டம்.

## மானம் காத்தவர்!

✉ ஒலிம்பிக்ஸ் விளையாட்டுகளில் முக்கியமான சிலவற்றை மட்டும் எடுத்துக் கூறி மனத்தில் பதியச் செய்து விட்டீர்கள். மானம் காத்த மல்லேஸ்வரியின் புகழ் எங்கும் பரவட்டும்!

– என். சங்கரன், எட்டாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி, திருப்பத்தூர்.

# டாக்டருக்கு நன்றி!

## ஆச்சர்யம்!

✉ சிப்புகளைப் பற்றிய கட்டுரை சுவாரசியமாக இருந்தது. ஆதி காலத்திலேயே சிப்பின் பயன்பாடு இருந்தது கண்டு ஆச்சரியமடைந்தேன். எகிப்திய சிப்புகள் இன்றைய சிப்புகளைப் போலவே இருப்பது இன்னொரு ஆச்சர்யம்!

–எஸ். நெப்போலியன், ஒன்பதாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி, காரைக்கால்.

## குட்டுவது போல்...

✉ வாடகை வீட்டில் குடியிருப்பவர்கள் குறுகிய காலத்தில் பயனடைய காய்கறி, பூச் செடிகளை வளர்க்கவே விரும்புகின்றனர். அத்தகைய குறுகிய மனம் படைத்தவர்களின் தலையில் குட்டுவது போல் இருந்தது முகம்மது ஹில்மி எழுதிய 'சின்னப் பெண்ணும் மரக்கன்றும்' கதை.

– பா. செந்தில்குமார், ஏரல், தூத்துக்குடி மாவட்டம்.

## இரை இல்லாமல்...

✉ 'கரடிகள்' பற்றிய ஆழியின் சித்திர மடல் அருமை. கரடிகளில் ஏகப்பட்ட வகைகள் இருப்பது கண்டு வியப்படைந்தேன். 4 முதல் 5 மாதங்கள் இரை இல்லாமல் தூங்கும் என்பது ரொம்பவும் ஆச்சர்யமாக இருக்கிறது.

– வெ. கல்யாணி, பத்தாம் வகுப்பு, தேனி.

## சந்தேகமில்லை!

✉ 'மூர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி பெரிது' என்பார்கள். அது போல் இவ்வளவு சிறிய வயதிலேயே தேசிய விருதும் சர்வதே[illegible] விருதும் பெற்றுள்ள ஸ்வேதாவை எவ்வளவு வே[illegible]மானாலும் பாராட்டலாம்! ஸ்வேதா நிச்சயம் ஆஸ்கார் வாங்கு[illegible] என்பதில் சந்தேகமில்லை.

– ஆர். ப்ரியா, ஆர். தினேஷ், வேலூர்.

## படித்த ஞாபகம்!


✉ 'மாடு வாங்க லோன்' ஜோக் சில மாதங்களுக்கு முன் ஒரு பத்திரிகையில் படித்தேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். நவம்பர் மாத புதிர்கள் அனைத்தும் சிந்தைக்கு விருந்தளித்தன.

– நாகைபாபு, அத்திபுலியூர்.

## நன்றி!

✉ ஒரு பக்கக் கதையாக இருந்தாலும் 'முட்டாள் குப்பு' சட்டென சிரிக்க வைத்து விட்டது. காதுக்குள் எறும்பு செல்வது எல்லோர் வீட்டிலும் நடக்கக் கூடியது. அதை எப்படி எடுப்பது என்று விளக்கிய டாக்டருக்கு நன்றி.

– எம். நித்யா, ஏழாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, மதுரை.



# கோகுலம் க்விஸ்

1. உலகின் முதல் பெண் அதிபர் ______________

2. மலேசியாவின் தலைநகர் ______________

3. இந்த ஒலிம்பிக்ஸில் தடகளப் போட்டிகளில் ஐந்து பதக்கங்களை வென்ற அமெரிக்கப் பெண் ______________

4. அமைதிக்காக நோபல் பரிசு பெற்ற பாலஸ்தீன தலைவர் ______________

5. தென் இந்தியாவின் மான்செஸ்டர் ______________

6. ஔவையாருக்கு நெல்லிக்கனி தந்தவர் ______________

7. நிலவில் ஒலி கேட்குமா?


8. தஞ்சை பெரிய கோயிலைக் கட்டியவர் ______________

9. வைரம் ______________ படிகத்திலிருந்து கிடைக்கிறது.

10. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு ______________

மேலே கொடுக்கப்பட்டுள்ள அனைத்து கேள்விகளுக்கும் சரியான விடைகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள். முகவரிக் கூப்பனை ஒட்டி, விடைகளை எழுதி, உங்கள் முழு முகவரியையும் குறிப்பிட்டு அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். கடைசி தேதி **31.12.2000.**

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை ,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97



## பத்மா ரவிசங்கர்

# 7. சதிகாரர்களின் திட்டம்!



மாலை வெய்யிலில் தொலைவில் மலை தகதகத்தது. வீசும் காற்றும் குளுமையாயிருந்தது. எதையும் ரசிக்கும் மனநிலையில்தான் செந்தில் இல்லை.

ஒட்டுத் தாடி சதிகாரனும், காணாமல் போன ஃபைலும் அவன் மனத்தை அலைக்கழித்தன.

அன்று அந்தத் தாடிக்காரன் செய்த ஃபோன், செந்திலைத் திரும்பவும் குழப்பியது. அவன் பேசியது எல்லாம் சங்கேதமாகவே இருந்தது. 'எஸ் பேசுகிறேன்' என்றான். 'வலை ரெடி' என்றான். 'சூழ்நிலை பக்காவாம். அப்புறம்? ஆங்! 'பழம் ரெடியா' என்று கேட்டான். மறுமுனையில் 'ரெடி' என்று சொல்லி இருக்க வேண்டும். 'நல்லது! உடனே புறப்பட்டு வாங்க!' என்று முடித்தான்.'

சதியைப் பற்றி செந்திலால் எதுவும் தீர்மானிக்க முடியவில்லை. சாதகமான சூழ்நிலை என்பது புரிகிறது. அது என்ன வலை? ஏதோ பழம் தயார் என்றானே... என்ன பழமாக இருக்கும்? பழத்தை வைத்துக் கொண்டு என்ன சதி செய்ய முடியும்? ஏதோ பெரும் சதி என்பதில் செந்திலுக்குச் சந்தேகம் இல்லை. ஆனால் ஒன்று உறுதி. அந்த ஒட்டுத்தாடியின் பெயரின் முதல் எழுத்து 'எஸ்'!

அந்தத் தெருவிற்குள் பிரவேசித்தான். அங்கேதான் அப்பாவின் அலுவலக நண்பர் சண்முகம் வீடு இருக்கிறது. தற்காலிகமாகத் தாடிக்காரன் சதியை ஒதுக்கிவிட்டு, ஃபைல் பிரச்னை அவன் மனதை ஆக்ரமித்துக் கொண்டது. வீட்டினுள் தயக்க

# அழகன், செந்தில்,



முடன் நுழைந்தான்.

**ஹா**லில் உலாத்திக் கொண்டிருந்த சண்முகம் நின்றார். அவர் முகம் கடுகடு வென்றிருந்தது. அவருக்கு என்ன பிரச்னையோ...

''அங்கிள்! உங்க நண்பர் தியாகராஜ னோட சன்!''

# கமரன்!

''தெரியும்! என்ன விஷயம்?'' என்று சிடுசிடுத்தார்.

''காணாமல் போன அந்த ஃபைல்...''

செந்திலைப் பேச விடாமல் கோபமுடன் எகிறினார் சண்முகம்.

''என்ன உங்கப்பன் உன்னை உளவு பார்க்க இங்கே அனுப் பினானா? நான் இல்லாதப் பட்டவன்தான். அப்பப்போ கைமாத்தா பணம் வாங்கறேன். ஒப்புக்கறேன். அதுக்காக ஃபை லைத் திருடிப் பிழைப்பு நடத்தற கேவலமானவன் நான் இல்லை! புரியுதா?'' சண்முகம் கர்ஜித்தார். ''முதல்ல இடத்தைக்காலி பண்ணு!''

குனிந்த தலையுடன் செந்தில் வெளியேறினான். இந்த மனிதருக்கு எதற்காக இவ்வளவு கோபம்? ஃபைலை சண்முகம்தான் திருடி யிருப்பாரா? அதை மறைக்கத்தான் இந்தக் கோப வேட நாடகமா?

அடுத்த தெருவில்தான் அந்த கோதண்டராமன் வீடு இருக்கிறது. அன்று இருவரும் தன் வீட்டிற்கு வந்திருக்கிறார். அது சரி. கோதண்டராமனும் 'கோப' ராமனாகித் தன்னை விரட்டி விடுவாரா? வீட்டிற்குத் திரும்பி விடலாமா? அப்பாவின் நிலை அவன் கண் முன் தோன்றி மறைந்தது. வருவது வரட்டும். ஆனால் செந்தில் பயந்ததற்கு எதிர்மாறாக-

கோதண்டராமன் இன்முகத்துடன் வரவேற்றார்.

''தியாகராஜன் பையன் செந்தில் தானே?''

''ஆமா அங்கிள்!'' என்றான் வியப் புடன்.

''உட்கார். என்ன சாப்பிடறே?''

வேண்டாமென்று தலையாட்டினான்.

''என்னப்பா விஷயம்?''

''அந்த ஃபைல்....'' என்று இழுத்தான்.

''அது காணாமப் போனது பெரிய துரதிர்ஷ்டம்! உங்கப்பா எவ்வளவு நல்ல மனுஷன்! அவருக்குப் போய் இப்படி ஒரு சோதனையான்னு ரொம்ப வருத்தப் பட்டுக்கிட்டிருக்கேன்....''

"அன்னிக்கு எங்க வீட்டுக்கு வந்தப்ப— அந்த ஃபைலை நீங்க பார்த்தீங்களா அங்கிள்?"

"இல்லையேப்பா! நான் அங்கே இருந்தது சில நிமிஷங்கள்தான். உங்கப் பாகிட்ட பேசினது சில வார்த்தைகள் தான். ஃபைல் எதையும் நான் கவனிக் கலை..."

செந்தில் வெளியே வந்தபோது குழப்ப மாகவும் ஏமாற்றமாகவும் உணர்ந்தான். துப்பு ஏதும் கிடைக்கும் என்று மிகவும் எதிர்பார்த்திருந்தான்.

இருவரில் ஒருவருக்கு அந்த ஃபை லுடன் தொடர்பு இருக்கும் என்று அவன் உள்ளுணர்வு சொல்லிக் கொண்டிருந்தது. சண்முகம் எதற்காக அவ்வளவு கோபப் படுகிறார்? அவருக்கு குற்றமுள்ள நெஞ்சா? ஃபைலைத் திருடிக் கொண்டு சென்றிருப் பாரோ? அவர் ஏன் அப்படி செய்ய வேண்டும்? பணம் இல்லாத வறுமைதான் காரணமா? அல்லது வறுமையினால் வரும் வெறும் கோபமா? மாறாக—

கோதண்டராமன் இனிமையானவராக இருந்தார். தன் நண்பரின் நிலைமைக்கு மிகவும் வருத்தமுற்றார். தெளிவாகவே பேசினார். அல்லது நல்லவர் போல் வேடமா?

**பி**ரதான சாலைக்கு வந்ததும், செந்தில் விழிகள் விரிந்தன. அந்த ஃபைல் பிரச்னையைச் சுத்தமாக மறந்தான்! காரணம்—

சாலையில் சற்றுத் தொலைவில் நடந்து செல்லும் அந்த ஒட்டுத் தாடிக்காரனை செந்தில் பார்த்துவிட்டான்!

தாடியுடன் கூடவே இரண்டு சதிகாரர் களும் சேர்ந்து செல்வதைப் பார்த்தான். ஆகா! சதி பற்றி அறிய இது சரியான சந் தர்ப்பம் என்று அவன் உள்ளம் துள்ளியது.

செந்தில் பின்பற்றத் தொடங்கினான். சாலையில் போக்குவரத்து அதிகமிருந்தது. கவியத் தொடங்கிய இருட்டும், கூடுதலான ஜன நெரிசலும் செந்திலுக்கு உதவியாக இருந்தன.

மூவரும் மிதமான வேகத்தில் நடந்து சென்றனர். அவர்களுக்குள் ஏதும் பேசிக் கொள்ளவில்லை. எங்கே செல்கிறார்கள்?

இன்று தெரிந்து கொண்டு விட வேண் டும் என்று செந்தில் உறுதி பூண்டான். இருபுறமும் எவ்வளவு கடைகள்! சாலை யில் எவ்வளவு வாகனங்கள்! இந்த ஊரில் இவ்வளவு முன்னேற்றத்திற்கும் அழகன் தொழிலகம்தான் காரணம்.

சில நிமிடங்கள் சென்றதும், மூவரும் ஒரு டிபார்ட்மென்ட்டல் கடைக்குள் நுழைந்தனர்.

செந்திலும் கடைக்குள் சென்றான். அங்கே பல பொருட்கள் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன. தேவையானதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வசதியாக இருந் தது. விசாலமான கடையின் மற்றொரு மூலையில் அந்த மூவர்.

கடையில் கூட்டமிருந்த தைரியத்தில் செந்தில் மேலும் நெருங்கினான். பொருட் களை வாங்கும் பாசாங்கில் ஒவ்வொரு பொருளாக எடுத்துப் பார்த்துவிட்டு அதனதன் இடத்தில் வைத்தான். ஆனால் அவன் கடைக் கண் கவனம் சதிகாரர்கள் மீதுதான்!

தாடியின் சகாக்கள் இருவரையும் நன்றாகப் பார்த்து மனத்தில் பதிய வைத் துக் கொண்டான் செந்தில். ஒருவனுக்கு சுருண்ட முடி; சிவந்த, மீசையில்லாத முகம். மற்றொருவனுக்கு முன் வழுக்கை; சிறிய பென்சில் மீசை; மாநிறம்.


ப்ரட், சிப்ஸ், ஜாம் என்று மூவரும் வாங்கிக் குவித்த அயிட்டங்களைச் செந்தில் கவனித்தான். மூவரும் எங்காவது

**"உங்க மருந்துக் கடையில் எதுக் காக கட்டு, கட்டாக புஸ்தகங்களை வச்சிருக்கீங்க?"**

**"எல்லாம் ஜோக் புத்தகங்கள், சிரிப்பு நல்ல மருந்தாச்சே!"**

**- பாலசுப்ரமணியன்**





பிக்னிக் செல்லப் போகிறார்களா! அல்லது எங்காவது பதுங்கிக் கொள்ளத் தோதாக இந்த உணவு சேகரிப்பா?

கடையிலிருந்து வெளியே வந்த பத்தாவது நிமிடம், மூவரும் பிரதான சாலையிலிருந்து விலகி நடந்தனர். சில தெருக்களைக் கடந்தனர்.

அங்கே வளர்ந்து வரும் ஒரு காலனி உள்ளது. வீதி விளக்குகள் இன்னமும் பொருத்தப்படாமல் இருள் ஆட்சி. ஜன நடமாட்டம் வெகுவாகக் குறைந்திருந்தது. செந்தில் தற்போது அதிக இடைவெளி விட்டிருந்தான். வீடுகளிலிருந்து தெருவுக்குக் கசிந்த வெளிச்சத் தீவுகளைக் கவனமாகத் தவிர்த்தான்.

அவன் மனம் யோசனையிலிருந்தது. மூவரும் முரடர்கள். எதற்கும் துணிந்த சதிகாரர்கள். நிச்சயம் பயங்கர ஆயுதங்கள் வைத்திருப்பார்கள். செந்தில் மட்டும் அவர்கள் கையில் அகப்பட்டால்—

நினைக்கவே அவன் நெஞ்சு நடுங்கியது. எதற்காக இந்த ரிஸ்க்? திரும்பி விடலாமா? வேண்டாம். இன்னமும் அதற்கு அவசியம் ஏற்படவில்லை. அந்த மூன்று தடியன்களுக்கும் சந்தேகம் ஏதும் ஏற்படவில்லை என்பது உறுதி. காஷுவலாகத்தான் நடந்து சென்று கொண்டிருக்கிறார்கள்...

இன்று இயன்ற வரை முயன்று ஓரளவாவது சதியைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். பின்னர், போலீஸிற்குக் கை காண்பித்து விட வேண்டியதுதான்.

செந்தில் உச்சபட்ச எச்சரிக்கையில் இருந்தான். இந்த ஊரில் ஒவ்வொரு மூலை, முடுக்கும் அவனுக்கு அத்துப்படி. எதிர்பாராத ஆபத்து எனில், மின்னல் வேகத்தில் தயாராக இருந்தன அவன் கால்கள். இறுதியில்—

தொலைவில் ஒரு வீட்டின் முன் அவர்கள் நின்றனர். சுற்றும் முற்றும் பார்த்தனர். கரிய இருள் பாதுகாப்பில் செந்தில் நின்று விட்டான். மூவரும் வீட்டிற்குள் செல்வதைப் பார்த்தான். ஐந்து நிமிடம் கழித்து—

செந்தில் அந்த வீட்டை அணுகினான். வீட்டின் இருபுறமும் காலி மனைகள். சதிகாரர்கள் பாதுகாப்பாக ஒளிந்து கொள்ளத் தோதாக வீடு தனிமையாக இருந்தது.

அந்த வீட்டின் வாசல் கதவு தாழிடப்பட்டிருந்தது. உள்ளே விளக்குகள் எரிவது தெரிந்தது. சுற்றிலும் முள்வேலி. முன்புறம் மூங்கில் படல்கேட்.

**செ**ந்திலின் இதயம் படக் படக் கென்று அடித்துக் கொண்டது. துணிவை வரவழைத்துக் கொண்டு மெல்ல மூங்கில் படலைத் திறந்தான். பூனை போல் ஓசைப் படுத்தாமல் நடந்தான்.

உள்ளே சன்னமான பேச்சுக் குரல்கள் தெளிவில்லாமல் கேட்டன. அவர்கள் பேசுவதைக் கேட்க வேண்டும். எப்படி?

வீட்டின் பக்கவாட்டுப் பகுதியை அடைந்தான். அங்கே இருந்த ஜன்னல்கள் சாத்தப்பட்டிருந்தன. சுவருடன் ஒண்டிக் கொண்டு, காதை ஜன்னல் மேல் வைத்து ஒட்டுக் கேட்டான் செந்தில். இப்போது மெலிதாக, ஆனால் தெளிவாகக் கேட்க முடிந்தது.

"என்ன, குறிச்ச நேரத்துல முகூர்த் தம்தானே?"

"ஆமாம்பா! அதான் நல்லாத் தயா ராயிட்டமே!"

"பாம் நல்லா வெடிக்கும்தானே?"

"இந்த வைரவன் பாம் என்னிக்குச் சோடை போயிருக்கு? கவலைப்படாதே. அட்டகாசமா வெடிச்சுத் தூள் பரத்திடும்!"

**ஹோ** ஹோவென்று சிரிப்பொலி கேட்டது. செந்திலுக்குச் சிலிர்த்தது. 'பழம் ரெடியா' என்று தாடி அன்று கேட்டது வெடிகுண்டைத்தான் குறிக்கிறது! என்ன ஒரு பயங்கர சதி! கடவுளே! எங்கே வைக்கப் போகிறார்கள்? இதை நடக்க விடக் கூடாது. நல்லவேளையாக, இவர்கள் இருப்பிடம் தெரிந்து விட்டது. இப்போதே போலீஸுக்குப் போய் சொல்லிவிட வேண்டும் என்று எழுந்த செந்திலின் எண்ணத்தில் உடனடியாக மண் விழுந்தது!

"ஆக, நாம் தயார்! இந்த வீட்டை இப்பவே காலி செய்துருவோம். பிரச்னைன்னா போலீஸ்காரப் பயல்கள் முதல்ல இம்மாதிரி தனிமையான வீடுகளைத்தான் பிடிப்பானுங்க!"

"திட்டப்படி, அந்த இடத்துக்குப் போயிடுவோம்! அங்கிருந்துதான்..."

சிரிப்பு ஒலி கேட்க, செந்தில் ஜன்னலின் ஒரு கதவை விரலால் லேசாகத் தள்ளிப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! டக்கென்று லேசாகத் திறந்து கொண்டது! ஒரு செ.மீ. அளவு தோன்றிய அந்த இடுக்கு வழியாகப் பார்த்தான். 'பாக்' செய்யப்பட்ட பைகள், அலமாரியில். மலை உச்சிப் பொந்தில் பார்த்த அந்தக் கத்தி, தற்சமயம் ஒருவன் கையில்! மற்றொருவன் கையில் ஒரு ரிவால்வர்! மூவரின் கண்களில் இருந்த வெறி செந்திலுக்கு அச்ச மூட்டியது.

"ஏதோ ஓசை கேட்ட மாதிரி இருந்ததே!" என்றான் ஒருவன்.

"சே! வீண் பிரமை!"

"வா! வெளியே போய் எதற்கும் பார்த்துடலாம்!"

அவ்வளவுதான். மின்னல் வேகத்தில் அங்கிருந்து செந்தில் நழுவினான்!

அடுத்தடுத்த நாட்களில் பரபரப்பாக இரண்டு நிகழ்ச்சிகள் நடந்தேறின:


1) மறுநாளே செந்தில் அந்தச் சிவப்பு ஃபைல் மர்மப் புதிரை அவிழ்த்தான்!

2) அதற்கு அடுத்த நாள், அழகன் கடத்தப்பட்டான்!

(தொடரும்)


**விடை:**

1) சப்பாத்தி கட்டை
2) பல்பு
3) ஃபோன்
4) மூக்குக் கண்ணாடி
5) கத்தி
6) கத்தரிக்கோல்
7) டிபன் கேரியர்
8) பூதக் கண்ணாடி



9) டார்ச்
10) மாம்பழம்
11) கரண்டி
12) விசில்
13) தீப்பெட்டி
14) இங்க்ஃபில்லர்
15) பிரஷ்
16) சாவி
17) பட்டன்
18) பால்பாட்டில்

# 'கடி'ச் சிரிப்பு



"சோமு ஏன் எண்ணெய் பாட்டிலை வச்சுக்கிட்டு சிரிக்கிறான்...?"
"சிரிச்சா ஆயுள் கூடும்னு சொன்னதை ஆயில் கூடும்னு புரிஞ்சுக் கிட்டான்!"
— தஞ்சை தாமு





"உங்க வகுப்பில் சுமாரா எத்தனை பேர் படிக் கிறாங்க?"
"40 பேர் சுமாராப் படிப்பாங்க, 5 பேர் நல்லாப் படிப்பாங்க...!"
— பாளை பசும்பொன்





"ஆப்பிரிக்காவிலுள்ள யானைக்கும் இந்தியாவிலுள்ள யானைக்கும் என்ன வித்தியாசம்?"
"ஆயிரக்கணக்கான மைல்கள்தான் வித்தியாசம்!"
— ஆர். மீனாட்சி




"ராமு உன் பிறந்த நாள் எப்போது?"
"செப்டெம்பர் ஏழாம் தேதி சார்..."
"எந்த வருடம்...?"
"ஒவ்வொரு வருடமும்தான் சார்!"
— நெ. இராமன்

"பேசறப்ப சுத்தி, சுத்திப் பார்த்துக்கறியே... என்ன விஷயம்?"
"பேசறபோது கவனமா இருக்கணும்ன்னு அப்பா சொல்லிருக்கார்!"
— ஜூனியர் சக்தி



# நிலாவில் காற்று

'நிலவைப் பார்த்து வானம் சொன்னது என்னைத் தொடாதே' என்ற கவிஞரின் கற்பனை நமக்குத் தெரியும். ஆனால் நிலவும், வானமும், ஒன்றையொன்று தொட்டுக் கொண்டா இருக்கின்றன? இல்லை. ஆனால் நிலாதான் பூமியைச் சுற்றி தட்டாமாலை ஆடிக் கொண்டிருக்கிறது. நிலா பூமியின் துணைக்கோள் என்பது நாம் அறிந்த ஒன்று. ஆனால் பூமி, சந்திரன், சூரியன் அனைத்தும் சம வயதுக்காரர்கள்தான் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆம்! கிட்டத்தட்ட 500 கோடி வருடங்கள் ஆகின்றன பூமி, சந்திரன் மற்றும் சூரியன் போன்றவை பிறப்பெடுத்து....! இது எப்படி என வியப்பாக இருக்கிறதா? நம் சூரியக் குடும்பத்தின் மைய நாயகனான சூரியன், அதனைச் சுற்றி வரும் கோள்கள் மற்றும் அவைகளின் துணைக்கோள்கள் எல்லாம் விண் துகள்கள் கொள்கைப்படி (Galactic dust theory) விண் துகள்களின் ஈர்ப்பு சக்தியாலும், சுற்று வேகத்தாலும் ஒரே காலத்தில் உருவானவைதான் என்று கணிக்கப்படுகிறது. பூமியில் காணப்படும் தனிமங்களின் வகைகளே சந்திரனிலும் காணப்படுகின்றன என சந்திரனிலிருந்து கொண்டு வந்த கற்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுவிட்டன. ஆனால் சந்திரனின் அடர்த்தி பூமியைப் போல் 60 சதம் மட்டுமே! ஏனெனில் பூமியில் காணப்படும் எடை அதிகமான தனிமங்களான 'இரும்பு' போன்றவை மிகக் குறைவாகவே சந்திரனில் உள்ளன. சந்திரனின் நிறையும் கூட பூமியை விடக் குறைவு. பூமி சந்திரனைவிட 81 மடங்கு நிறை அதிகம் கொண்டது.

சந்திரனும் கூட ஒரு காலத்தில் பூமி மற்றும் வியாழன் போல தன்னகத்தே வளி மண்டலத்தைப் பெற்றிருந்தது. ஆனால் அதனுடைய குறைவான நிறை மற்றும் ஈர்ப்பு சக்தியால் (பூமியில் ஒருவரின் எடை 60 கிலோ என்றால், சந்திரனில் 10 கிலோ தான்). சந்திரனின் வளிமண்டலம், வான் வெளியில் கொஞ்சம், கொஞ்சமாக ஒழுகி முடிவில் அனைத்தும் சந்திரனை விட்டு வெளியேறிவிட்டது. எனவே இப்போது சந்திரனில் நம் பூமியைப் போல வளி மண்டலம் கிடையாது. அதனால் ஒலி பரவாது; நேரிடையாகப் பேசினால் கேட்காது.

ஒவ்வொரு கோளுக்கும் ஈர்ப்பு விசை உண்டு. எனவே, ஒரு கோள், அது சுற்றிக் கொண்டிருக்கும் மையப்பொருள்/நட்சத்திரத்தின் ஈர்ப்புவிசையைத் தாண்டி, அதன் எல்லையை விட்டு வெளியேற, அதைவிட அதிகமாகச் செயல்படும் வேகம் அக்கோளுக்குத் தேவை. இதனையே கோளின் விடுபடல் வேகம் (Escape velocity) என்கிறோம். வியாழன் கோளின் விடுபடல்



வேகம் மணிக்கு 60கி.மீ., பூமியின் விடுபடல் வேகம் 11.2கி.மீ.,


# இருந்ததா?

செவ்வாயின் விடுபடல் வேகம் 5 கி.மீ., சந்திரனின் விடுபடல் வேகம் 2.5 கி.மீ. ஆனால் வளி மண்டலத்தைத் தன்னகத்தே தக்க வைக்க ஒரு கோளின் விடுபடல் வேகம் குறைந்த பட்சம் மணிக்கு 3.5 கி.மீ. ஆக இருக்க வேண்டும். எனவே வியாழன், பூமி மற்றும் செவ்வாயில் விடுபடல் வேகம் 3.5.கி.மீக்கு அதிகமாக உள்ளதால் காற்றின் மூலக் கூறுகள் வளிமண்டலத்தில் உள்ளன. ஆனால் சந்திரனின் விடுபடல் வேகம் காற்றின் மூலக்கூறுகளை வளிமண்டலத்தில் நிறுத்தி வைக்க முடியாததால், சந்திரனின் வளிமண்டலம் வான்வெளியில் ஒழுகும் நிலை ஏற்பட்டது. சந்திரனின் துணைக்கிரகமான 'டைட்டனி'ல் கூட வளிமண்டலம் உள்ளது; (அதன் விடுபடல் வேகம் மணிக்கு 3.5 கி.மீ.) இதில் 'மீத்தேன்' என்ற வாயுவும் உள்ளது.

## சோம்பேறி பூமி!

பூமி ஒருமுறை தன்னைத்தானே சுற்றிக் கொள்ள ஒரு நாள் ஆகிறதென்று நமக்கெல்லாம் தெரியும். நில நடுக்கோட்டுப் பகுதியில் மணிக்கு 1500 கி.மீ. வேகத்தில் சுற்றுகிறது. செப்டெம்பர் மாதம் வேகமாகவும், மார்ச் மாதம் மெதுவாகவும் சுற்றுகிறது. அதுமட்டுமல்ல; வர வர பூமியின் சுற்று வேகம் குறைந்து கொண்டிருக்கிறது.

பூமி சுற்றுவதை நிறுத்தி விட்டால் என்னவாகும் என்று, என்றைக்காவது நீங்கள் கற்பனை செய்து பார்த்ததுண்டா? 100 கி.மீ. வேகத்தில் சென்று கொண்டிருக்கும் கூரையில்லா காரில், சடன் பிரேக் போட்டாற்போல், பூமி ஒரு நொடி நின்றால் கூட, பூமியின் மேலுள்ள அனைத்து பொருட்களும், கடல், மண் மற்றும் அனைத்து ஜீவராசிகளும் வான் வெளியில் வெகு வேகமாய் விசிறி எரியப்பட்டு விடும்! பூமியின் வேகம் மெதுவாகக் குறைந்து கொண்டே வருகிறது என்று கூறினேன். எவ்வளவு தெரியுமா? 50,000 வருடத்திற்கு ஒரு வினாடி என இதன் வேகம் குறைகிறது. இப்படியே போனால் என்னவாகும்? கி.பி. 5000கோடி ஆண்டுகளுக்குப்பின், பூமியின் ஒரு நாள் என்பது, இன்றைய 47 நாட்களுக்குச் சமம்! அன்றைக்கு நாம் இருக்க மாட்டோம். நம் சந்ததிகள் அறிவியலில் முன்னேறி என்ன நிலையில் இருப்பார்களோ! கடந்த 11 கோடி வருடங்களில் நமக்கு வால் போய், நடக்கத் தொடங்கி விட்டோமே!



— எஸ். மோகனா

# 4 ஆளப்பிறந்தவன்!

கதை: ராஜி படம்: லலிதா




நண்பர்களின் பிரிவைத் தாங்க முடியாத ஜெயசிம்மன் அவர்களைச் சந்திக்கத் தனியாகக் கிளம்பினான்.
அதோ சோமு மாதிரி தெரிகிறதே!
மோகன்! உன்னைப் பார்க்கத்தான் வந்து கொண்டிருக்கிறேன்.
சோமு! இனி என் பெயர் ஜெயசிம்மன்! இந்தப் பெயரைக் கூறினால்தான் என்னைச் சந்திக்க அனுமதிப்பார்கள்.
இதை நம் நண்பர்களிடமும் சொல்லி விடு!


அப்போது இளவரசரைத் தேடிக் கொண்டு பிரபாகரன் வந்தார்.
நல்லவேளை! நான் நினைத்தமாதிரி இளவரசர் இங்கேதான் வந்திருக்கார்.
பிரபாகரனா? வாருங்கள். சோமு, இவர்தான் என் மெய்க்காப்பாளர்.
இளவரசே, இனிமேல் இப்படி தகவல் சொல்லாமல் தனியே வராதீர்கள். அரசாங்க விதிகளுக்குப் புறம்பானது.
சட்டம், விதி, அரசு இதெல்லாம் எனக்குப் பிடிக்கவேயில்லை. நான் என் விருப்பப்படிதான் இருப்பேன்.


இளவரசே! நீங்கள் தனி மனிதர் அல்ல. இந் நாட்டின் சொத்து. அபாயம் சூழ்ந்துள்ளது. உடனே கிளம்புங்கள்.
நான் மகிழ்ச்சியாக இருப்பது தங்களுக்குப் பிடிக்கவில்லையா?
அது மட்டுமல்ல. விரோதி வீரசிம்மன் பெரும்படையுடன் தயாராகிக் கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.
சோமு, நீயும் என்னுடன் அரண்மனைக்குக் கிளம்பு.
ஜெயசிம்மா உனக்குத் துணையாக எப்போதும் நான் இருப்பேன்.

(தொடரும்)





# ஆடு யாருக்குச் சொந்தம்?

த. ஜானகி

நீதிபதி பிரேம் சாகர் முன்பு அன்று ஒரு வழக்கு வந்தது. வழக்குத் தொடுத்த நல்லசாமி நீதிபதியைப் பார்த்துக் கூறலானார் :

"ஐயா! இதோ நிற்கிறானே இவன் பெயர் ராக்கி. நாங்கள் இருவரும் ஒரே தெருவில் வசிக்கிறோம். முந்தா நாள் அதாவது திங்கட் கிழமை இவனோட அப்பா சந்தைக்கு ஒரு ஆட்டுக் குட்டியை விற்கக் கொண்டு வந்தார். வெள்ளை வெளேர் என்று பார்க்க அது அழகாக இருந்தது. அவரிடமிருந்து அந்த ஆட்டுக் குட்டியை விலைக்கு வாங்கிக் கொண்டு நான் அதை என் வீட்டில் கட்டிப் போட்டேன். நேற்று முழுவதும் ஆட்டுக் குட்டி என் வீட்டில் தான் இருந்தது. இன்று காலை வயல் காட்டிற்குப் போய் விட்டுத் திரும்பி வந்து பார்த்தால் என் ஆட்டுக் குட்டியைக் காணவில்லை. திடுக்கிட்டுப் போன நான் ஆட்டுக் குட்டியைத் தேடிக் கொண்டே செல்லும் போது தொலைவில் ராக்கி ஆட்டுக் குட்டியுடன் வேக வேகமாகப் போய்க் கொண்டிருப்பது தெரிந்தது. உடனே அவன் அருகில் சென்று பார்த்தேன். என்னோட வெள்ளை நிற ஆட்டுக் குட்டிக்குத்தான் கறுப்புச் சாயம் பூசியிருக்கிறான் என்று புரிந்தது.

"ஏண்டா! ஆட்டுக் குட்டியோட நிறத்தை மாற்றி எடுத்துக் கொண்டு போகிறாய்? என்று சண்டை போட்டேன். அதுக்கு அவன், இது என்னோட ஆட்டுக் குட்டி. இதோட நிறம் கறுப்பு. இதைத் தர முடியாது என்று சொல்லி விட்டான்.

"எனக்கு வந்த கோபத்தில் பக்கத்தில் ஓடிக் கொண்டிருந்த சின்ன வாய்க்காலுக்குள்ளே ஆட்டுக் குட்டியைத் தள்ளி விட்டேன். தண்ணீருக்குள் விழுந்த ஆட்டுக் குட்டி கத்திக் கொண்டே கரைக்கு வந்து விட்டது. உடனே நான் ஆட்டுக் குட்டியைப் பிடித்து இழுத்துக் கொண்டு தங்கள் முன் வந்து விட்டேன். உண்மையிலேயே இது என்னோட ஆட்டுக் குட்டிதான். தாங்கள்தான் எனக்கு என் ஆட்டுக் குட்டி கிடைக்க வழி செய்ய

வேண்டும்'' - நல்லசாமி இரண்டு கரங்களையும் கூப்பி வேண்டிக் கொண்டார்.



குற்றம் சுமத்தப்பட்ட ராக்கியை நீதிபதி பார்த்தார். பதினைந்து வயதிற் குட்பட்ட சிறுவனாகத் தெரிந்தான். அடுத்து அவர் பார்வை ஆட்டுக் குட்டி யின் மீது விழுந்தது. சாயம் கலைந்து உடலில் திட்டுத் திட்டாக கறுப்பும் வெள்ளையுமாக நீர் சொட்டச் சொட்ட மே... மே... என்று கத்தியபடி பரிதாபமாக நின்று கொண்டிருந்தது.

"ராக்கி! இது உன்னோட ஆடா?" - நீதிபதி வினவினார்.

"ஆமாங்க ஐயா'' - பணிவோடு பதில் சொன்னான் ராக்கி.

''உன்னோட ஆடுன்னு சொல்றே. அப்படி இருக்க அதுக்கு ஏன் சாயம் பூசினே?"

"ஐயா! எங்கப்பா சந்தையிலே விற்றது வேற ஆடு. இதோ இது என்னோட ஆடு. நல்லசாமிக்கு, இந்த ஆட்டின் மேலே ஒரு கண். அதனால நேற்று இரவு என்னோட ஆட்டுக் குட்டியைத் திருடிக் கொண்டு போய் விட்டார். நான் எங்கே கண்டு பிடித்து விடுவேனோ என்று பயந்துக்கிட்டு இதுக்கு அவர் கறுப்புச் சாயம் பூசிட்டாரு. காலையிலே ஆட்டுக் குட்டியைக் காணோம் என்று தேடிக் கொண்டு வரும் போது இவர் வீட்டில் இருப்பதைக் கண்டுபிடித்து விட்டேன். என்னதான் சாயம் பூசி இருந்தாலும் என்னோட ஆட்டுக் குட்டி எனக்கு அடையாளம் தெரியாமலா போயிடும்? என்னோட ஆட்டுக் குட்டியைப் பிடுங்கிக் கொண்டு விடுவாரோன்னு பயந்துகிட்டு என்னோட அத்தை வீட்டிலே கொண்டு விடப் போய்க் கொண்டிருந்த போதுதான் இவர் என்னிடம் சண்டை போட்டு இங்கே அழைத்துக் கொண்டு வந்து விட்டார். தயவுசெய்து என்னோட ஆட்டுக் குட்டியை என்கிட்டே கொடுத்துடுங்க" - பணிவோடு இறைஞ்சினான் ராக்கி.

''நீங்க இரண்டு பேருமே ஆட்டுக் குட்டி உங்களோடதுன்னு சொல்றீங்க. ஆட்டுக்குட்டிக்கு ராக்கிதான் சாயம் பூசினான் என்று நல்லசாமி சொல்கிறான். நல்லசாமிதான் ஆட்டிற்கு நிறமாற்றம் செய்தான் என்று ராக்கி சொல்கிறான். இருவருமே உண்மையை ஒத்துக் கொள்ள மறுப்பதால் இந்த ஆட்டைக் கொன்று

பிரியாணி செய்ய ஏற்பாடு செய்யப் போகிறேன். பிரியாணியை நீங்கள் இருவர் மட்டுமே வயிறு நிரம்பச் சாப்பிடலாம்'' - நீதிபதி கூறி முடித்தார்.

உடனே ராக்கி நீதிபதியின் காலில் விழுந்து, ''ஐயா! தயவுசெய்து இந்த ஆட்டை பிரியாணி செய்ய வெட்டா தீர்கள்'' என்று கெஞ்சினான்.

"ஏன் இப்படி சொல்கிறாய்?" - நீதிபதி கேட்டார்.

"ஐயா! நடந்த உண்மையைச் சொல்லி விடுகிறேன். எங்கள் வீட்டில் ஆடே கிடை யாது. என் அத்தை வீட்டிலிருந்து இதை ஒரு மாதக் குட்டியாக எடுத்து வந்தேன். பார்த்துப் பார்த்து பசிக்கு உணவு போட் டேன். அன்போடு வளர்த்தேன். 'ஜில்' லுன்னு இதுக்குப் பெயர் வைத்து கொஞ்சி விளையாடினேன். கொழு கொழுவென்று இருக்கும் இந்த ஜில்லு வின் மீது எங்கப்பாவிற்கு ஒரு கண். நான் வீட்டில் இல்லாத சமயத்தில் சந்தையில் இதை விற்று விட்டார். அவர் பேச்சி லிருந்து நல்லசாமிதான் விலைக்கு வாங்கினார்



என்று தெரிந்து கொண்டேன்.

"இன்று விடியற்காலை என்னோட ஜில்லுவைப் பார்ப்பதற்காக நல்லசாமி வீட்டிற்குச் சென்றேன். அப்போது அவர் மனைவி, நாளைக்கு இந்த ஆட்டை வெட்டி பிரியாணி செய்யப் போகிறேன் என்று நல்லசாமியிடம் சொல்லிக் கொண்டிருந்தார். அதைக் கேட்டதும் அப்படியே துடித்துப் போய் விட்டேன். எனக்கு அழுகை அழுகையாக வந்தது. ஜில்லுவை காப்பாற்ற முடிவு செய்தேன். அதனால் தான் நல்லசாமி வீட்டிலிருந்து யாருக்கும் தெரியாமல் ஆட்டுக் குட்டியை ஓட்டிக் கொண்டு வந்தேன். நல்லசாமியோ அல்லது எங்கப்பாவோ ஜில்லுவைப் பார்த்து இழுத்துக் கொண்டு சென்று விடுவார்களோ என்று பயந்து போய் நான்தான் கறுப்புச் சாயம் பூசினேன். அதை அழைத்துக் கொண்டு போகும் போதுதான் நல்லசாமி என்னைப் பார்த்து கையும் களவுமாகப் பிடித்து விட்டார். அதன் பிறகு நடந்தது அனைத்தையும் நல்லசாமி கூறி விட்டார். அவர் கூறியதுதான் உண்மை. ஐயா! தயவுசெய்து என் ஜில்லுவை வெட்டி விடாதீர்கள்'' கண்களில் நீர் மல்க வேண்டினான் ராக்கி.

"உண்மையைக் கண்டுபிடிக்கத்தான் நான் இந்த மாதிரி சொன்னேன். ஆட்டை, பணம் கொடுத்து விலைக்கு வாங்கியிருக்கும் நல்லசாமியிடம் கொடுத்து விடுகிறேன். இப்பொழுது உன் வாயாலேயே நீ உண்மையை ஒத்துக் கொண்டு விட்டாலும், பொய் சொன்னதற்காக உனக்குத் தண்டனை கொடுக்க வேண்டும். நம்ம ஊர் முருகன் கோவிலில் உள்ள பூச் செடிகளுக்கு நாளையிலிருந்து ஒரு வாரம் நீர் ஊற்ற வேண்டும். தெரிந்ததா?'' - நீதிபதி இருக்கையிலிருந்து எழுந்து கொண்டார்.

நல்லசாமி மகிழ்ச்சியோடு ஆட்டை ஓட்டிக் கொண்டு சென்றார். ஆனால் ராக்கியோ தன் 'ஜில்லு' தன்னை விட்டுப் பிரிந்து போனதை எண்ணி அழுதபடி அருகில் இருந்த மரத்தடியில் அமர்ந்து கொண்டான். சில நொடிகளில் அழுது கொண்டே தூங்கி விட்டான்.

எத்தனை நேரம் அவனையும் அறியாமல் களைப்பினால் உறங்கிக் கொண்டிருந்தானோ... அவனுக்கே தெரியாது. யாரோ தன்னை அழைப்பதைக் கேட்டுக் கண் திறந்தான்.

எதிரே... சாதாரண உடையில் நீதிபதி பிரேம் சாகர் அவனுடைய அருமை 'ஜில்லு'வுடன் நின்று கொண்டிருந்தார்.

"ராக்கி! இந்தா உன்னோட ஜில்லு. நீ இந்த ஆட்டுக்குட்டியின் மீது வைத்திருக்கும் அன்பைப் பார்த்ததும் என் மனம் உருகி விட்டது. நீதிபதி ஆசனத்தில் அமர்ந்திருந்த போது நீதிபதியாக இருந்து தீர்ப்பு வழங்கினேன். ஆனால் இப்பொழுது நான் உன் நண்பன். உனக்காக நல்லசாமியிடம் ஆட்டுக்குட்டியை விலைக்கு வாங்கி விட்டேன். இந்தா இதை இனி நீயே பழையபடி வளர்த்து வா'' - நீதிபதி ஜில்லுவை அவனிடம் கொடுத்தார்.

''ஐயா! தங்கள் அன்பிற்கு நான் தலைவணங்குகிறேன். என் ஜில்லுவை நான் என் வீட்டிற்குக் கொண்டு சென்றால் என் தந்தை என்னை அடித்து உதைத்தோ... அல்லது எனக்குத் தெரியாமலோ மீண்டும் இதை விற்று விடுவார். அல்லது நெருங்கிய சொந்தக்காரர்கள் யாராவது வந்தால் பிரியாணி செய்யச் சொல்லி விடுவார். அதனால் நான் இதைக் காட்டு மலைக்கோவிலுக்குக் கொடுத்து விடப் போகிறேன்'' என்றான் உறுதியான குரலில்.

"நீ... நீ... என்ன சொல்றே... ராக்கி?''

"நம்ப ஊரு எல்லையிலே இருக்கிற காட்டு மலைக் கோவிலுக்கு மக்கள்

''மன்னா! பக்கத்து நாட்டு மன்னர் படையோடு வருகிறார்...''

''நம்ம வைத்தியரிடம் சொல்லி படைக்கு மருந்து போடச் சொல்.''

- சாயம் வெ. ராஜாராமன்



# கோகுலம் க்விஸ் முடிவு



அக்டோபர் மாதம் வெளியான க்விஸ் போட்டியில் 14 பேரே சரியான விடைகளை அளித்திருந்தனர். எனவே 14 பேர் மட்டுமே பரிசு பெறுகின்றனர்.

ரூபாய் பதினான்கு பரிசு பெறுவோர்:

1. பி. ஜெயக்குமார், அருப்புக் கோட்டை, விருதுநகர் மாவட்டம்.
2. வெ. நடராஜன், திம்மராஜபுரம், திருநெல்வேலி மாவட்டம்.
3. எஸ். ராதிகா, பல்லாவரம், சென்னை.
4. எஸ். செந்தில் முருகன், கொன் னாம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.
5. இ. சின்னப்பொண்ணு, சொக்கம் பட்டி அஞ்சல், திருநெல்வேலி மாவட்டம்.
6. கி. சிவசுப்பிரமணி, காமாட்சிபுரம், கோவை மாவட்டம்.
7. அ. கண்ணன், தென்னமநாடு அஞ்சல், தஞ்சை மாவட்டம்.
8. அ. சுபா, எட்டாம் வகுப்பு, ஏ.எம்.ஜி. பள்ளி, பொம்மிடி, தர்மபுரி மாவட்டம்.
9. தே. சுந்தர், வில்லியனூர், பாண்டிச்சேரி.
10. கே. சந்தியா, எட்டாம் வகுப்பு, எஸ்.யு.ஹெச்.எஸ். பள்ளி, கிழக்குத் தாம்பரம்; சென்னை.
11. எஸ். ஜகதீஷ், மேற்குத் தாம்பரம், சென்னை.
12. ஆர். சம்பத் குமார், கோவை.
13. க. தயாபரன், சைதாப்பேட்டை, சென்னை.
14. உ. காசிவிஸ்வநாதன், சோழபுரம்.

சரியான விடை :

1. நவீன ஒலிம்பிக்ஸின் தந்தை பியரி கோபர்ட்டின்.
2. கண்ணகி மதுரை மாநகரை எரித்தாள்.
3. ஈரமான இடங்களில் வளரும் ஆல்கா என்பது ஒரு வகையான பாசி.
4. இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத்.
5. எக்ஸ்ரேயைக் கண்டுபிடித்தவர் ராண்ட்ஜென்.
6. உலகிலுள்ள மலைத் தொடர்களில் மிக வும் நீளமானது ஆண்டீஸ் மலைத் தொடர்.
7. ஃபிரான்ஸின் தலைநகர் பாரீஸ்.
8. வளையம் உடைய கோள் சனி.
9. இந்திய செஸ் போட்டியில் முதல் கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்ற பெண் விஜயலட்சுமி.
10. இங்கிலாந்து பிரதமர் டோனி பிளேர்.

**பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.**
**கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.**

---

வேண்டிக் கொண்டு பிராணிகளை விட்டு விடுகிறார்கள். அந்தக் கோவிலுக்கு என்று விடப்படும் பிராணிகளை யாரும் கொல்வதில்லை. அருகில் காடு இருப்ப தால் பகல் முழுவதும் காட்டில் மேய்ந்து விட்டு மாலையில்தான் கோவிலுக்கு வரு கின்றன என்ற உண்மை தாங்கள் அறியா தது அல்ல. நல்லசாமிகிட்டேயிருந்து ஓட்டி வந்த ஜில்லுவை காட்டு மலைக் கோவிலுக்கு விடத்தான் போய்க் கொண் டிருந்தேன். அப்போதுதான் மாட்டிக் கொண்டேன். ஆனால் தங்கள் அன்பால் மீண்டும் கிடைக்கப் பெற்ற ஜில்லுவை மீண்டும் அங்கேயே கொண்டு விடப் போகிறேன். அங்குதான் என் ஜில்லு சந்தோஷமா, சுதந்திரமா உயிரோடு வாழ முடியும். எனக்கு ஜில்லுவோட உயிர்தான் முக்கியம்" என்றான் ராக்கி.

நீதிபதியை வணங்கி விட்டு தன் ஜில்லுவை அழைத்துக் கொண்டு காட்டு மலைக்கோவிலை நோக்கி ராக்கி செல்லலானான்.

விழிகள் இமைக்காது அவன் செல் வதையே பார்த்தபடி நின்று கொண் டிருந்தார் நீதிபதி பிரேம் சாகர்.

# கேட்கட்டுமா டாக்டர்?

● ப. காளிதாசன், நீர்விளங்குளம்.

*? ஒற்றைத் தலைவலி என்றால் என்ன? அதற்குச் சிகிச்சை என்ன?*

! தலையில் இடதுபக்கம் அல்லது வலதுபக்கம் வலி தொடங்கி பல மணி நேரங்களுக்குத் தொடர்ந்து விண், விண் என்று வலிக்குமானால் அதை 'ஒற்றைத்தலைவலி' (migraine) என்று கூறுவார்கள் மருத்துவர்கள். பொதுவாக, நெற்றியில் ஏதேனும் ஒரு பக்கத்தில் மட்டும் இத் தலைவலி வரும்; சிலருக்குத் தலையின் பின்பக்கத்திலும் இது வரலாம். குமட்டல், வாந்தியுடன் இந்தத் தலைவலி ஏற்படும். இத் தலைவலி இருக்கின்ற சமயத்தில் சிறிய சத்தம் கேட்டாலோ அல்லது அதிக வெளிச்சம் இருந்தாலோ அது நோயாளிக்கு எரிச்சலை ஏற்படுத்தும். சிறுவர்களுக்கு இத் தலைவலி வயிற்றில்கூட வரலாம் என்பதுதான் சுவாரஸ்யமான விஷயம். அடிக்கடி தலைவலி வருவது ஒற்றைத் தலைவலிக்குரிய சிறப்பம்சம். பெரும்பாலோருக்கு இது நாள்பட்ட வலியாக இருக்கும். இது நரம்பு தொடர்பான வலியாகும். மூளையில் 'செரட்டோனின்' (Serotonin) என்ற வேதிப் பொருளில் மாற்றம் ஏற்படும்பொழுது ஒற்றைத் தலைவலி இருந்தால் வாரிசுகளுக்கு இது வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். ஒற்றைத் தலைவலி வராமலிருக்கத் தடுப்பு மருந்துகள் உள்ளன. நரம்பியல் மருத்துவ நிபுணரிடம் நேரில் ஆலோசனை பெற்றுக் கொள்வது நல்லது.

● ஆர். பாலகுமார், செம்பனார்கோவில்.

*? பற்கள் வரிசையாகவும் ஒழுங்காகவும் சீராகவும் வளர்வதற்கு ஏதாவது பயிற்சி உள்ளதா டாக்டர்? பற்களைப் பாதுகாப்பது எப்படி?*


! பற்களின் வளர்ச்சி பரம்பரையைப் பொறுத்தது. இதற்குத் தனிப்பயிற்சி எதுவும் இல்லை. உணவுப் பழக்கமும் பல் பாதுகாப்பு முறைகளும் பற்களின் வளர்ச்சிக்கு ஓரளவிற்கு உதவும். இதோ, பற்களைப் பாதுகாக்க சில ஆலோசனைகள்: 1. தினமும் காலையில் எழுந்ததும் ஒருமுறையும் இரவு படுக்கச் செல்வதற்கு முன்பு ஒருமுறையும் பல் துலக்க வேண்டும். 2. இனிப்புகள் அதிகம் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். 3. நார்ச்சத்து மிகுந்த உணவுகள், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றைச் சாப்பிட வேண்டும். 4. உணவு சாப்பிட்ட பின் நன்றாக வாய் கொப்பளிப்பது நல்லது. 5. விரல் சூப்பும் பழக்கம் கூடாது. 6. வாய்வழி சுவாசம் ஆகாது. 7. செங்கல் தூள், நெல்உமி, சாம்பல் போன்றவற்றால் பல் துலக்கக் கூடாது. 8. ஒரு நல்ல பற்பொடி அல்லது பற்பசை கொண்டு பல் துலக்குவதே நல்லது. 9. பல் துலக்க மென்மையான பல் துலக்கியையே உபயோகிக்க வேண்டும். 10. புகை பிடிப்பது புகையிலை





## மூக்கில் ரத்தம் வருவது ஏன்?

மெல்லுவது, பான்மசாலா போடுவது, மூக்குப்பொடி உபயோகிப்பது போன்றவை பற்களுக்குக் கெடுதல் செய்யும்.



● **எஸ். எத்திராஜன், அய்யம்பாளையம்.**

*? நம் உணவில் உளுந்து அதிகம் சேர்த்துக் கொண்டால் விரைவில் செவிட்டுத்தன்மை வந்து விடும் என்று என் பாட்டி கூறுகிறார். இது உண்மையா, டாக்டர்?*

! உண்மையில்லை, எத்திராஜன். உண்மையில், உளுந்து புரதச்சத்து மிகுந்த நல்லதொரு உணவுப்பொருள்; உடல் வளர்ச்சிக்கும் வலிமைக்கும் நல்லது. செவிட்டுத்தன்மைக்கும் உளுந்து சாப்பிடுவதற்கும் அறிவியல் பூர்வமாகத் தொடர்பில்லை.

● **மனிஷா மணிமாறன், வடக்கன்குளம்.**

*? ஒரு நோய்க்குத் தரப்பட்ட மருந்தோ, டானிக்கோ மீதி இருந்தால் அதைக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்துப் பின்னால் பயன்படுத்தலாமா?*



! எல்லா மருந்துகளையும் இவ்வாறு பயன்படுத்த இயலாது. சிலவற்றை மட்டும் இவ்வாறு பயன் படுத்தலாம். (எடுத்துக்காட்டு: காய்ச்சல் மருந்து, வாந்தி மருந்து, வயிற்று வலி மருந்து) எந்த மருந்தை இப்படி பல நாட்களுக்குக் கெடாமல் பாதுகாத்துக் கொள்வது என்பதை மருந்து வாங்கியவுடன் மருத்துவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லது. பொதுவாக, பொடி போன்று இருக்கும் மருந்துகளைத் தண்ணீரில் கலந்துவிட்டால் ஒரு வாரத்திற்குள் அவற்றை உபயோகித்து விட வேண்டும். நீண்ட நாட்களுக்குப் பின்பு பயன்படுத்தினால் மருந்தின் திறன் குறைந்து விடும். அடுத்தது, எந்த மருந்தையும் – அது டானிக்காக இருந்தாலும் – அதன் காலவரையறை (expiry date) முடிந்து விட்டால் கண்டிப்பாகப் பயன்படுத்தக் கூடாது. ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். மருத்துவர்கள் மருந்தைப் பரிந்துரை செய்வது அதை உடனடியாகப் பயன்படுத்தி நோயிலிருந்து விடுதலை பெறுவதற்குத்தானே தவிர; பணத்தைப் பாதுகாப்பது போலப் பாதுகாப்பதற்கு அல்ல!

● **கோ. லக்ஷ்மி நாராயணன், அவலூர்பேட்டை.**

*? எனக்கு வயது பத்து. கடந்த ஒரு ஆண்டாக அடிக்கடி மூக்கிலிருந்து ரத்தம் ஒழுகுகிறது. எனக்குக் காயம் ஏற்பட்டால் ரத்தம் இயல்பாக உறைகிறது. மற்றபடி நான் ஆரோக்கியமாக உள்ளேன். என் பிரச்னைக்கு என்ன காரணம்? எப்படி குணப்படுத்துவது?*

! சிறுவர்களுக்கு இந்த வயதில் மூக்கிலிருந்து ரத்தம் சாதாரணமாக வடியும். இதற்குப் பல காரணங்களைக் கூறலாம். கால்சியம் சத்துக் குறைவு. மூக்கை அடிக்கடி விரலால் குடைவது, மூக்கிலிருந்து அழுக்கை எடுப்பது, மூக்கைப் பலமாகச் சிந்துவது, மூக்கில் சதை வளர்வது, சிறு கட்டிகள் வளர்வது, புண் ஏற்படுவது, ஜலதோசம் பிடிப்பது, டிப்தீரியா நோய் பாதிப்பது ஆகியவை சில முக்கியமான காரணங்கள். இவற்றில் எந்தக் காரணத்தால் உனக்கு ரத்தம் ஒழுகுகிறது என்பதைப் பரிசோதித்துத் தெரிந்து கொண்டு அதற்கேற்ப சிகிச்சை பெற்றால் முழுமையான குணம் கிடைக்கும்.

**டாக்டர் கு. கணேசன்**

# புதிர் இல்லம்



**I** மொத்தம் 48 குச்சிகள் இருக்கின்றன. இவற்றை சமமில்லாத மூன்று குவியல்களாகப் பிரிக்க வேண்டும். இரண்டாவது குவியலில் எத்தனை குச்சிகள் இருக்கின்றனவோ அத்தனை குச்சிகளை முதல் குவியலிலிருந்து எடுத்து இரண்டாவது குவியலுடன் சேர்க்க வேண்டும். பிறகு மூன்றாவது குவியலில் எத்தனை குச்சிகள் இருக்கின்றனவோ அத்தனை குச்சிகளை இரண்டாவது குவியலிலிருந்து எடுத்து மூன்றாவதுடன் சேர்க்க வேண்டும். முடிவில் முதலாவது குவியலில் எத்தனை குச்சிகள் இருக்கின்றனவோ அத்தனை குச்சிகளை மூன்றாவது குவியலிலிருந்து எடுத்து முதலாவதுடன் சேர்க்க வேண்டும். இவ்வளவும் செய்ததும் மூன்று குவியல்களிலும் 16 குச்சிகள் என சமமாகி விடுகிறது. எனில் ஆரம்பத்தில் ஒவ்வொரு குவியலிலும் எத்தனை குச்சிகள் இருந்தன?

**– பா. பவித்ரா,**
**பதினோராம் நிலை 'அ' பிரிவு,**
**அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,**
**ஆண்டிபட்டி.**

**II** ஒரு பெயரில் 6 எழுத்துகள் உள்ளன. முதல் எழுத்தும், கடைசி இரண்டு எழுத்துகளும் சேர்ந்தால் அது பெரிய மனிதர்களால் கூடப் போற்றப்படும்.

மூன்றாவது எழுத்தும் கடைசி இரண்டு எழுத்துகளும் சேர்ந்தால் அது பாதாளம் வரை செல்லும் என்பர்.

கடைசியில் உள்ள மூன்று எழுத்துகளும் சேர்ந்த வார்த்தை கணிதத்தில் உபயோகிக்கப்படுகிறது. அப்படியென்றால்

அந்தப் பெயரைக் கண்டுபிடியுங்கள்.

– சிவ. மணவழகி, திருச்சிற்றம்பலம்.

**III** பசுக்கூட்டத்தை அடுத்த ஊர் சந்தைக்கு ஓட்டிச் சென்றான் ஒருவன். வழியில் மூன்று வயல்கள் இருந்தன. பசுக்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து அந்த வயல்களில் மேய்ந்தன. அப்போது ஒவ்வொரு பிரிவில் இருந்த பசுக்களின் எண்ணிக்கை ஒற்றைப் படையில் இருந்தன.

வயல்களுக்கு அருகே ஏழு குளங்கள் இருந்தன. வயல்களில் வயிறார மேய்ந்த பசுக்கள் ஏழு பிரிவாகப் பிரிந்து ஏழு குளங்களில் நீர் குடித்தன. அப்போதும் ஒவ்வொரு பிரிவிலும் இருந்த பசுக்களின் எண்ணிக்கை ஒற்றைப்படையில் இருந்தது.

குளங்களுக்கு அருகே ஒன்பது அரச மரங்கள் இருந்தன. நீர் குடித்த பசுக்கள் ஒன்பது பிரிவாகப் பிரிந்து ஒன்பது மர நிழலில் இளைப்பாறின. அப்போதும் ஒவ்வொரு பிரிவிலும் இருந்த பசுக்களின் எண்ணிக்கை ஒற்றைப் படையிலேயே இருந்தது. அப்படியானால் பசுக்கூட்டத்தில் இருந்த பசுக்கள் மொத்தம் எத்தனை?

நூல் ஆதாரம்: கதை சொல்லும் கணக்குகள்

— புகழேந்தி, ஆறுபாதி .

**IV** எட்டு ஆறுகளைப் பயன்படுத்தி 750 விடை வரச் செய்ய வேண்டும். இதில் கூட்டல் மட்டும் உபயோகிக்கலாம்.


— இரா. கணேசன், சேலம் - 1.

**V** *45* என்ற எண்ணை நீங்கள் நான்கு பாகங்களாகப் பிரிக்க வேண்டும். எப்படி பிரிக்க வேண்டும் என்பதன் விதிமுறை: பிரித்த நான்கு பாகங்களில் ஒரு பாகத்தோடு 2ஐ கூட்ட வேண்டும். இன்னொரு பாகத்தோடு 2ஐ கழிக்க வேண்டும். இன்னொரு பாகத்தோடு 2ஐ பெருக்க வேண்டும். இன்னொரு பாகத்தை இரண்டால் வகுக்க வேண்டும். இந்த நான்கு பாகங்களையும் இவ்வாறு செய்தால் கிடைக்கும் நான்கு பாகங்களின் விடையும் சமமாக இருக்க வேண்டும்.

– மா. மணி, பன்னிரண்டாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப்பள்ளி,
செந்துறை, திண்டுக்கல் மாவட்டம்.

**VI** சுஜி தோட்டத்தில் பூ பறித்து வரும்பொழுது, எதிரே வரும் சுபாவிற்குத் தான் பறித்த பூக்களில் பாதியைத் தருகிறாள். பின்பு சுஜி, சுபாவிடமிருந்து ஒரு பூவை வாங்கிக் கொள்கின்றாள். பின்பு சுஜி, நந்தினிக்குத் தான் வைத்திருக்கும் பூக்களில் பாதியைத் தந்துவிட்டு, அதிலிருந்து ஒரு பூவை எடுக்கிறாள். வீட்டிற்கு வந்து எண்ணிப் பார்த்தால் சுஜியிடம், முதலில் பறித்த பூக்களின் எண்ணிக்கையே உள்ளது. எனில் சுஜி எத்தனை பூக்களைப் பறித்தாள்?

– எஸ். பிரியா, ஆண்டிபட்டி



## விடைகள்

I முதற் குவியல் 22
இரண்டாம் குவியல் 14
மூன்றாம் குவியல் 12

II கும்பகோணம்

III மொத்தப் பசுக்களின் எண்ணிக்கை : 945
ஒவ்வொரு வயலிலும் மேய்ந்த பசுக்களின் எண்ணிக்கை : 315
ஒவ்வொரு குளத்திலும் நீர் குடித்த பசுக்களின் எண்ணிக்கை : 135
ஒவ்வொரு மர நிழலிலும் இளைப்பாறிய பசுக்களின் எண்ணிக்கை: 105

IV 666+66+6+6+6 = 750

V 8, 12,5, 20

8+2 = 10
12-2 = 10
5 x 2 = 10
20 ÷ 2 = 10

VI சுஜி பறித்தது 2 பூக்கள்



கோசல நாட்டில் தேவதத்தன் என்பவன் குழந்தை பாக்கியம் வேண்டி ஒரு பெரிய யாகம் செய்தான். ருக், யஜூர், சாம வேதங்களை ஓத அந்தந்த வேதத்தில் திறமையானவர்களைத் தேடிப் பிடித்தான்.

அதில் சாம வேதம் சொன்ன கோபி வயதானவர். ஆஸ்துமா வேறு அவரை இம்சைப்படுத்தியதால் அவரால் உரக்க மூச்சு விடாமல் சொல்ல முடியவில்லை!

தேவதத்தனுக்குக் கோபம் வந்தது.

"கோபிலரே! தட்சணையைக் குறைத்துக் கொடுத்தால் திருப்தியோடு போவீரா? உரக்கச் சொல்லும். சுவாசம் விடாமல் சொல்ல வேண்டும் என்று தெரியாத மூடர்களெல்லாம் ஏன் சாம வேதம் சொல்ல வேண்டும்?" என்றான்.

அவ்வளவுதான்! கோபிலருக்கும் கோபம் வந்து விட்டது.

"மூடன் என்று என்னை நிந்தித்த உனக்கு மூடனாகவே பிள்ளை பிறப்பான். நான் மூச்சு

# சத்தியம்

விட்டு வேதம் சொல்கிறேன் என்று ஏசிய உனக்கு ஊமையாகவே பிள்ளை பிறக்கக்கடவது! வேத சிரோமணிகளிடம் செல்வம் இருக்கும் திமிரில் முரட்டுத்தனமாக நடந்து கொண்டதால் உன் பிள்ளையும் முரடனாகவே இருப்பான்" என்று சரமாரியாக சபித்து விட்டார்.

**ஆர். பொன்னம்மாள்**

தேவதத்தன் தன் தவறை உணர்ந்து கோபிலர் பாதங்களில் விழுந்து வணங்கினான்.

"முனி சிரேஷ்டரே! குல விருத்திக்காக ஹோமம் செய்கிறேன். அதன் பலனாகப் பிறக்கும் பிள்ளை முரடனாக, முட்டாளாக, ஊமையாக இருந்தால் என்ன பிரயோஜனம். பெரிய மனது பண்ணி சாபத்தை மாற்ற வேண்டும்" என்று கெஞ்சினான்.

முனிவரும் கோபம் தணிந்து "தேவதத்தா! மூடனாக, முரடனாக, ஊமையாகப் பிறக்கும் பிள்ளை பிற்காலத்தில் உலகமே புகழும் பண்டிதனாக, சாதுவாக, சத்திய சொரூபியாக விளங்குவான்'' என்று சாபத்தைத் திருத்தினார். மற்ற முனிவர்களும் சந்தோஷத்தோடு யாகத்தைப் பூர்த்தி செய்தனர்.

**யா**கம் முடிந்த அடுத்த வருஷமே தேவ தத்தனின் மனைவி ரோகிணி, ரோகிணி நட்சத்திரத்தில் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

அதற்கு உதத்தியன் என்று பெயர் சூட்டி அன்போடு வளர்த்தனர். அவன் முனிவர் சொன்னபடி ஊமையாக, மூடனாக, முரடனாக இருந்தான்.

தனது சைகையைப் பெற்றோர் புரிந்து கொள்ளாதபோது அருகிலிருப்பதை


# தந்த பரிசு

எடுத்து வீசி எறிவான். தெருவிலிருந்து மண்ணைக் கொண்டு வந்து சாப்பாட்டில் வீசுவான். துணிகளைக் கிழிப்பான். வெளியே விளையாட அனுப்பினால் மற்ற பையன்களின் ஏளனம் தாங்க முடியாததாக இருந்தது.

''உதத்தியா! வடை வேணும்னா எப்படிக் கேட்பே?'' என்பான் ஒருவன்.

உதத்தியன் உள்ளங் கையில் தட்டிக் காண்பித்தால் 'ஓட்டை போட்ட வடையா, ஓட்டை போடாத வடையா என்று சொல்ல வேண்டாமா?'' என் பார்கள்.

"உதத்தியா! கரும்பு வேணுமின்னா





"டாக்டர்! காதுல ரயில் ஓடற மாதிரி சத்தம் கேட்குது. சில சமயத்துல சத்தமே கேக்குறது இல்லை, ஏன் டாக்டர்?"

"ஏதாவது ஸ்டேசன்ல நின்னிருக்கும்!"

—ஆர். ராதிகா

துணி உலர்த்துகிற கம்பைக் காண்பிப்பாயா?" என்று ஒருவன் கிண்டலடிப்பான்.

"நாங்க சடுகுடு விளையாடப் போறோம். உனக்குப் பதிலா யாராவது 'தம்' பிடிச்சு பாடறாங்களான்னு கேளு" என்று உசுப்பி விடுவான் ஒருவன்.

இதையெல்லாம் கேட்ட பெற்றோர் மனம் வெதும்பி அவனை வெளியிலேயே விடாமல் வாசற் கதவைப் பூட்டி வைத்தனர்.

எட்டு வயதில் அவனுக்கு உபநயனம் செய்வித்தனர். பூணூல் போட்டால் மறுபிறவிக்குச் சமம். பேசுவானா என்று எதிர் பார்த்து ஏமாந்தனர்.

"இப்படி ஒரு பிள்ளை பிறந்து ஊரார் முன் தலை குனிவதற்குப் பதில் நான் மலடியாகவே இருந்திருக்கலாம்" என்று நொந்துகொண்டாள் ரோகிணி.

"யாகம் நடத்தாமலிருந்தால் யாகப் பணமாவது மிச்சமாயிருந்திருக்கும்! ஒரு எருமையை வாங்கி தீனி போட்டிருந்தால் பாலும் தயிரும் வெண்ணையும் நெய்யுமாவது கிடைத்திருக்கும்" என்று சலித்துக்கொண்டான் தேவதத்தன்.

தெரியாமல் வெளியே போவான் உதத்தியன். "கழுத்தை நெரித்துக் கொன்று விடுவேன்; கண் காணாத இடத்திலே கொண்டு விட்டு விடுவேன்; சங்கிலி போட்டுதான் கட்டி வைக்கணும்" என்றெல்லாம் மிரட்டினார் தேவதத்தன்.

பன்னிரண்டாவது வயதில் பெற்றோர் உறங்கும்போது வீட்டை விட்டுப் போய் விட்டான் உதத்தியன். கங்கைக் கரையில் ஒரு குடிசை கட்டிக் கொண்டு வாழ்ந்தான்.

"போன தடவை வந்தப்போ இந்தப் பையனைப் பார்க்கலையே! இவன் யாரு?" என்று கேட்டார் உதத்தியன் குடிசைக்கு அடுத்த குடிசைக்கு வந்த விருந்தாளி.

"பையன் ரொம்ப நல்லவன். ஆனா ஊமை. பொய்யே பேச மாட்டான். சொந்தக்காரங்க யாரும் இருக்காங்களான்னு கேட்டா ஆகாயத்தைப் பார்க்கறான். அனாதை போலிருக்கு" என்றாள் வீட்டுக்குடையவள்.

"பையன் ஊமைங்கறே! பொய் பேச மாட்டாங்கறே! எப்படி?"

"அதுவா! ஒரு தடவை ராமப்பனுக்குன்னு ரெண்டு போளி வைச்சிருந்தேன். நான் விறகொடிக்கப் போனப்போ செல்வி வந்து அதைத் தின்னுட்டுப் போயிருக்கா. நான் ஒவ்வொருத்தரையா விசாரிச்சேனா! ரெண்டு நாள் கழிச்சு செல்வி வந்தப்போ இந்தப் பையன் இழுத்துட்டு வந்து கை ஜாடையாலேயே விளக்கமா புரிய வைச்சுடுச்சு! இப்படி நிறைய சமாசாரம் நடந்திருக்கு. அதனாலே நாங்களா இவனுக்கு சத்தியவிரதன்னு பேரு வைச்சிருக்கோம். நீயும் அப்படியே கூப்பிடு" என்றாள் அவள்.

"காலையிலே எழுந்து பல் தேய்ச்சு குளிக்குது. மரத்திலே இருக்கிற பழங்களைத் தின்னுது. மரக்கட்டை மாதிரி தூங்குது. ஒருவேலை வெட்டிக்குப் போறதில்லே" என்றான் அவள் புருஷன்.

"அது மட்டுமல்ல... யார் எது கொடுத்தாலும் வாங்கிச் சாப்பிடுவதுமில்லை!"

ஒருநாள் பன்றி ஒன்று அம்பு தைத்த உடலோடு இரத்தம் ஒழுக ஓடி வந்தது. உதத்தியனைப் பரிதாபமாகப்

பார்த்துவிட்டு அருகிலிருந்த புதரில் ஓடி மறைந்தது.

பன்றியின் கோரக் காயம் கண்டு மனம் கலங்கி "ஹரு, ஹரு' என்று கூச்சலிட்டான் உதத்தியன். அதை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்று அவன் மனம் துடித்தது.

'ஹ்ரூம்' என்பது அம்பிகையின் மந்திர சத்தம். அவனது இரக்கமும் அன்பும் கண்டு தேவி அவனுக்குப் பேச அருள் புரிந்தாள்.

அப்போது உடல் பெருத்த கரிய வேடன் ஒருவன் அங்கே வந்தான்.

"சத்தியவிரதா! பன்றியின் இரத்தம் கீழே சிந்தி இருக்கிறதே! அது இங்கே வந்ததா?" என்று கேட்டான்.

தேவியின் அருளால் உதத்தியன் பேசினான். 'யா பஸ் யதி' என்ற ஸ்லோகத்தைச் சொன்னான். உதத்தியன் பொய் சொல்லவும் விரும்பவில்லை. பன்றியைக் காட்டிக் கொடுக்கவும் மனமில்லை. அந்த ஸ்லோகத்தின் பொருள்:

"'கண்டவன் சொன்னதில்லை;
சொன்னவன் கண்டதில்லை!
நீ உடலின் பலனையே கருதுகின்றாய்!
இது பெரிய விந்தை!" என்பதே.

**உள**மை என்று நினைத்துக் கொண்டிருந்த சத்தியவிரதன் வடமொழி சுலோகம் சொல்லவும் வேடன் திடுக்கிட்டான். பயந்து போய் வந்த வழியே திரும்பிப் போனான்.

வேடன் மூலமாக ஊரெல்லாம் இச்செய்தி பரவியது. முன்பு தந்தை சொல்லிக் கொடுத்த வேத மந்திரங்கள் உதத்தியன் நினைவுக்கு வந்தன. அவனிடம் காட்டு வாசிகள் தங்கள் கஷ்டங்களைச் சொல்லி நிவாரணம் கேட்டார்கள். அவன் சொன்னபடி செய்தவர்கள் கஷ்டத்திலிருந்து மீண்டார்கள். அவன் புகழ் கேட்டு செல்வந்தர்களும் வித்வான்களும் அவன் பெற்றோர்களும் வந்தார்கள்.

அவனைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்று அன்புடன் நடத்தினர் பெற்றோர்.

சத்தியவிரதனும் ஸ்ரீவித்யையை விதிமுறைப்படி ஜபித்து தேவியின் அருளுக்குப் பாத்திரமாகி பெருமை பெற்றான்.

# குறுக்கெழுத்துப் புதிர் விடை!



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆ | ஸ் | தி | 2 ரே | லி | 3 யா | ■ | ண் | 4 க |
| க | ■ | ■ | வ | ■ | 5 க | னி | ■ | வ |
| ஸ் | ■ | ■ | தி | ■ | ம் | ■ | ■ | ச |
| ட் | ஸ் | 6 ஈ | ■ | 7 ந | ■ | 8 வ | ன | ம் |
| ■ | ■ | ■ | 9 அ | ன் | பு | ■ | ■ | ■ |
| 10 சு | வ | ர் | ■ | றி | ■ | 11 கு | ரு | தி |
| ர | ■ | ■ | 12 பா | ■ | தா | ■ | ■ | வ |
| வ | ■ | ரி | 13 க | ■ | த் | ■ | ■ | ர் |
| 14 பூ | னை | ■ | ன் | ச | 15 தா | தி | ர | 16 பா |







இன்று மனிதர்கள் இயந்திரத்தனமாக இயங்கிக் கொண்டிருப்பதால் எதற்கெடுத்தாலும் ஒரே டென்ஷன் தான். சற்று ஓய்வு எடுக்கலாம் என்றால் கூட இடமில்லை. ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்களுக்குச் செல்வதற்கு வசதி இல்லை. அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம், தென்னை மரங்கள் நிறைந்த பசுஞ்சோலையில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை கடல். இதமான தென்றல் காற்று, ஐந்து நிமிடம் அமர்ந்திருந்தாலே அத்தனை களைப்பும் காணாமல் போய்விடும். இப்படிப்பட்ட பசுமையான கிராமம் குமரியின் தென்பகுதி

## எங்கள் ஊருக்கு வாருங்கள்!

யில் உள்ளது.

இதிகாச காலத்துடன் தொடர்புகொண்ட வரலாற்றுச்

# சீதையைச் சிறை வைத்த இடம்!

சிறப்புமிக்க கிராமம். சீதாபிராட்டி முகம் பதித்து அழுத இடம் இங்குள்ளது. மன்னர்கள் வாழ்ந்து சிறப்புற்ற பகுதி, முனிவர்கள் வாழ்ந்து ஆன்மீகம் வளர்த்த இடம். அது முன்சிறை கிராமம்தான்.

மார்த்தாண்டத்திலிருந்து சுமார் ஏழு கிலோ மீட்டருக்கு அப்பால் முன்சிறை கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்துக்குள் நாம் நுழையும் போதே நம்மை வரவேற்பது தென்னை மரங்களே. அதைத் தொடர்ந்து பாறைக் கூட்டங்கள் மிகுந்து கிடக்கின்றன. சீதையை ராவணன் அசோகவனத்தில் சிறை வைக்க புஷ்பக விமானத்தில் கடத்திச் சென்றான். அப்பொழுது புஷ்பக விமானம் திடீரென பழுதடைந்து தரையில் இறங்கியதாம். இப்பகுதியில் தான் சீதையை ராவணன் முதன் முதலில் சிறை வைத்தான். ஆதலால்தான் இந்தப் பகுதிக்கு முன்சிறை எனப் பெயர் வந்ததாம்! சீதையின் கண்கள் கயல்விழி போன்று இருக்குமாம். ராவணன் சீதையை முன்சிறையில் சிறை வைத்ததால் சீதை பாறையின் மேல் முகம் பதித்து அழுதுள்ளார். சீதையின் கண்கள் பதிந்த இடங்களில் அழகிய கண்கள் வடிவில் இரண்டு நீள்வட்டக்குழிகள் உள்ளன.

இந்தக் குழிகளில் தண்ணீர் வற்றியதே கிடையாது. வறட்சிக்காலங்களிலும் தண்ணீர் இருக்கும். இந்தக் குழிகளின் ஆழம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்தப் பகுதியின் மேல் பகுதியில் அழகிய இரண்டு தடங்கள் உள்ளன. இந்தத் தடங்கள் சீதாபிராட்டியை ராவணன் தேரில் கொண்டு சென்ற தடங்களாகக் கருதப்படுகிறது.

அருகில் அழகிய குளம் ஒன்று உள்ளது. இந்தக் குளத்தில் சீதாபிராட்டி குளித்ததாகக் கூறப்படுகிறது.

இங்குள்ள பாறையின் மேல் பகுதியில் மூலிகைகள் அதிகம் கிடைக்கின்றன. அதனால்தான் இந்தப் பகுதியில் சென்றாலே சில்லென்று அடிக்கும் குளிர் காற்றுடன் மூலிகை மணமும் மூக்கைத் துளைக்கிறது. இதனால் உடம்புக்


கும் நல்லது. இங்கு ஒரு சித்தமருத்துவக் கல்லூரியும் இயங்கி வருகிறது. இந்தப் பாறையின் அருகில் தான் முன்சிறை திருமலை மகாதேவர் கோயில் உள்ளது. குமரிமாவட்டத்தில் உள்ள பன்னிரு சிவாலயங்களில் முதல் கோயிலாக இந்தக் கோயில் கருதப்படுகிறது.

சீதையைப் பிரிந்த ராமனும் இலக்குவனனும் இந்த ஆலயத்தில் வந்து வழிபட்ட பிறகே இவர்களின் தேடும் படலம் துரிதமாக நடந்ததாகக் கூறப்படுகிறது.



இந்தக்கிராமத்தின் அருகேதான் சரித்திரப் புகழ் வாய்ந்த பார்த்திவபுரம் பார்த்தசாரதி கோயில் அமைந்துள்ளது.

**– எஸ். சில்ஜா அஸ்னி,**
**ஒன்பதாம் வகுப்பு,**
**அ.மே.நி.பள்ளி,**
**முன்சிறை.**



எங்கள் ஊர் மதுரைக்கு மேற்கே 20 கி.மீ. தூரத்தில் உள்ளது. வைகைக் கரையின் வலப்பக்கம் அமைந்துள்ளது. இங்கு நாகமலை எனும் மலைத் தொடர் உள்ளது. இம்மலையில் மழைக் காலங்களில் நீர் ஊற்று ஓடும். இம்மலைகளில் சமணர்கள் குகைகளில் வாழ்ந்து வந்தனர் என்பர்.

இங்கு குளத்தில் தாமரை இலைகளும், அல்லி, மீன்களும் உள்ளன. தென்னை, வாழை, நெற்கதிர், பயறு வகைகள், பூக்கள், கருணை, கரும்பு போன்ற பலதரப்பட்ட பயிர்கள் பயிரிடப்படுகின்றன. எங்கள் ஊரில் இந்து, கிறிஸ்து, முஸ்லிம் ஆகிய மூன்று மதங்களுக்கும் ஆலயம் உண்டு. இதில் இந்துக்கள் கிறித்துவ ஆலயத்திற்கும், முஸ்லிம், கிறிஸ்த்தவர்கள், இந்துக்கள் ஆலயத்திற்கும் சென்று வழிபடுவது உண்டு.

இங்கு குதிரையெடுப்பு எனும் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இங்கு செய்யப்படும் குதிரைகள் மிகப் பெரியதாக இருக்கும். தென் மாவட்டங்களிலே எங்கள் ஊர் குதிரையெடுப்பு மிகச் சிறப்பு வாய்ந்தது. இந்தக் குதிரையெடுப்பு விழாவிற்கு மூன்று மாதங்களுக்கு முன் பிடிமண் எனும் உறுதி செய்தல் நடைபெறும். பின் 2 மாதங்கள், குதிரை, சாமி சிலைகள், நேர்த்தி கடன் எனும் சிறு குதிரைகள் என பல வகையான சிலைகள் செய்து முடிப்பர். இத்திருவிழாவானது ஜூன் 5லிருந்து 7ஆம் தேதி வரை நடைபெறுகிறது. 5ம் தேதி அம்மச்சியம்மன் மாவிளக்கு பூஜைகளும் 6ம் தேதி குதிரை ஊர்வலம் செல்லுதலும் 7ம்தேதி கணவாய் கருப்பண சுவாமிக்குப் பொங்கல் வைத்தல் ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

எங்கள் ஊரைச் சுற்றியுள்ள அழகிய மலைகளில் நாகர் தீர்த்தம் எனும் தீர்த்தக்கரை உள்ளது. நாகர் தீர்த்தத்தில், ராக்கு எனும் அம்மனும் புற்றுகளும் உள்ளன. இங்கு ஆடி அமாவாசை அன்று திருவிழா நடைபெறும். அன்று புனித நாளாக மக்கள் அனைவரும் தீர்த்தமாடி மகிழ்வர். மாத பௌர்ணமி பூஜைக்கும் கணக்கில் அடங்கா மக்கள் வெள்ளம் திரள்வர். இதற்கு மேற்கே நாராயணபுரம் எனும் சிற்றூரில் ஊற்று எனும் இடம் உள்ளது. இங்கு எதிலிருந்து நீர் வருகிறது என்றே இன்னும் கண்டுபிடிக்



மூன்றாம் ஜார்ஜ் மன்னர் ஒருநாள் மாறுவேடம் பூண்டு தம் நாட்டைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார். கோதுமை வயல் வெளிக்கு அவர் வந்தபோது, அங்கே ஒரு பெண் மட்டும் வேலை செய்து கொண்டிருந்தாள். அரசர் வியப்புற்று அவளிடம், ''மற்றவர்கள் எல்லாம் எங்கே? நீ மட்டும் வேலை செய்கிறாய்?'' என்றார். உடனே அவள், ''அரசர் பவனி வருவதைப் பார்க்க எல்லோரும் சென்றிருக்கிறார்கள்'' என்றாள். ''அப்படியானால் நீ ஏன் போகவில்லை?'' என்றார். ''அந்த முட்டாள்களைப் போல் நான் வேடிக்கை பார்க்கப் போனால் கூலி கிடைக்குமா? வேலைதான் எனக்கு முக்கியம்; வேடிக்கையல்ல'' என்றாள். உடனே அரசர் அவளிடம், தங்க நாணயத்தைக் கொடுத்து, ''மற்றவர்கள் அரசரைப் பார்க்கப் போனார்கள். ஆனால் அரசர் உன்னைப் பார்த்துச் சென்றார் என்று சொல்'' என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்.

— டி.எஸ். பாலு

கப்படவில்லை!

ஆதிகாலத்தில் தவறு செய்தவர்களை நீண்ட கழு மரத்தில் ஏற்றி துன்பத்திற்கு ஆளாக்குவர். இதனால் கழுமரத்தின் மேல் என்பது மேலக்கழுகாகி மேலக்கால் என மருவி வழங்கப்பட்டுகிறது எங்கள் ஊர்.

வைகைக் கரையின் இடது புறம் அமைந் துள்ளது திருஏடகம். ஏடு என்றால் ஓலை. சமணர்கள் எதிரிகளுக்காக தாங்கள் எழுதின ஓலைச் சுவடியை ஆற்றில் விட்டுச் சென்றனர். அந்த ஓலைச் சுவடியானது ஆற்றில் நீர் செல்லும் வழியே செல்லாமல் நீரை எதிர்த்துச் சென்றது. அவ்வாறு செல்லும் சுவடியை ஏடகம் எனும் ஊரில் தான் எடுக்க முடிந்தது. இதனால் ஏடு, திரு என்ற அடைமொழியுடன் திருவேடகம் ஆயிற்று. இதனை நினைவூட்டுவதுபோல் ஏடகநாதரும், ஏலவார் குழலி அம்மனும் உறையும் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இது புனிதத் தலமாக தற்போது உள்ளது. இங்கு பல பகுதி மக்களும் ஆற்றில் நீராடி ஏடகநாதரை தரிசிக்கின்றனர்.

— எஸ். வனிதா,
எட்டாம் வகுப்பு,
ஆர். கோபிநாத், ஐந்தாம் வகுப்பு,
மேலக்கால் அஞ்சல்,
மதுரைமாவட்டம்.

கொங்கு மாநகரம் என்று எல்லோராலும் அழைக்கப்படுகின்ற கோவை மாநகரம் தான் எங்களின் ஊர். இயற்கையின் அருள் பெற்றது. மலைகள் சூழ்ந்த நகரம். சற்று குளுமையான நகரமும் கூட. தொழிற்சாலைகள் நகரம் என்றும் கூறுவர்.

இந்தியாவிலேயே மிக நீளமான புறவழிச்சாலை உள்ள இடம் எங்கள் கோவை மாநகரம்.

தென் இந்தியாவிலேயே மிகவும் உயரமான விநாயகர் எங்கள் ஊரில்தான் உள்ளது.

செங்கற்களாலும், சிமெண்ட்டினாலும் செய்யப்பட்ட மிகப் பெரிய நந்தி நவக்கரை என்னும் இடத்தில் உள்ளது.

இங்கு மிகவும் சுவையான தண்ணீர் (சிறுவாணி குடிநீர்) கிடைக்கிறது.

'தென்னிந்தியாவின் மான்செஸ்டர்' என்ற பெருமை எங்கள் கோவை மாநகருக்கு உண்டு.


'ஏழைகளின் ஊட்டி' என்ற சிறப்புப் பெயர் கொண்ட மாநகரம் எங்கள் கோவை தான். ஊட்டி இங்கிருந்து பக்கம் தான்.

தமிழ்நாட்டில் எங்கள் ஊரில் மட்டும்தான் மிகப் பெரிய விவசாயப் பல்கலைக்கழகம் இயங்குகின்றது.

தியாகி வ.உ. சிதம்பரம் பிள்ளையின் பெயரால் இயங்கும் 'வ.உ.சி.பூங்கா' உள்ளது.

இது தவிர பினாக் தண்டர் என்ற பொழுது போக்கு பூங்காவும் உண்டு.

— கே. விசாலாட்சி
பன்னிரண்டாம் வகுப்பு,
கோவை– 9.




# கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ப்ரியா, பிரசாத் போல் நீங்களும் உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கோகுலத்தை அன்பளிப்பாக வழங்கலாமே! கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

**பெயர் :** ..............................................................................................

**முகவரி :** ..............................................................................................

..............................................................................................

..............................................................................................

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை **'Gokulam Tamil'** என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

**சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)**
**47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.**

# யார்

நீலவானம் பளிச்சென்று பளிங்கு போல் காட்சி யளித்துக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்தில் யானைக் கூட்டம் வருவது போல் கார்மேகக் கூட்டம் சிறுகச் சிறுக வந்து வானத்தை முற்றுகையிடத் துவங்கியது. வானம் இருண்டது.

பளீர் மின்னல் கண்ணைப் பறித்தது. படார்... படார்... இடியோசை காதைத் துளைத்தது. சோவென்று மழை பெய்ய ஆரம்பித்தது.

கார் மேகம் தன் கடமையைச் செய்து கொண்டிருந்தது. அச்சமயம் திடீரென்று வானத்தின் ஒரு மூலையிலிருந்து. 'ஹா, ஹா, ஹா' என்று பயங்கரமான சிரிப்பொலி காது செவிடு ஆகும்படியாகக் கேட்டது.

பயந்து மிரண்ட கார்மேகம் "யாரடா அது. இப்படி பேய்ச் சிரிப்புச் சிரிப்பது? நான் பயப்படமாட்டேன். ஜாக்கிரதை" என்றது.

"என்னடா சொன்னாய்... என்னை யார் என்றா கேட்கிறாய்? மரியாதையாகப் பேசு. இல்லாவிட்டால் என்ன நடக்கும் தெரியுமா?" சிரிப்பொலி வந்த திசையிலிருந்து கோபக் கனல் பொங்க வார்த்தைகள் ராக்கெட் வேகத்தில் வந்தன.


"என்ன நடக்கும்? நடப்பது நடக்கட்டும்..." கார்மேகம் கடுஞ் சினத்தோடு கூறியது.

அவ்வளவுதான்... பயங்கரமான ஆக்ரோஷத்தோடு புயல் காற்று சீறிப் பாய்ந்தது. "நான்தான்டா சிரித்தேன்" என்று கத்திக் கொண்டே படுவேகமாகக் காற்று வீசவே மேகக் கூட்டம், காற்றின் வேகத்தோடு போட்டி போட முடியாமல் நகர்ந்து வேறுபக்கம் போய்க் கொண்டிருந்தது.

கொட்டும் மழை ஒரு பக்கம். சூறாவளி புயல் காற்று ஒரு பக்கம். காட்டாறு போல் நுரையைக் கக்கிக் கொண்டு வெள்ளம் ஊருக்குள் கரை புரண்டோடியது. இருவருக்கும் நடந்த சண்டையால் அந்த ஊரே அழிந்து விடும் போலிருந்தது.

இதையெல்லாம் சூரியன் பார்த்துக் கொண்டிருந்தது. "டேய், பசங்களா உங்க சண்டையை நிறுத்துங்கள். உங்க சண்டையால் அநியாயமாக ஆயிரக் கணக்கான உயிர்கள் பலியாகிவிடும் போலிருக்கிறதே. அப்பா புயல் சாமி... நீ காற்று வீசியது போதும் நிறுத்து... டேய், மழையப்பா நீ தண்ணீரை இஷ்டத்துக்கு வாரிக் கொட்டியது போதும். இரண்டு பேரும் சமாதானமாகிவிட்டு





# பலசாலி?

கொஞ்ச நேரம் ஒய்வு பெறுங்கள். உங்கள் பிரச்னை என்னவென்று என்னிடம் சொல்லுங்கள். வன்முறையில் எப்பொழுதும் பிரச்னை தீராது. அமைதியாக பேசித் தீர்ப்போம். பொறுமையாய் இருங்கள். சிறிது நேரம் கழித்து நீங்கள் இரண்டு பேரும் என்னை வந்து சந்தியுங்கள்'' என்றது சூரியன்.

''ஆகட்டும் பிரபோ! எங்களை மன்னியுங்கள்'' என்று காற்றும் மழையும் சமாதானமாய்ப் பிரிந்தன.

புயலும் ஒய்ந்தது. மழையும் ஒய்ந்தது. எங்கும் பரிபூரண அமைதி நிலவியது.

சிறிது நேரம் ஆயிற்று. சூரியன் முன் காற்றும் மழையும் தோன்றின.

''வாருங்கள்... வாருங்கள்... வணக்கம். உங்களுடைய பிரச்னையைச் சொல்லுங்கள்... காற்றே முதலில் ஆரம்பி'' என்றது சூரியன்.

''பிரபோ நமக்குள் யார் பலசாலி என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்பது என்னுடைய ஆசை. அதனால்தான் மழையோடு நான் மோதிப் பார்த்தேன்'' என்றது காற்று.

''ப்பூ.. இவ்வளவுதானா... மழையே நீ என்ன சொல்கிறாய்?'' - சூரியன்.

''எனக்கும் யார் பலசாலி என்று தெரிந்து கொள்ள ஆசைதான் பிரபோ!''

இரண்டு பேரின் கருத்தைக் கேட்டபின், பிடிவாதம் பிடித்த அவர்கள் இருவருக்கும் சரியான பாடம் புகட்ட வேண்டும் என்று விரும்பியது சூரியன். ''சரி அப்படியா... நான் இதற்கு ஒரு யோசனை சொல்கிறேன். அதைக் கேளுங்கள்.''

''நான் மிகச் சாதாரணமானவன். இந்த எளியோனை உங்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளுங்கள். இப்பொழுது மூன்று பேருக்கும் ஒரு போட்டி வைக்கலாம். அதில் யார் பலசாலி என்பதைக் கண்டுபிடிக்கலாம். என்ன சொல்கிறீர்கள்?'' என்றது சூரியன்.

இரண்டும் என்ன பதில் சொல்வது என்று சிறிது நேரம் தயங்கின. சூரியன் லேசாகப் புன்னகை மலர ''என்ன சரிதானா?'' என்றது. இரண்டும் சரி என்பதற்கு அடையாளமாய்த் தலையாட்டின.

''போட்டி என்னவென்று சொல்கிறேன். கவனமாகக் கேளுங்கள். அதோ பூலோகத்தில் ஒரு மனிதன் போவதைப் பாருங்கள். அந்த ஆள் கட்டியிருக்கும் முண்டாக,



**காரமடை துரை.முருகேசன்**

மேலாடை, கோட்டு இவற்றையெல்லாம் உங்கள் பலத்தைக் காட்டி அவனையே அவிழ்க்கச் செய்ய வேண்டும். யார் அந்த ஆளின் மேலாடையை அவிழ்க்கும் முயற்சியில் வெற்றி பெறுகிறாரோ அவரே பலசாலி. என்ன போட்டிக்குத் தயாரா?" என்றது சூரியன்.

"ஆகட்டும் பிரபோ" என்றன காற்றும், மழையும்.

"சரி முதலில் காற்றே! நீ திறமையைக் காட்டு. ஒருவருக்கு ஐந்து நிமிடம் மட்டுமே கொடுப்பேன். போட்டி விதியின்படி நடக்க வேண்டும்" என்று கட்டளை யிட்டது சூரியன்.

**கா**ற்று அந்த ஆளைக் குறி வைத்து தன் வேலையை ஆரம்பித்தது. 'விர்... விர்... சொய்ய்... சொய்ய்...' என்று பலமாகப் புயல்போல சீறிப் பாய்ந்தது. புழுதிக் காற்றும் சுழற் காற்றும் சுழன்று சுழன்று அடித்தன.

ஊரின் நடுவே ஒரு பாதை வழியாக வந்து கொண்டிருந்த அந்த ஆசாமி பயங்கரமான காற்றைக் கண்டு பயந்து நடுங்கிக் கொண்டே, துணிகளை ஜாக்கிரதையாகப் பிடித்துக் கொண்டு தலை தெறிக்க ஓடினான், ஓடினான் காற்று வேகத்தில். ஒரு வீட்டுக்குள் சரேலென நுழைந்து பத்திரமாக ஒளிந்து கொண்டான். ஐந்து நிமிடமாயிற்று. காற்று தோல்வி அடைந்தது.

சற்று நேரம் கழித்து அந்த ஆள் வீட்டைவிட்டு வெளியே வந்தான். அவன் வருவதைப் பார்த்ததும், உடனே மழை சோவென்று அவன்மீது தண்ணீரை வாரிக் கொட்டியது. அவன் கையிலிருந்த குடையை விரித்துப் பிடித்துக் கொண்டு மறுபடியும் வேகமாக ஓடி ஒரு வீட்டிற்குள் நுழைந்து கொண்டான். மழையாலும் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஐந்து நிமிடமாயிற்று. மழையும் தோல்வி அடைந்தது.

**சூ**ரியன் பலமாகச் சிரித்தது. "இப்பொழுது பாருங்கள் என்னுடைய வேலையை" என்று, சுட்டெரிக்கும் வெயிலைப் பலமாக அவன்மீது பாய்ச்சியது.

அந்த ஆசாமியால் நெருப்பாய் எரியும் வெய்யிலைத் தாங்க முடியவில்லை. புழுக்கம் அதிகரித்தது.

அதைத் தாங்க முடியாமல் அந்த ஆள் தன் மேலாடைகளை ஒவ்வொன்றாகக் கழற்றியபடி ஒரு மரத்தடியில் வந்து உட்கார்ந்தான். உடலெங்கும் வியர்வை வியர்த்துக் கொட்டியது. "இப்பொழுது பார்த்தீர்களா? போட்டியில் நான்தானே ஜெயித்தேன்" என்று சூரியன் வெற்றிச் சிரிப்புச் சிரித்தது.

மழையும் காற்றும் கர்வம் அடங்கி "நீங்களே பலசாலி" என்று கைதட்டி ஆரவாரம் செய்தன.



## பண்பு மிக்கவர்!

**நெ**ப்போலியன் ஒருமுறை தன்னுடைய தளபதியின் இல்லத்திற்குச் சென்றார். தளபதியோ தன் மனைவி மக்களோடு உரையாடிக் கொண்டிருந்தார். நெப்போலியனைக் கண்டதும் தளபதி மரியாதைக்காக எழுந்தார்.

அப்போது நெப்போலியன், "உங்களுடைய பிள்ளைகளுக்கு உங்களைவிட உயர்ந்தவர்கள் வேறு எவருமில்லை. அதனால் அவர்கள் எதிரில் எழுந்து எனக்கு மரியாதை செய்ய வேண்டாம்" என்று சொன்னார். அந்த மாவீரனுக்குத்தான் எத்தனை உயர் பண்பு!

- டி.எஸ்.பாலு




# சாக்லேட் பல்லுக்குக் கெடுதலா?

நம் உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்புக்கும் முக்கியத்துவம் இருக்கிறது. அதுபோல் 'பல்'லுக்கும் முக்கியத்துவம் உண்டு. 'பல் போனால் சொல் போச்சு' என்பார்கள். பேசுவதற்கு மட்டுமின்றி உணவை மென்று ஜீரணத்திற்கும் உதவுகிறது; முகத்திற்கு நல்ல உருவ அமைப்பையும் கொடுக்கிறது.

நமக்கேற்படும் பல நோய்கள் பற்களைச் சரியாகப் பாதுகாக்காமல் இருப்பதாலேயே ஏற்படுகின்றன. பற்களைப் பாதுகாப்பது என்பது








"நான் 200 கிலோ எடை தூக்கினேன்."
" அ'பாரம்'!."
– சாயம் வெ. ராஜாராமன்

ரொம்பக் கஷ்டமான காரியம் ஒன்றும் கிடையாது.

தினமும் காலை, இரவு என இரு வேளையும் பல் துலக்க வேண்டும். பல்லை பேஸ்ட், பற்பொடியை உபயோகித்து பிரஷ் கொண்டு துலக்க வேண்டும். அடுப்புக்கரி, சாம்பல், செங்கற்பொடி போன்றவற்றைக் கண்டிப்பாகப் பயன் படுத்தக் கூடாது. பேஸ்டைக் கூட பிரஷ் முழுவதும் (விளம்பரங்களில் காண்பிப்பது போல்) வைத்துத் துலக்க வேண்டிய அவசியம் இல்லை. மிகவும் குறைவான அளவே பயன்படுத்தலாம். பல் ஒன்றும் பாசி படிந்த பாறை அல்ல. எனவே சாஃப்ட் பிரஷ்களைப் பயன்படுத்தினாலே போதும்.

பொதுவாக எதைச் சாப்பிட்டாலும் உடனே தண்ணீரால் வாய் கொப்பளிக்க வேண்டும். இப்படி செய்வதால் பல் இடுக்கிற்குள் புகுந்து கொண்ட உணவுத் துணுக்குகள் தங்கி, நோயையும் வாய் நாற்றத்தையும் உண்டு பண்ண வழி இல்லை. வாய் கொப்பளிக்க முடியாத இடங்களில் தண்ணீரைத் துப்பாமல் அப்படியே முழுங்கி விடலாம். மௌத் வாஷ் பயன் படுத்தத் தேவையில்லை. தண்ணீரே போதுமானது.

பெரும்பாலானவர்களுக்கு சாக்லேட் என்றால் கொள்ளைப் பிரியம். சாக்லேட்டை நீண்ட நேரம் வாயிலேயே வைத்துக் கரைத்தால் பல்லுக்குக் கெடுதல். சாக்லேட்டே சாப்பிடக் கூடாது என்பதில்லை. தினமும் சாப்பிடுவதைத் தவிர்த்து, அப்படியே சாப்பிட்டாலும் உடனே வாயைச் சுத்தம் செய்து விட வேண்டும்.

'சூயிங்கம்' மெல்வது தாடைக்கு நல்லது என்று விளம்பரப்படுத்தப்படுகிறது. எதுவுமே அளவுக்கு மிஞ்சினால் கெடுதல் தான். தொடர்ந்து சூயிங்கம் மென்றால் தாடையும் பற்களும் சோர்ந்து விடுகின்றன.

பல்லுக்கு ரொம்ப சூடான பொருளும் சரி, குளிர்ந்த பொருளும் சரி கெடுதியே! அதே போல குளிர்பானங்கள் அதிகமாகப் பருகுவதும் கூட நல்லதல்ல. அதில் கலந்துள்ள கார்பன் டை ஆக்ஸைடுக்கு பற்களை அரிக்கும் தன்மை உண்டு.

எல்லோருக்கும் வெள்ளை வெளேரென்ற பற்கள் மீது ஆசை உண்டு. உண்மையில் ஆரோக்கியமான பற்கள் வெள்ளையாக இருக்காது. சற்று மஞ்சள் கலந்த வெண்மையாகவே இருக்கும். எல்லோருக்கும் ஒரே மாதிரி நிறத்தில் பற்கள் இருக்காது.

பற்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள பால், பழங்கள், கீரைகள், நார்ச் சத்துள்ள காய்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பல்லைச் சரியாகச் சுத்தம் செய்யாவிட்டால் அழுக்குச் சேர்ந்து காரையாக மாறி விடும். இந்தக் காரை மெதுவாகப் பற்களின் அடிப்பகுதியை அரிக்கத் தொடங்கி, விரைவில் விழச் செய்துவிடக் கூடியது.

பதின்மூன்று வயது வரை சிறுவர்களுக்கு உமிழ்நீர் அதிகம் சுரப்பதால் வாய் தானாகவே சுத்தம் செய்து கொள்ளும். பதின்மூன்று வயதுக்குப் பிறகு வருடம் ஒருமுறை பல் டாக்டரைச் சந்தித்துச் சுத்தம் செய்து கொள்ளலாம்.

விரல் சூப்பும் பழக்கம், வாய் மூலம் சுவாசிக்கும் பழக்கம் ஆகியவற்றால் பற்கள் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும். இவற்றைத் தவிர்த்தால் நல்லது.

ஆரோக்கியமான உணவு, சுத்தம் இருந்தாலே பல்லுக்குப் பாதுகாப்பு. சிறிய வயதிலிருந்தே இந்தப் பழக்கத்தை மேற்கொண்டால் நோயற்ற வாழ்வு வாழலாம்!

அட்டையில் :
**ப்ரியா, டாக்டர் கே. ரேணுகா**
வண்ணப்படம் : ஸ்ரீஹரி

• பயஸ் - பூபதி



# பெருமை சேர்த்த ஜோடி!

ஒலிம்பிக்ஸிலும், கிரிக்கெட்டிலும் நம் நாட்டின் நிலை குறித்து கவலையடைந்தவர்களுக்குச் சந்தோஷத்தை அளித்துள்ளனர் லியாண்டர் பயஸ் - மகேஷ் பூபதி.

ஜப்பான் ஓபன் டென்னிஸ் போட்டிகளில் இரட்டையர் பிரிவில் பயஸ் - பூபதி ஜோடி முதல் முறையாகப் பட்டம் வென்றுள்ளது.

14 ஆண்டுகளுக்கு முன்பு 1986 ஆம்ஆண்டு ரமேஷ் கிருஷ்ணன் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்றார். அதற்குப் பின் இப்போதுதான் நம் நாட்டிற்குப் பட்டம் கிடைத்துள்ளது.

1999ஆம் ஆண்டு நடைபெற்ற பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன் சாம்பியன் பட்டங்களை வென்றது இந்த ஜோடி. இது தவிர கடந்த ஆண்டு 4 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களில் இறுதி வரைக்கும் முன்னேறினார்கள் இந்த இரட்டையர்.

மகேஷ் பூபதி 1997 ஆம் ஆண்டு ஜப்பான் வீராங்கனையுடன் இணைந்து கலப்பு இரட்டையர் பட்டத்தை வென்றார். கடந்த ஆண்டும் கலப்பு இரட்டையர் பட்டத்தை பூபதி வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜப்பான் ஓபன் பட்டத்தை வென்ற பூபதி - பயஸுக்கு 4 கோடியே 46 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் பரிசாகக் கிடைத்திருக்கிறது!

கென்ய தலைநகர் நைரோபியில் நடந்த நாக்அவுட் கிரிக்கெட் போட்டிகளில் உலகச் சாம்பியன், தென்னாப்பிரிக்கா போன்ற வலுவான அணிகளை வெற்றி கொண்டது இந்தியா. இறுதிப் போட்டியில் நியூஸிலாந்திடம் தோல்வியடைந்து கோப்பையை நழுவ விட்டது.

அதற்குப் பிறகு ஷார்ஜாவில் இந்தியா, இலங்கை, ஜிம்பாப்வே அணிகளுக்கிடையே கிரிக்கெட் போட்டிகள் நடந்தன. இதில் ஜிம்பாப்வே அணியுடன் போராடி, இறுதிப் போட்டிக்கு இலங்கையுடன் விளையாட வந்தது இந்திய அணி.

இறுதிப் போட்டியில் முதலில் பேட்

**விளையாட்டு அரங்கம்**



* ஜெயசூர்யா



* முரளிதரன்



* சமிந்தாவாஸ்

செய்தது இலங்கை அணி. கேப்டன் ஜெயசூர்யா மிகவும் அபாரமாக விளையாடி 189 ரன்களைக் குவித்தார். இவர் சந்தித்த பந்துகள் 161. அணியின் மற்ற வீரர்களும் சிறப்பாக விளையாடி 50 ஓவர்களில் 299 ரன்களைக் குவித்தனர். 5 விக்கெட்டுகளை மட்டும் இழந்திருந்தது இலங்கை அணி.

அடுத்து 300 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கியது இந்திய அணி. மூன்றாவது பந்திலேயே ஆட்டம் இழந்தார் கேப்டன் சௌரவ் கங்குலி. அதைத் தொடர்ந்து வந்த வீரர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். ராபின் சிங் மட்டும் அதிகபட்சமாக 11 ரன்களை எடுத்தார். 54 ரன்களை இந்திய அணி எடுத்தபோது அனைத்து விக்கெட்டுகளும் வீழ்த்தப்பட்டு விட்டன. இந்தப் போட்டியில் சமிந்தாவாஸ் அபாரமாகப் பந்து வீசி 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். முத்தையா முரளிதரனும் தன் பங்கிற்கு 3 விக்கெட்டுகள் எடுத்தார்.

ஷார்ஜா போட்டிகளிலேயே மிகவும் குறைந்த ரன்கள் எடுத்திருப்பது இதுவே முதல் முறை. இதற்கு முன் இந்தியாவின் மிகக் குறைந்த ஸ்கோர் 1981 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாடி 63 ரன்கள் எடுத்திருந்ததே!

சனத் ஜெயசூர்யாவுக்கு 189 ரன்களைக் குவித்ததற்காக 'ஆட்ட நாயகன்' பட்டம் வழங்கப்பட்டது. மேலும் இந்தப் போட்டிகளில் எல்லாம் சிறப்பாக ஆடியதற்காக 'தொடர் நாயகன்' பட்டமும் இவருக்கே கொடுக்கப்பட்டது.


சென்ற உலக கிரிக்கெட் போட்டியில் மிகவும் சரிந்திருந்த இலங்கை அணி தற்போது சரிசெய்து கொண்டு திறமையாக ஆடி வருகிறது.

"இந்தப் போட்டியை நான் மறக்க வேண்டும்" என்று குறிப்பிட்ட கங்குலி இதை மறக்காமல் அடுத்து வரும் போட்டிகளில் சிறப்பாக அணியை வழிநடத்தி வெற்றி பெற வேண்டும்!


**Edited , printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.**
**Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621**
**Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-**
**Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-**

# பிருந்தாவனம்

புள்ளிகளை இணைத்தால் உருவம் கிடைக்கும்!



மறைந்திருக்கும் பொருட்களைக் கண்டுபிடியுங்கள்!



விடை : 1. குடை 2. பூட்டு 3. பென்சில் 4. கிரிக்கெட் மட்டை 5. கிரிக்கெட் பந்து 6. மெழுகுவர்த்தி 7. வாளி 8. பேனா




விடை 1. வாழைத்தார் தலைகிழாக உள்ளது. 2. வாழையின் வேர் 3. வாழை மரத்தில் ஏற முடியாது.




– சாயம் வெ.ராஜாராமன்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2000'
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

# மழலைகள் ஆவோம்! அனைவருமே!



Food from Outside are not allowed

உங்கள் குடும்பத்தோடு அதிசயம் தீம்பார்க் வாருங்கள்.
குழந்தைகளோடு குழந்தையாய்
ஆரவார நீரலைகளில் நீந்தி மகிழுங்கள்.
நாள் முழுவதையும் ஆனந்தமாய்
அனுபவியுங்கள்!




Just 12kms from Madurai City




*Queen of Indian Theme Parks*

**Madurai-Dindigul Road, Paravai, Madurai.** Ph : 863848-51(4-

**Entrance Ticket**
Adult - Rs.200/-
Child - Rs.150/-

**Park Timing**
10.00am to 6.30pm

SASI/MDU/2K

# MORE WATER... MORE FUN.